கல்கி



KALKI 17-1-82 ரூ.1.20

பொங்கல்-கிரிக்கெட் சிறப்பிதழ்



அன்பளிப்பு!

வெள்ளிக் குத்து விளக்கு

ஒவ்வொரு ரூ. 5000/- டெபாசிட்டுக்கும்



தங்கள் முதலீட்டிற்கு
இதோ ஒரு பொன்னான வாய்ப்பு...
"சுபிட்சத்திற்கு வழிகாட்டி சுமங்கலி"
பெறுவீர் ரூ.10,000/-
48 மாதங்களில்
"சுமங்கலி டெபாசிட் திட்டத்தில்"
தங்கள் முதலீடு ரூ. 5000/-
இரட்டிப்பாகிறது



கவர்ச்சிகரமான மாதாந்திர வட்டி வழங்கும்
விகிதங்களில் பிக்சட் டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

ஒரு வருடம்	இரண்டு வருடங்கள்	மூன்று வருடங்கள்
16%	17%	18%

ஜெயசக்தி பைனான்சியர்ஸ்


39, நடேச ஐயர் தெரு (2வது மாடி)
(சிவா-விஷ்ணு கோவில் அருகில்)
உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை-600 017.
போன் : 447186.

125-A, பாம்பாட்டி தெரு, தஞ்சாவூர். போன் : 1626
14-A, ஆணைக்கட்டி தெரு, திருவண்ணாமலை-606 601. போன் : 483
24/1-A, மார்கோசா ரோடு, மல்லேஸ்வரம், பெங்களூர்-560 003
போன் : 24795
9-A, தம்பிமாரி தெரு, பட்டுக்கோட்டை.



C. A. BALOO
Managing Partner

அன்புடன் கொஞ்சம் வம்பு...







✖ 'மேஜர்' ✖ டி. எஸ். சேஷாத்திரி

● 'முரசொலி'யில் உடன் பிறப்புக்களுக்கு எழுதும் ஒவ்வொரு கடிதத்துக்காகவும் கலைஞருக்கு இருநூறு ரூபாய் சன்மானம் வழங்கப்படுகிறதாமே! சஸ் இட்?

● காங்கிரஸ் (இ) காங்கிரஸ் (எஸ்.) போல அமரர் டி. எஸ். சேஷாத்திரியின் நாடகக் குழு 'சாந்தி நிகேதனும்' இன்னும் கொஞ்ச நாளில் பிளவுபட்டுவிடுமாம்! குழுவின் நடிகர்களில் சிலர் பிரிந்து போய்த் தனியாய் நாடகக் குழு ஆரம்பிக்கலாமா என யோசித்துக்கொண்டிருக்கிறார்களாம்.

● அ. தி. மு. க. அமைச்சர் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்து 'டாக்டர் காளிமுத்து' ஆகி இருக்கிறார் அல்லவா? இனிமேல் அவர் போகுமிடங்களிலெல்லாம் அவரைக் காண நிறைய 'வாலிப வயோதிக அன்பர்கள்' வருவார்களோ?

● வெள்ளி விழாக் கொண்டாட இருக்கும் சென்னையில் உள்ள பிரபல பள்ளிக்கூடத்தில், ஒரு பெரிய ஆடிட்டோரியம் அது. இது என 30 லட்ச ரூபாய் செலவுக்கு ஏகப்பட்ட திட்டங்களாம். எல்லாச் செலவையும் ஸ்டார் நைட், டிராமா, லக்கி டிப் என்று வகை வகையாய்ப் பெற்றுர்கள் தலையில்தான் கட்டப்போகிறார்கள் எனத் தெரியவருகிறது.

● நடைபெற இருக்கும்(?) பஞ்சாயத்துத் தேர்தலில் ஒருசில ஊர்களில் அவ்வூர் இளைஞர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து எந்த அரசியல் கட்சியையும் சாராமல், எல்லா வார்டுகளிலும் இளைஞர்களை நிறுத்தத் திட்டமிட்டிருக்கிறார்களாம். 'கடந்த முப்பது வருடங்களாகக் கட்சி பேரால் வந்த பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டுகள் என்ன சாதித்து விட்டார்கள் நம் ஊரில்? இளைஞர்கள் நிற்கிறோம். கட்சி சாயம் இல்லாமல் ஊருக்குப் பாடுபடுகிறோம்' எனப் பிரசாரம் செய்கிறார்கள். உதாரணத்துக்கு ஒரு ஊர்—அரகண்டநல்லூர், தெ. ஆ. மாவட்டம் எஸ். வட்டமேஜை எழுத்தாளர் கே. பிரதாப் சிங் ஊரேதான்.

● மேஜர், 'கல் தூணு'க்குப் பின், 'ஜூலியஸ் சீசர்' என்று ஒரு நாடகம் போட்டார். சரியாகப் போணியாகாது போனதும், நாடக உலகத்தையே மறந்து விட்டாராம். அவர் சினிமாவில் பிஸியாக இருந்தாலும் இப்படிச் செய்கிறாரே என அவரது குழுவினருக்கு ஏக வருத்தமாம். இந்தப் 'புகுந்த வீடு' சொகுசில் தாய் வீட்டை மறந்தோர் பட்டியலில், வி.க., மௌலிகூட உண்டாம். —ஜூலி

சல்லடை கிழிப்பான்!

பஞ்சாபிலுள்ள ஒரு வகுப்பினரிடையே மணமகள் வீட்டுக்கு மணமகன் போகும் போது வாசலில் ஒரு சல்லடையைக் கட்டித் தொங்க விடுகிறார்கள். சல்லடையில் துளைகள் இருக்கும் அளவுக்குப் பெண்ணிடம் குறை இருந்தாலும் அதனைக் குணமாகக் கொள்ளவேண்டும் என்பது இதன் பொருள். குறைகளைத் தள்ளிப் பெண்ணை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாகச் சல்லடையை மணமகன் ஒரு இரும்பு ஆயுதத்தால் கிழிப்பான்.

- அரக்கோணம் சங்கரபாண்டியன்

தலைவர்களின் டெஸ்ட் வர்ணனை...

திருமுருக கிருபானந்த வாரியார்

மெய்யன்பர்களே, கிரிக்கெட் ஆட்ட அறிஞர் பெருமக்கள் இலட்சக் கணக்காகக் கூடியிருக்கிற இந்த மண்டபத்தில் அடியேனையும் அனுப்பிவைத்து இங்கே நடக்கிற விளையாட்டுப் போராட்டத்தைப் பற்றி விளக்கிச் சொற்பொழிவாற்ற, பிறவிப் பயனுற்ற கட்டளை அனுப்பிய எம்பெருமான் கந்த பெருமானுக்கு உயிருள்ளளவும் கடமைப் பட்டிருக்கிறேன்.

படைத் தலைவர்கள் எதிரெதிரே. நடுவர் அவர்களெதிரே காசை எடுத்துச் சுண்டிப் போடுகிறார். காசு — காசேதான் கடவுள். அவன் தீர்ப்புக்கு மறுப்பு ஏது? பூவா, தலையா? தலைக்குப் பூவும் வேண்டும்: பூவுக்குத் தலையும் வேண்டும். தலைதான் விழுகிறது. ஆண்டவன் ஆறுதலை கொண்டவனல்லவா, நமது அணித் தலைவர் கவாஸ்கர் தலையைக் கேட்டிருந்தார். தலையிருந்தால் பூ வாங்கி வைத்துக் கொள்ளலாம் என்பது நமது தாய்மார்களுக்குத் தெரியும். எடுத்த எடுப்பிலேயே வெற்றி,

கவாஸ்கர் பெருமகனார் உடனே மட்டையடிக்கக் கேட்கிறார். களம் தயாராகிறது.

கந்தா, கடம்பா, நமசிவாயா, எங்க பார்த்தாலும் சப்தமப்பா! உன் திருவிளையாடல் ஓங்காரமாய் ஆரம்பிக்கிறது. கிரிக்கெட் பக்தர்களின் பரவசத்தில் என் மெய் சிலிர்க்கிறது.

ஆறடி உயரத்தில் ஒருவர் — அண்டர்வுட். பெயர்தான் அப்படி. ஆனால் அவர் அப்பர் உட்டாக கையில் வில்வப் பழம் போல் புத்தம் புதிய பந்தைச் சுழற்றி வீசப் பிடித்துக் கொண்டு வருகிறார்.....



குமரி அனந்தன்

அடடா, பேச ஆரம்பிப்பதற்குள் என்னென்று சொல்வேன்! பாரத அணியைச் சேர்ந்த மதன் லால் மட்டையை நோக்கி வீசப்பட்ட பந்து. அடிக்கிறார். ஆஹா என்று விண்ணிலே பறந்து கீழே விழுகிறது. அதைக் கீழே விழ விடாமல் கேச் பிடித்து விட்டார். பிடித்தவர் யார் தெரியுமா கூச். பேரே கூச் அல்லவா பிடித்துவிட்டார் கேச். சாய்ந்தது மேலும் ஒரு விக்கெட்....

ஐந்து விக்கெட் இழப்பிலும் கூட இந்திய அணித் தலைவர் கவாஸ்கர் ஆட்டம் இழக்காது அமைதியாக இருப்பது நமக்குக் கிடைத்த நல்லமை. காமராஜ் நல்லமையைப் போல இருக்கிறதென்று சொல்வது தவறாகி விடாது.

அடுத்து கபில்தேவ் வரப்போகிறார். கவாஸ்கர் கபில்தேவ் கூட்டணி, பலநூறு ரன்களைக் குவிக்கிற வெற்றிக் கூட்டணி.

வாழ்க கவாஸ்கர்—கபில்தேவ் கூட்டணி. வாழ்க காமராஜ். வந்தே மாதரம்!

ம. பொ. சி,

பெரியோர்களே, தாய்மார்களே இன்று என் உடலநலம் சரியில்லை யென்றாலும் இந்த தேசத்தின் நெடிய வரலாற்றில் நம்மை அடிமைகளாக வைத்திருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினர் இன்று சுதந்திர இந்தியாவில் நல்லெண்ண விளையாட்டுப் போட்டிக் குழுவாய் வந்து தத்தம் வலிமையைக் காட்டுகிற போட்டியைக் கண்குளிரப் பார்க்கிற பாக்கியத்தை நழுவ விட்டு விடக் கூடாது என்றே வந்தேன்.

பாண்டியன் நெடுஞ்செழியன் அரசவையில் 'என் கணவன் கள்வனோ' என்று பத்தினித் தெய்வமாம் கண்ணகி கோபத்தோடு தன் வசமிருந்த ஒற்றைச் சிலம்பை மைய மண்டபத்தில் வீசிச் சிதறியதுபோல் நமது இளைஞர் பந்து வீச, மட்டை பிடித்தவர் அடிக்க, அந்தப் பந்து யார் கையில் விழுமோ என நாலா பக்கமும் நமது அணியினர் அலைந்த போதும் மண்ணிலே விழுந்தது. ஒரே ஆரவாரம்.

கலைகளிலும் விளையாட்டுக்களிலும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட புரட்சித் தலைவரின் ஆட்சியின்போது இந்த விளையாட்டு நடப்பதாலே சென்னை நகரமே விழாக் கோலம் பூண்டிருக்கிறது என்றால் அது தமிழன்னை செய்த தவப்பயன் என்றுதான் சொல்ல வேண்டும்.

கலைஞர் மு. கருணாநிதி

எனது அன்பு உடன் பிறப்புக்களே! தமிழ் நாட்டின் தலைநகரமாம் சென்னைமாநகரில் பேரறிஞர் அண்ணா துயில் கொண்டிருக்கிற நினைவாலயத்துக்கருகே அமைந்துள்ள இந்த மாபெரும் விளையாட்டரங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் வெள்ளம் ஆவலோடும் ஆர்வத்தோடும் அலை அலையாய்க் குழுமியிருக்கிறார்கள்.

முதல் கட்ட ஆட்டம் முடிந்து இரண்டாவது கட்டமான இன்னிங்ஸில் கொளுத்தும்



வெய்யில் என்றுகூடப் பாராமல் நமது இந்திய அணியின் கண்மணிகள், கடமை தவறு கட்டிளங் காளையர்கள் போராடிக் கொண்டிருக்கிற விளையாட்டுத் திறனைக் கண்டு உங்களைப் போல நானும் ரசித்துப் போய்ப் பிரமித்து நிற்கிறேன்.

தாற்காலிகமாக எதிர் அணியினருக்குக் கொண்டாட்டமாக இருக்கலாம். ஆனால் அந்த அணியிலேயே பிளவு. நாம் வீர மறவர்கள். போட்டியைக் களத்திலே சந்திப்பவர்கள். நமது வேங்கை நிகர் இளைஞர் கூட்டம் அணித் தலைவரின் கட்டளைக்காகக் காத்துக் கிடக்கிறது. ஒரு களம் இல்லையென்றால் இன்னொரு களம். அணி அணியாக நமது இளஞ் சிங்கங்கள் இடி மின்னலாய்ச் செயல்பட ஆரம்பித்தால்... 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்ற புரட்சிக் கவிஞரின் பாடல்தான் நினைவுக்கு வருகிறது.

முதலமைச்சர் எம். ஜி. ஆர்.

விளையாட்டைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருக்கும் ரசிகப் பெருமக்களே! தாய்க்குலமே என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்களே!

ஐந்து நாட்களாகத் தொடர்ந்து நடந்த இந்த மாபெரும் விளையாட்டு விழாவிற்கு இன்று முடிவு நாள்.

ஒரு குறிப்பிட்ட நபர்கள் பேச வாய்ப்புக் கிடைத்தது என்பதற்காக ஆட்டத்தை வருணனை செய்வதை விட்டுவிட்டுத் தங்கள் புலமையை வேறு திருப்பங்களில் செலுத்துவதைப் புரிந்து கொள்ளாமலில்லை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புவதால் நான் இங்கே வருணனை செய்வதை விட்டுவிட்டுப் பொதுவாகப் பேசுவதைக் கடமையாக நினைத்து இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வேனே தவிர இந்த மேடையை அவர்களுக்குப் பதில் தருவதற்குப் பயன்படுத்துகிற இழிசெயலைச் செய்ய மாட்டேன் என்பதையும், மக்கள் ஆதரவு இருக்கும் வரை ஆட்ட அணியினருக்கு ஆற்றல் இருக்கும்வரை அச்சப்பட வேண்டிய அவசியமில்லை என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி விட்டார்கள்.

இன்றும்கூட—நமது கிராமங்கள் தோறும் பெரியோரும் குழந்தைகளும் ஆடிமகிழ்கிற கிள்ளிப்புல்-தாண்டு இருப்பதையும் அதன் அடிப்படையில் வளர்ந்துவிட்ட விளையாட்டே இந்தக் கிரிக்கெட் விளையாட்டு என்பதையும் எடுத்துக் கூறி, மேல்மட்டத்தில் உள்ளோர் ஆடி, கண்டு மகிழ்கிற கிரிக்கெட்டை ஊக்குவிக்கிற நேரத்தில் கிள்ளிப்புல் ஆட்டத்தையும் வளர்க்க அரசு சார்பில் மானியம் வழங்குவது குறித்து விரைவில் அறிவிப்பேன் என்பதோடு கிள்ளிப்புல் ஆடுகிற பாமர மக்களின் ஆதரவு இருக்கிறவரை எந்த விளையாட்டிலும் எங்களை இறக்கிவிட முடியாது என்று கூறி விடைபெறுகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! -விசிட்டர் அனந்த்



எவ்வளவு தெரியும்? கிரிக்கெட்டைப் பற்றி!

1. மிக அதிகமான எண்ணிக்கையில் ஒரு இன்னிங்ஸில் ரன்களைக் குவித்த சாதனை யாருடையது? (டெஸ்ட் பந்தயங்களில்?)
(அ) மன்காட் (ஆ) சோபர்ஸ் (இ) பிராட்மன் (ஈ) பாபி ஸிம்ஸன்.
2. ஒரு இன்னிங்ஸில் எத்தனை ஓவர்கள் ஆனதும் புதிய பந்து விளையாட எடுத்துக்கொள்ளப்படுகிறது?
(அ) 80 (ஆ) 60 (இ) 75 (ஈ) 90.
3. இரண்டு விக்கெட்டுகளுக்கு இடையே உள்ள தூரம் எவ்வளவு?
(அ) 50 அடி (ஆ) 70 அடி (இ) 90 அடி (ஈ) 66 அடி.
4. பாலோ ஆன் கொடுக்க, முதலில் ஆடும் குழு, அடுத்த குழுவை விட எவ்வளவு ரன்கள் கூடுதலாய் எடுத்திருக்க வேண்டும்?
(அ) 200 ரன்கள் (ஆ) 350 ரன்கள் (இ) 150 ரன்கள் (ஈ) 400 ரன்கள்.
5. கிரிக்கெட் பந்தின் சுற்றளவு எவ்வளவு?
(அ) 10 அங். (ஆ) 7 அங். (இ) 9 அங். (ஈ) 11 அங்.
6. பிட்சின் அகலம் எவ்வளவு?
(அ) 6 அடி (ஆ) 5 அடி (இ) 3 அடி (ஈ) 4 அடி.
7. ஒரு ஆட்டக்காரர் ஆட்டமிழந்தவுடன் அடுத்தவர் எத்தனை நிமிடங்களுக்குள் பிட்சில் இருந்தாக வேண்டும்?
(அ) மூன்று (ஆ) நான்கு (இ) இரண்டு (ஈ) ஐந்து.
8. கிரிக்கெட் மட்டையின் அதிகபட்ச அகலம் எவ்வளவு இருக்க வேண்டும்?
(அ) மூன்று அங்குலம் (ஆ) நாலேகால் அங்குலம் (இ) 5 அங்குலம் (ஈ) ஐந்தரை அங்குலம்.
9. ஒரு டெஸ்ட் பந்தயத்தில் மிக அதிகமான ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது இங்கிலாந்து. எவ்வளவு ரன்கள் வித்தியாசம்?
(அ) ஒரு இன்னிங்ஸ் 317 ரன்கள் (ஆ) ஒரு இன்னிங்ஸ் 579 ரன்கள் (இ) ஒரு இன்னிங்ஸ் 127 ரன்கள் (ஈ) 530 ரன்கள்.
10 ஒரு பாட்ஸ்மேன் எத்தனை வழிகளில் ஆட்டமிழக்க வாய்ப்பு உள்ளது?
(அ) ஒன்பது (ஆ) ஐந்து (இ) நான்கு (ஈ) பதினொன்று.


•விடை 20ம் பக்கம்•

பாரத்


கிரிக்கெட் விளையாட்டில் "அவுட்" ஆகாமல் இயங்கும் ஒரே டிவி




டிவி மொழியில் சாலிட் ஸ்டேட்
என்பதற்கு என்ன பொருள் தெரியுமா?
குறைபாடற்ற, உயர்ந்த சாலிட் ஸ்டேட்
நுட்பமுடையது என்பதே.
இதனோடு இரண்டு வைட்-பிலோன் ஸ்பீக்கர்கள்
தானே சரிசெய்துகொள்ளும் ஆட்டோமாடிக்
பிக்சர் கண்ட்ரோல்.
ஒலிப்பதிவு செய்யவும், பதிவானதைக் கேட்கவும்
தேவையான அமைப்புகளும் இணைந்துள்ளன.
இவையனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது
அழகிய, கண்கவரும் பிரத்யேக வெனீயேட் காபினட்.
பாரத் பல மாடல்களிலும் வருகிறது-ஊர்வசி,
BT 888, BT 202, BT 101
மாடல் எதுவாயினும் பாரத் வழங்கும் ஒளியும், ஒலியும் மாறாத
சிறப்புடையது. மேலும், பிக்சர்டியூப் உட்பட ஒவ்வொரு 'செட்'டிற்கும்
உத்திரவாதம் தருகிறது. வாரத்தின் 7 நாட்களிலும்
பாரத் சர்வீஸ் இன்ஜினியர்கள் உங்களுக்கு சேவை புரிய காத்திருக்கின்றனர்.




BT 202



BT 101



BT 888





BTL/1001 A/Tam


பாரத் டிவி

எந்த டெஸ்டிலும் வெற்றியே பெறுகிறது.

பாரத் டெலிவிஷன் லிமிடெட்
சென்னை-600 034.
தொலைபேசி எண்: 86527


வேலை நிறுத்தத் தடைச் சட்டம்
மக்கள்
தடைச் சட்டத்தை வாபஸ் பெறக் கோரி


உலகக் கோப்பைக்கு இந்திய ஹாக்கி குழு போட்டி
ஹாலந்திடம் தோல்வி!
ஆஸ்திரேலியாவிடம் தோல்வி!


நாங்க என்ன பண்ணுவோம்பா! எங்க பேர்ல ஒண்ணும் தப்புல்லே! பஞ்சாயத்து தேர்தலுக்கு கோர்ட் தாற்காலிக தடை போட்டுடுச்சு!

"சதா குறை கூறிக்கொண்டே இருப்பதுதான் காரியமா? நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு தலையங்கம் எழுதக் கூடாதா?" — நேயர் கேள்வி.

"ஏன் கூடாது! இதோ எழுதுகிறேன்" — ஆசிரியர் பதில்!

ஒளிமயமான எதிர்காலம்!

❊ இந்தியாவில் தயாராகி அயல்நாடுகளுக்கு அனுப்பப்பட்ட பாண்டேஜ் துணிகளில் டெடனஸ் உட்பட சகலவிதமான நோய்க் கிருமிகளும் இருப்பதாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து காந்திஜி போதித்த அஹிம்சா மார்க்கம் பாரதத்தில் தழைப்பது உறுதியாகியிருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத கிருமிகளைக் கூட அழிக்க நமது மருத்துவப் பண்டங்கள் தயாரிப்பாளருக்கு மனமில்லை என்பதைப் பார்க்க அஹிம்சாவாதிகள் பெருமிதமும் நம்பிக்கையும் கொள்ளலாம்!

❊ இ. காங்கிரஸின் இளைஞர் பிரிவு பங்களூர் மாநாட்டில் கலந்துகொண்டு பிறகு ஊர் திரும்புகையில் அவர்களது விசேஷ ரயில் நாகபுரியில் நிற்க, அவர்கள் ஸ்டேஷனைவிட்டு வெளியேறிப் பழக்கடைகளையும், உணவுக் கடைகளையும் சூறையாடினர். ஆகா! எவ்வளவு நம்பிக்கை தரும் செய்தி! இ. காங்கிரஸ் ஆட்சியே இங்கு நீடித்தால் விலைவாசி உயர்வைப்பற்றி யாருமே கவலைப்பட வேண்டாம்! அவரவரும் கண் கண்டதைக் கண்ட இடத்திலேயே சூறையாடிச் செல்லலாம்!

❊ மத்திய அரசு அலுவலகங்களில் 43 லட்சம் ஃபைல்கள் இன்னும் ஃபைசல் ஆகாமல் குவிந்துகிடக்கின்றன என்ற தகவலை உள்துறை துணைஅமைச்சர் வேங்கடசுப்பையா ராஜ்ய சபையில் தெரிவித்திருக்கிறார். இதைப் படித்ததும் கோப்புத் தயாரிப்பாளர்கள், சிவப்பு நாடா உற்பத்தியாளர்கள், காகித ஆலை முதலாளிகள், பூச்சி மருந்து தயாரிப்பாளர்கள் போன்ற எத்தனை பேருக்கு ஒளிமயமான எதிர்காலம் பற்றிய நம்பிக்கை பிறந்திருக்கும்!

❊ எஸ். எஸ். எல். ஸி. மட்டுமே எழுதித் தேறிய ராஜ்மோகனுக்குக் கேரளத்தில் எம். பி. பி. எஸ். சேர அனுமதி கிடைத்திருக்கிறது என்பதை அறிந்ததிலிருந்து கிண்டர் கார்டன் படிக்கும் குழந்தைகளுக்கெல்லாம் ஏகக் குஷி! அடுத்த ஆண்டு பொறி இயல் கல்லூரியில் சேர விண்ணப்பத் தாள்களை இப்போதே அக் குழந்தைகள் பூர்த்திசெய்ய ஆரம்பித்து விட்டன!

❊ இந்திராகாந்தி பிறந்தநாளை அஞ்சையா கேக் வெட்டிக் கொண்டாடிய தினத்திலிருந்து கேக் தயாரிப்பாளர்கள் ரொம்ப நம்பிக்கை அடைந்துள்ளனர். சஞ்சய்யின் மகன் பிறந்த தினத்தின் போது நாடெங்கும் இ. காங்கிரஸ் வட்டாரங்களில் கேக்குக்கு ஏகப்பட்ட டிமாண்ட் இருக்கும்; ஓராண்டின் லாபத்தை ஒரே நாளில் காணலாம் என்று பரம சந்தோஷத்தில் ஆழ்ந்திருக்கின்றனர்.

❊ அயல் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டுச் சரியான பாதுகாப்பின்றிப் புழுத்துப் போன கோதுமையை அரசின் உணவு வர்த்தக கார்ப்பரேஷன், வலுக்கட்டாயமாய் மாவு மில்கள் தலையில் கட்ட, அவை, கொஞ்சம் நல்ல கோதுமையுடன் ஏராளமான புழுத்தல் கோதுமையைக் கலந்து அரைத்து மாவாக்கி மக்கள் தலையில் கட்ட, டாக்டர்களுக்கு ஏக மகிழ்ச்சி. அடுத்த சில நாட்களில் தங்கள் வருவாய் இரட்டிப்பாகும் என்று நம்பிக்கையோடு உள்ளனர்.

❊ மத்தியப் பிரதேசம் சாகர் நாடாளுமன்றத் தொகுதியில் இ. காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஆதரவாக மாஜி கொள்ளையர் பிரசாரம் செய்தனர். இதை அறிந்ததிலிருந்து தேசமெங்கும் கொள்ளைக்காரர்கள், திருடர்கள், பிக்பாக்கெட் ஆசாமிகளுக்குக் கால் தரையில் பாவாத ஆனந்த பரவசம்! அடுத்து மாஜி கொள்ளைக்காரர்களும் திருடர்களும் தேர்தலுக்கு நிற்க, அவர்களுக்கு ஆதரவாக இ. காங்கிரஸ்காரர்கள் பிரசாரம் செய்யலாம் அல்லவா?

❊ மத்தியப் பிரதேச எம். எல். ஏ. விடுதிக்கு, மைனர் பெண்ணைக் கடத்திச் சென்று இ. காங்கிரஸ் எம். எல். ஏ. பலவந்தமாய்க் கற்பழித்தார் என்ற செய்தியைப் படித்ததிலிருந்து சினிமாப் படத்தயாரிப்பாளர்களின் நெஞ்சங்கள் நம்பிக்கையுடன் நிமிர்ந்திருக்கின்றன. "இனி ரேப் ஸீனை வெட்டி எறிய எந்த ஸென்ஸாருக்குத் தைரியம் வரும், பார்க்கலாம்!" என்று சவால் விடுவதுடன் புளு பிலிமுக்கும் பூஜை போட்டிருக்கிறார்கள்!



கல்கி



1982 ஜனவரி 17
துன்மதி தை 4
மலர்: 40 இதழ்: 25

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்



திருநாளாம்
பெருநாளாம்

இப்பொங்கல் புதுநாளில்
மக்கள் யாவரும் நலம் பெருகி
நல்வாழ்வு பெற்றிட
எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!


டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆஃப் இந்தியா லிமிடெட்

சென்னை : 600 001

சைக்கிள்கள், சைக்கிள் சீட்கள், செயின்கள், டைனமோ
லாம்ப் செட்டுகள், எஃகு குழாய்கள், மெட்டல்
செக்ஷன்கள் மற்றும் "Z" பர்லின்கள் தயாரிப்பாளர்கள்.



Imageads M.T.I. 1511



ரவிகுல திலகன்

1

கீழ்த்திசை வானத்தில் ஞாயிறின் ஒளிக்கீற்றுக்கள் எட்டிப் பார்க்கத் தொடங்க, அரிசிலாற்றின் அமைதியும் கம்பீரமும் மிக்க நீர்ப் பரப்பின் கருநீல நிறத்தினூடே சில சிவப்புக் கோடுகள் தெரிய ஆரம்பித்தன. பழையாறையில் கரிய திட்டுக்களாகத் தோன்றிய மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் விளிம்புகளில் பொன்னிறம் பெற்றுப் பிரகாசிக்கத் தொடங்கின. சோழ மாளிகையும், அதையொட்டிய அரண்மனைகளும் நித்திரா தேவியின் ஆளுகையிலிருந்து இன்னும் விடுபடவில்லை. ஆயினும் அந்த வைகறைப் பொழுதில் படைவீடுகள் மட்டும் சுறுசுறுப் படைந்தன. இளம் மனைவி கணவனை இறுக அணைத்துக் குளிரை விரட்டி இதமாக இன்னும் சற்று நேரம் கண்ணயரப் பிடிவாதத்துடன் எண்ணுகிற அந்த வேளையிலே பல வீரர்கள் அந்தக் கரங்களை உறுதியோடு விலக்கிவிட்டுஎழுந்தார்கள். சீக்கிரமே பயிற்சிக் களம் நோக்கி நடக்கலானார்கள்.

நான்கு படைவீடுகளுக்குமாகச் சேர்ந்து அமைந்திருந்த பிரதான அரங்கு நோக்கியே அன்று வீரர்களில் பெரும்பாலோர் சென்றனர். இருள் முற்றிலும் பிரியாத அந்த நேரத்தில் முன்னதாகவே வந்து சேர்ந்த சிலருக்கு வேலை இருந்தது. சிலர் வாள்களையும் வேல்களையும் கழுவித் துடைத்துப் பயிற்சித் திடலின் ஒரு புறமாக இருந்த காளி தேவியின் சிலைமுன்பாக அடுக்கினார்கள். அவற்றை மலர்களால் அலங்கரித்து மணக்கும் சந்தன குங்குமப் பொட்டிட்டார்கள். வேறு சிலர் முரசங்களையும் கொம்புகளையும் துடைத்து மெருகேற்றித் திலகமிட்டு வைத்தார்கள். இதற்குள் நாலா திசைகளிலிருந்தும் பல வீரர்கள் அங்கு குழும ஆரம்பித்து விட்டனர். எல்லோரும் அன்று நடக்கப் போகிற மல் யுத்தப் போட்டி பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

''சீனத்திலிருந்து கடல் கடந்து வந்தவனும் ஒரு மல்லன்! தன்னை வெல்ல யாருண்டு என்று இறுமாப்புடன் கேட்டானும்! உயிரைப் பணயம் வைத்து யுத்தம் புரிபவனும்.''


''மகாராஜாவுக்குச் செய்தி எட்டியதா?''

''எட்டாமலென்ன? அரசவையிலேதானே அவன் அறைகூவல் விடுத்திருக்கிறான்! இளவரசரே அவனுடன் பொருதலாம் என்று சொல்கிறார்கள்!''

செம்பியன்

''அப்படியானால் இன்று போர்ப் பயிற்சி நீண்ட நேரம் நடக்காது; காலைப்போது ரொம்ப சுவாரஸ்யமாய்த்தான் கழியும் என்று சொல்லு!''

இவ்வாறு வீரர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே கொம்புகள் முழங்கி அடங்கின. காளி தேவிக்குப் பூஜைகள் நடந்தன. தீபாராதனை நடக்கிறபோதே முரசு கொட்ட ஆரம்பித்தது. தம், தம்... அதம் என்று முரசு கொட்டுகின்ற வேகத்துக்கு ஏற்ப



வீரர்கள் கால்களை முன்னும்பின்னும் நகர்த்தி வைத்தும், கைகளை நீட்டி மடக்கியும் பயிற்சிகள் செய்தார்கள். பிறகு வாட் போர், சிலம்பம், மல்யுத்தம் போன்றவற்றில் தனித் தனிக் குழுவினராய்ப் பயிற்சி பெற்றனர். அவர்களுடைய இயக்கங்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட தாள கதியில் முரசு ஒலிக்கு ஏற்ப இருந்தன. முரசின் வேகம் அதிகரிக்க இவர்கள் வாளை, அல்லது சிலம்பத்தைச் சுழற்றுகிற வேகமும் அதிகரித்தது. வேறு பகுதிகளில் குறிபார்த்து வேல் எறிதல், அம்பு எய்தல் போன்றவற்றிலும் இன்னும் பல போர்த் தந்திரங்களிலும் வீரர்கள் பயிற்சி பெற்றனர். முரசங்களின் ஒலி மட்டுமின்றி வீரர்களின் ஹுங்காரங்களும், 'வீர வேல் வெற்றிவேல்' என்று அவர்கள் தங்களைத் தாங்களே ஊக்குவித்துக் கொள்ளும் ஒலிகளும் சேர்ந்து எழுந்தபோதிலும் இவற்றுக்கும் மேலாக ஒரு வித்தியாசமான ஒலியை எதிர்பார்த்து அனைவரது செவிகளும் கூர்மை பெற்றுக் காத்திருந்தன.

காலைப் பொழுது நன்கு புலர்ந்து சூரியக் கிரணங்கள் சுள்ளென்று உடலில் உறைக்கத் தொடங்கின தருணத்தில், அந்த ஆரவாரம் — வீரர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த முழக்கங்கள் — கேட்டன. ஆயிரக்கணக்கான வீரர்களின் வாள்களும் வேல்களும்மோதும்ஓசையையும், அவர்கள் கண்டங்களிலிருந்து எழும் வீர ஒலிக் குறிப்புக்களையும் அடக்கிக் கொண்டு பேரொலியாக எக்காளங்களும் துந்துபிகளும் முழங்கின.

''ஆகா! மன்னர் வந்து விட்டார்!'' என்று ஏக காலத்தில் நூற்றுக் கணக்கான வீரர்கள் சொன்னார்கள். போர்ப் பயிற்சிகளை

நிறுத்திவிட்டு அரங்கத்தில் இடம் தேடி அமருமாறு ஆணை பிறந்தது.

அரங்கம் மிகப் பெரிதுதான் என்றாலும் நான்கு படை வீடுகளைச் சேர்ந்தவர்களும் இன்று அங்கே குழுமியிருந்ததால் நெருக்கடியாகத்தான் இருந்தது. ஒரு புறம் அரை வட்ட வடிவில் படிகள் உயர்ந்திருந்தன. அதற்கு நேர் எதிரே அரச குடும்பம் அமரப் பெரிய மேடை. மையத்தில் வீர விளையாட்டுக்களுக்கு விசாலமான இடம். கால தாமதமாக வந்திருந்த பலர் அரங்கில் அமர இடமில்லாமல் வெளியே ஏமாற்றத்துடன் நின்றனர். வேறு சிலர் திடலையொட்டியிருந்த மரங்களில் ஏறிக்கிளைகளில் இடம் பிடித்து அமர்ந்தனர். மரக் கிளைகள் முறியலாம் என்பதால் ஒரு சிலருக்கு மேல் ஏறத் தானைத் தலைவர்கள் அனுமதி மறுத்தனர். அரங்குக்கு வெளியே இருப்போருக்கு உள்ளே நடப்பனவற்றை அவ்வப்போது வர்ணிக்க ஏற்பாடுகள் நடந்தன.

கன்னங் கரேலென்று இருப்பினும் சூரிய ஒளியில் தகதகக்கும் செழுமையான மேனி கொண்ட உயர்ந்த புரவி மீது கம்பீரமாக ஆரோகணித்து இளவல் வந்து கொண்டிருப்பது புலனாயிற்று.

''இளவரசர் விஜயாலய சோழர் வாழ்க! ராஜகேசரி குமாராங்குச மகாராஜாவின் அருந்தவப் புதல்வர் வாழ்க! சோழ சக்கரவர்த்தி கரிகாலன் குலம் தழைக்க வந்த செம்பியன் வாழ்க! ரவிகுல திலகன் வாழ்க'' என்ற கோஷங்கள் விண்ணை அளாவின.

ராஜ குடும்பத்துக்கென்று ஏற்பட்ட பிரத்தியேக மேடை மீது படிகளின் வழியே ஏறி நின்று விஜயாலயன் கரங்களை உயர்த்தினான். உடனே பூரண அமைதி நிலவியது. இடிமுழக்கம் போன்ற குரலில் விஜயாலயன் பேசினான்:

''வீரர்களே! ஏழெட்டுத் தினங்களுக்கு முன்பாக அயல் தேசத்திலிருந்து வந்துள்ள ஒரு மல்லன் நமது மன்னர்பிரானைக் காண அனுமதி வேண்டினான். கடல் கடந்து சீலதேசத்திலிருந்து வந்துள்ள அவன் வடக்கே இராஷ்டிர கூடத்திலும், வேங்கி நாட்டிலும் பல்லவர்ராஜ்யத்திலும் அந்த மன்னர்கள் முன்



பாகத் தன் ஆற்றலைக் காட்டிப் பரிசில்கள் பெற்று வந்திருக்கிறான். தன்னை வெல்லச் சோழ நாட்டில் யாரேனும் உண்டா என்பது இவனது இப்போதைய அறைகூவல்! தன் உயிரையே பணயம் வைக்கிறான். இவனுடன் நானே போரிடலாம் என்று என் தந்தையின் ஆணையும் அனுமதியும் பெற்று வந்துள்ளேன்!'' இப்படிக் கூறி முடித்துச் சைகை காட்டவும் மேடையில் மறுபுறமிருந்த படிகளில் சீன மல்லன் ஏறி வந்தான்.

அவனைக் கண்டதும் ''ஆகா!'' என்று வாய் விட்டுக் கூறி வியந்தனர் வீரர்கள்: 'இவனென்ன கம்சனா, அல்லது கடோத்கஜனா? இவனை வெல்லக்கூடிய கண்ணன் அல்லது பீமன் நம்மில் யார்? இளவரசரைத் தவிர வேறு யாருக்கு இவனுடன் மோதத் துணிவு வரும்?' என்று விஜயாலயனின் வீரத்தையும் வியந்தனர்.

இதற்குள் மாறமரையன் என்று பெயர் கொண்ட மல்லன் மேடை ஏறி, ''இளவலே! 'இந்த அந்நியனுடன் போராடச் சோழ நாட்டில் யாருமே இல்லை; இளவரசர் தாமே முன்வர வேண்டியிருந்தது' என்ற அபகீர்த்தி வேண்டாம்! எனக்கு முதற்கண் அனுமதி வழங்குங்கள்!'' என்று பணிவோடு வேண்டினான்.

''அப்படியே ஆகட்டும்'' என்ற விஜயாலயனை இரு மல்லர்களும் நெருங்கி, கருத்தறிந்து வர தனது நீண்ட கரங்களால் இருபுறமும் இருவரையும் இலகுவாக அணைத்தவாறு மையத்தில் நின்று பேசலானான் விஜயாலயன்: ''இந்தச் சீனன் பற்றி ஒரு முக்கிய அறிவிப்பு! இவன் பிறவி ஊமை! தனது அறைகூவலைக்கூட ஓர் ஓலைச்சுவடியில் நமது மொழியில் பெயர்த்து எழுதி எடுத்து வந்திருக்கிறான். பிறவி ஊமையானபோதிலும் இவனது மற்ற புலன்கள் மிகக் கூர்மையாகச் செயல்படுகின்றன. இவனது பலமும் பராக்கிரமமும் மல்யுத்தத்திறனும் அளவிடற்கரியன. நமது மாறமரையன் மட்டுமென்ன சாமானிய மல்லனா? நூறு மல்யுத்தக் களங்களில் வெற்றி வாகை சூடியவனல்லவா!''

இருவரையும் போற்றி, வாழ்த்தி, இடலுக்கு அனுப்பி வைத்தான் விஜயாலயன். வீரர்களில் சிலர் சீனனையும் பலர் மாறமரையனையும் ஊக்குவித்துக் கூச்சலிட்டனர்.

களத்தில் இரு மல்லர்களும் ஒருவரையொருவர் நோட்டம் பார்த்துச் சற்று நேரம் வளைய வந்தனர். திடீரென்று இரு யானைகள் மதம் கொண்டு ஒன்றோடொன்று மோதிக் கொள்வது போல மோதிக் கட்டிப் புரண்டனர். ஒருவர் கரத்தை மற்றவர் முறுக்கவும் முறிக்கவும் முயன்றார்கள். கால்களால் இடுக்கிப் பிடி போட்டார்கள். ஒருவர் வயிற்றிலே இன்னொருவர் அமர்ந்து நெஞ்சைக் குத்தவும் கழுத்தை மரணப் பிடியில் சிக்க வைக்கவும் தருணம் பார்த்தார்கள். ஆனால் சீக்கிரமே சீனனின் ஆற்றல் மிகுதியானது என்பது புலனாயிற்று. மாறமரையனின் தலை சீனனின் கரங்களுக்கிடையில் வசமாகச் சிக்க, அதை முறுக்கத் தொடங்கினான். கழுத்து நெறியவே வேதனையில் துடித்தான் மாறமரையன். அவன் கால்கள் எழும்பி எழும்பி விழுந்து தரையை அதிரத் தாக்கின. இன்னும் சற்று தாமதித்தாலும் மாறமரையனின் உயிரைக் குடித்து விடுவான் சீனன் என்பது விஜயாலயனுக்குப் புரிந்தது. அவன் தன் வலக் கரத்தை உயர்த்திச் சைகை காட்ட நடுவர்களான வீரர்கள் சிலர் இரு மல்லர்களையும் விலக்கி விட்டனர்.

அரியணையிலிருந்து எழுந்த விஜயாலயன் படிகளில் இறங்கி அரங்கின் மையத்துக்கு வந்தான். சீனனைச் சினத்துடன் வெறித்து நோக்கியவாறே தனது பரந்த மார்பகத்தை மறைத்த பட்டாடைகளையும் இதர அணிமணிகளையும் கழற்றி நீட்ட அதனை மெய்க் காவலர்கள் பெற்றுக் கொண்டனர். இடைக் கச்சை இறுக்கி ஆடையை முழங்காலுக்கு மேல் உயர்த்திப் பின்னால் இழுத்துச் செருகினான். யானை மீது சிங்கம் பாய்வது போல் சீனன் மீது பாய்ந்தான் விஜயாலயன். ஆனந்த ஆரவாரங்கள் வீரர்களிடமிருந்து நாலா திசைகளிலிருந்தும் எழுந்தன. ஆனால் தானைத் தலைவர்களோ, 'இது அவசியம் தானா? இளவல் இப்படி ஓர் ஆபத்தான காரியத்தில் இறங்குவது உசிதமா? இதைத் தடுப்பதா கூடாதா?' என்று கவலையோடு சிந்திக்கத் தொடங்கிய சில நொடிகளுக்குள்

கஜபதி அண்ட் கோ

அறிமுகம்:

மானேஜர் கஜபதி | ஹெட்கிளார்க் சாரதி | டைப்பிஸ்ட் கிளார்க் ரகுராம் | ஸ்டெனோ மிஸ் மேரி | கிளார்க் மிஸ் சித்ரா | பியூன் மணி



ளாகவே — விடை காணு முன்பாகவே — யுத்தம் தீவிரமடைந்து விட்டது! இளவரசன் என்பதற்காக விட்டுத் தரமாட்டேன் என்று சபதம் செய்தவனைப் போல ஆவேசத்துடன் போரிட்டான் சினன். ஆயினும் என்ன? சில நொடிகளில் தீவிரமடைந்த மல் யுத்தம் அடுத்த 'சில நொடிகளுக்குள் முடிந்தும் விட்டது. கண் இமைக்கும் நேரத்தில் எப்படியோ சினனைத்தரையில் புரட்டிப் போட்டு அவன் முதுகில் முழங்கால், மண்டியிட அழுத்த ஊன்றி அவன் தலையை இரு கரங்களாலும் பற்றி உயர்த்தி மீண்டும் மீண்டும் தரையில் மோதிக் கொண்டிருந்தான் விஜயாலயன். ஒரு வழியாகச் சினனை விடுவித்த போது அவன் வாயிலிருந்து குருதி வழியத் திரும்பி விஜயாலயனைக் கையெடுத்துக் கும்பிட்டான். பின்னர் எழுந்து அப்பால் நின்ற ஒரு வீரனிடம் தள்ளாடிச் சென்று வாளை அவன் இடையிலிருந்து உருவிஎடுத்துக் கொண்டு உடல் தொய்யத் திரும்பி வந்து விஜயாலயனிடம் பணிவுடன் சமர்ப்பித்துத் தலை குனிந்து நின்றான், 'உயிரைப் பணயம் வைத்தவன் நான்' என நினைவூட்டியவனாக.

வாளை வாங்கினான் விஜயாலயன். அது சினன் கழுத்தில் விழப் போகிறது என்று அனைவரும் எதிர்பார்த்திருந்தபோது அதனை வீசி எறிந்தான். சினனின் தோள்களைப் பற்றி நிமிர்ந்து நிற்கச் செய்து அன்புடன் தன் பரந்த மார்பில் இணைசேர அணைத்துக் கொண்டான்!

பின்னர் தன் வீரர்களை நோக்கி, ''இன்று முதல் இவன் என் மெய்க் காவலர்களுள் ஒருவன்! இவன் உயிர் ஏற்கனவே எனக்குச் சொந்தமாகி விட்டபடியால் உயிரைக் கொடுத்து என்னை ஆபத்துச் சமயங்களில் காப்பான் என்பது உறுதி'' என்றான். அது வரை வியப்பும் திகைப்புமாய்த் திறந்த வாய் மூடாமல் நடந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த சேனை வீரர்கள் திடுமென சுயஉணர்வு பெற்றவர்களாய் ''வீராதி வீரன் விஜயாலயன் வாழ்க! வாழ்க!'' என்று முழங்கினர்.

அப்போதைய தன் பணியும் ஆணையும் முடிந்தது. இனி அது தொடர்பான மற்ற விவரங்களைச் சேனாபதி கவனித்துக்கொள்வார் என்று கருதியவனாக விஜயாலயன் விரைந்து நடந்து நாலே எட்டில் தனது பிரியத்துக்குரிய கரிய புரவி பரணி மீது தாவி ஏறிச் சோழ மாளிகை நோக்கி அதனைச் செலுத்தினான்.

போர்ப் பயிற்சி முடிந்து திரும்பும் இளவல் நீராடி அலங்கரித்துக் கொள்ள அனைத்தும் சித்தமாயிருந்தன. தைலமாட்டி உடலை முரட்டுத்தனமாய்ப் பிசைந்துவிட்ட போது இவனுக்கு இதமாகவே இருந்தது.

அந்தச் சுகானுபவம் குரலில் தொனிக்க அழைத்தான்: ''நுளம்பா!''

''பிரபோ!''

''ஆகவமல்லன் சென்று எத்தனை நாட்கள் ஆயின?''

ஒவ்வொரு நாளும் இளவல் கேட்கிற கேள்வி யாதலால் கணக்கில் பிசகாமல் சொன்னான் நுளம்பன். முதுகை நீவி விட்டபடி பேசினான். திரும்பிவருகிற சமயந்தான்!'



என்று தனக்குத் தானே பேசிக் கொள்கிறவன் போல் சொன்னான் விஜயாலயன். அவன் உடலில் நுளம்பன் தைலம் தடவி உருவி விட அதனால் வைரம் பாய்ந்த உடல் மேலும் தகதகக்க, ஆகவ மல்லன் சென்ற காரியம் பற்றியும் அது நிறைவேறியிருக்குமா என்பது குறித்தும் எண்ணிப் பார்க்கத் தொடங்கினான் விஜயாலயன்.

ஆகா! சந்திரலேகையில் வாழும் அந்த முத்தரையர் குலமகளைத்தான் எத்தனை அழகாக வர்ணித்தார் அந்தப் புலவர்! அவளைப் பார்த்துவிட்டு வந்த நினைவிலே விஜயாலயன் வேண்டுகோளுக்கிணங்க அவள் உருவத்தைத் திரைச் சீலையிலும் சித்திரமாக வரைந்து தந்தாரே! காவியம் ஓவியம் இரண்டிலும் திறம் படைத்த கலைஞர்! அவருக்கு மடி நிறையப் பொற் கழஞ்சுகளைவழங்கி கௌரவித்தது தகும், தகும்! இமைகளை மூடி எண்ணிப் பார்க்கையில் உத்தமசீலி உயிர் ஓவியமாக, சிறந்த கவிதையாகச் சிரித்தாள் அவன் மன அரங்கில்! அந்தச் சிரிப்புப் பூக்கள் மாலையாகி, மாவீரன் ஒருவன் மார்பில் புரளக் காத்திருப்பதாக புலவர் வர்ணனை! அந்தக் கண்களின் மின்னல் ஒளி வாள் வீச்சின் போது எழும் நெருப்புப் பொறிகளை விட உக்கிரமானவையாம். ஆனால் அவளுக்கேற்ற வீரனைக் கண்டு விட்டால் அவையே தண்புனலாக மாறிக் காதலைச் சொரிந்து குளிர்விக்குமாம்! காந்தள் மலரனைய அவள் விரல்கள் மாவீரனின் விழுப் புண்களை ஆற்றும் சக்தி படைத்தவையாம். சந்திர பிம்ப முகம் காதல் மணாளனின் பரந்த மார்பில் அலங்கரிக்கும் சந்திரகாந்தக் கல் பதித்த பதக்கமாம். அதரங்கள் காதல் நோய்க்கு சிறந்த ஔடதமாம். அவள் நெஞ்சங்களோ எனில் எமை அடையத் தக்க வீரரும் உளரோ என இறுமாப்புடன் நிமிர்ந்து நிற்பனவாம்! சிற்றிடையோ தன் அழகுக்குச் சமதையான வீரனைக் கண்ட பின் அவனைச் சுற்றி வளைக்கக் காத்திருக்கும் கொடியாம்! இன்னும் பலவிதமாகப் பாதாதிகேசம் அவளை வர்ணித்து ஒரு மோக மயக்கத்தை விஜயாலயனுக்கு உண்டு பண்ணியிருந்தார் புலவர்.

அரிசிலாற்றிலிருந்து ஓடை பிரிந்து வரக் கால்வாய் வெட்டி அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்ட நீர் தெள்ளத் தெளிந்தகுளமாய்த் தேங்கி நிற்கப் பக்கத்தில் உடம்புக்குப் பூச மணம் மிக்கப்பொடிகளுடனும் நீராடி முடித்ததும் அணிய பட்டாடைகளுடனும் பணியாட்கள் நின்றனர். வடிகாலும் கால்வாயும் அடைபட்டுக் கிடக்க நிச்சலனமான நீரில் இறங்கு முன் ஒரே ஒரு கணம் தன் முகம் அதில் பிரதிபலிக்கக் கண்டான் விஜயாலயன். ஏதோ ஒரு தயக்கம், ஒரு உறுத்தல் அவன் உள்ளத்தில் எழ இமைக்கும் நேரம் நின்றான். அடுத்த நொடி அவன் நீரில் பாய அலைகள் உண்டாகி அவன் உருவப் பிரதிபலிப்புக் கலைந்து விட்டது.

நீராடி முடித்துக் கரையேறி இடையில் புத்தாடைகள் அணிந்தான் விஜயாலயன். நெஞ்சைப் புதிய பட்டு உத்தரீயமும் அணிமணிகளும் அலங்கரித்தன. தலையலங்காரத்தையும் அவன் முடித்துவிட்ட நேரத்தில் அரண்மனை வாயிலில் ஏதோ அரவம் கேட்டது: ஒரு பரபரப்பை உணர முடிந்தது. திபுதிபுவென்று ஒரு வீரன் ஓடிவருவது செவிகளுக்குப் புலனாகியது. ''இளவரசே! ஆகவ மல்லன்.....'' என்று அவன் அறிவிக்கத் தொடங்கி முடிப்பதற்கு முன்னதாக, ''எங்கே அவன்? உடனே வரச்சொல். ஒற்றர் தலைவனுக்கு எந்நேரமும் என்னைக் காண அனுமதி உண்டு என்று தெரியாதா உனக்கு?'' என்று கர்ஜித்தான் விஜயாலயன். சேவகன் நடுங்கி நிற்க, அவன் பின்னாலேயே வந்து கொண்டிருந்த ஆகவ மல்லன், ''இவன் என் வருகையை அறிவித்தானே யொழியத் தடுக்கவில்லை பிரபோ!'' என்று கூறிக் காவலாளியைக் கடும் தண்டனையிலிருந்து காத்தபடியே முன்னேறினான். சோர்ந்து இளைத்திருந்த அவன் உடம்பெல்லாம் புழுதியும் அழுக்குமாக இருந்ததானது, வெகு வேகமாகவும் இடையில் சற்றும் இளைப்பாறுமலும் அவன் வந்திருப்பதை உணர்த்தியது. வந்தவனை நாலடி எதிர்கொண்டு கட்டி அணைத்துக் கொண்டான் விஜயாலயன். ஆகவமல்லனுக்கோ அந்த அரவணைப்பே வலித்தது!

ஆகவமல்லனின் உடம்பில் படிந்திருந்த அழுக்கையும் புழுதியையும் பொருட்படுத்தாமல் அப்போதுதான் நீராடி முடித்திருந்த விஜயாலயன் அவனை நெஞ்சாறத் தழுவி அளித்த வரவேற்பைக் கண்டு பணியாளர்கள் திகைத்து நிற்க, ''உம் உம்!'' என்று விரலை அசைத்து உறுமினான் விஜயாலயன். உடனே அனைவரும் அவ்விருவரையும் மட்டும் தனியே விட்டு அகன்றனர். அந்தக் கணத்துக்காகவே காத்திருந்தவன் போல ஆகவ மல்லன் கீழே சரிந்தான். ''இளவரசே! என்னை மன்னியுங்கள்! நான் கடமை தவறிவிட்டேன்'' என்று கூறி விஜயாலயனின் சீற்றத்தைத் தணித்து விடக் கருதியவனாக அவன் பாதங்களைப் பற்றிக் கொண்டான்.

''ஆகவமல்லா! என்ன நடந்தது? தாமதியாமல், சுற்றி வளைக்காமல் சொல்லு!'' என்று கட்டளையிட்டான் விஜயாலயன்.

''பிரபோ! நான் அதை எப்படிச் சொல்வேன்! ரவிகுலதிலகரே! என் நாக் கூசுகிறது....'' குனிந்த தலை நிமிராது பேசினான் ஆகவமல்லன்.

ஒரு ஹுங்காரம் எழுந்தது விஜயாலயன் கண்டத்திலிருந்து. அதைக் கேட்டு நடுநடுங்கிய ஆகவமல்லன் இன்னும் இறுகப் பற்றிக் கொண்டான் இளவலின் பாதங்களை.

''பிரபோ! உங்கள் வீரத்தின் பெருமையை அந்தப் பெண் அறியவில்லை. உடலால் பேரழகியாக இருந்தும் உத்தமசீலி என்று பெயர் கொண்டிருந்தும் உள்ளத்தால் விகாரமானவளாய்த் தோன்றுகிறாள். அதனால்தான் அரசவையிலேயே தளபதி ஒருவன் தங்களை அழகற்றவர் என ஏளனம் செய்ய அந்தப் பெண்ணும் சிரித்து விட்டாள்'' என்றான்.

எப்படியோ உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இதனைச் சொல்லி முடித்தான் ஆகவமல்லன். விஜயாலயனின் பாதங்களைப் பற்றியிருந்த அவனுக்கு இளவலின் உடம்பு ஆத்திரத்தால் பதறுவதை உணர முடிந்தது.

(தொடரும்)



பனித் துளியின் மென்மை...பால் நிலவின் தன்மை
இனிக்கும் காலையின் புதுமை...
எல்லாம் தந்திடும் அழகு சாதனம் வெகு அருமை!
பட்டுப்போல் மேனியைப் பாங்குடன் வருடும் நேயம்
விட்ச்ஹேஸல் எனும் அஸ்ட்ரின்ஜெண்ட் செய்யும் மாயம்
அலண்டாயின் அளித்திடும் நன்மையும் கொஞ்சமோ
மலரென மேனியில் இளமையெழில் கொஞ்சுமே.

வைட்டமின் ஈ இருக்க வாடிச் சுருங்குவதேன் நெற்றி
பட்டெழிலோடு என்றும் தருமே இளமையின் வெற்றி!
தென்றலென மேனியைத் தழுவிடும் பாசம்
அன்றலர்ந்த ரோஜாவின் மெல்லிய வாசம்
அழகூட்டும் பொருட்கள் அனைத்தின் சங்கமம்
எழில் சேர்க்க இதுவே எங்கள் சமர்ப்பணம்
புதிய லாக்டோ-காலமைன் ப்ளஸ்.


லாக்டோ-காலமைன் ப்ளஸ்

பேயர்—இன்டர்ஃப்ரான் லிட்., (காஸ்மெடிக்ஸ் டிவிஷன்)

மேனிக்கு அளிப்பீர் மென்னெழில்!

Sista's DIL 628/81 S TAM

அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துகள்



Dr. S. K.

சென்னை தமிழ்நாடு - சுற்றுப்பயணம்

வாலிப வயோதிக அன்பர்களே!

சிகிச்சை பெறுங்கள். இதுவரை நீங்கள் கஷ்டத்துடன் அனுபவித்த வியாதிகள் நீங்கி சுக வாழ்வு பெறலாம். வருக.

பல சித்த வைத்திய மகாநாட்டில் சிறப்பிக்கப்பட்டு ஏராளமான பட்டங்கள் பெற்ற பிரபல **பழனி சித்த வைத்தியபதி, வைத்திய திலகம், வைத்தியராஜ் Dr. S. காளிமுத்து** R.M.P. (IND.) V.V.C. A.M.I.H., R.A.M.P., R.H.M.P., அவர்களின் உலகப் புகழ் பெற்ற மருந்துகளால் சுக வாழ்வு வாழுங்கள். அவரின் சுற்றுப் பயணத்தில் – பழனியில் கடிதம் மூலம் ஆலோசனையுடன் சிகிச்சை பெறலாம்.

கீழ்க்கண்ட தொந்தரவுகள் இருந்தால் அலட்சியம் செய்யாதீர்கள்:

நீங்கள் கவலைப்படும் பிரச்னையான தாம்பத்திய வாழ்வில் குறைபாடு – ஆண்மை குறைவு, சோர்வு, வீரியக் குறைவு, குடும்ப உறவில் முன்மாதிரி செயல்படுத்த முடியாமை, நரம்பு துவளல், தேக உறுப்புகள் மெலிவு, ஆஸ்துமா, இருமல், கபம், தும்மல், வாத நோய், தூக்கமின்மை, ஊரல், அரிப்பு, சரும நோய்கள், குழந்தைச் செல்வம் இல்லாமை, அணுக்கள் குறைவு, வெட்கம், பயம், நடுக்கம், தோல்வி, வாய்வு, வயிற்று வலி, குடல்புண், வாந்தி, நவமூல வியாதிகள் முதலியவற்றிற்கு நேரில் சிறப்புமிகு ஆலோசனையுடன் சிகிச்சை பெறலாம். மற்றும் இதில் குறிப்பிடாத வியாதிகளுக்கு எமது 85 வருட அனுபவ மருந்துகளால் சுக வாழ்வு வாழலாம்.

ஆர்டருடன் மருந்து விபரங்களை குறிப்பிட்டு வி.பி.பி. பார்சலில் பெறலாம். வி.பி.பி. தபால் செலவு இலவசம். கேம்பிலும் நேரிலும் டாக்டரிடம் மருந்துகள் பெறலாம். தாமதியாமல் சிகிச்சை பெறுவது உங்களுக்கு நன்மை தரும். (பழனி சித்தர் மருந்துகளே பாரில் சிறந்தவை என்பது உலகம் அறிந்ததே).

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆ **ஒரு மாதம் சிகிச்சை மருந்துகள்** ◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

தங்க பஸ்பம்	தங்க பஸ்பம் : சிட்டுக் குருவி லேகியம்	மிக உயர் தரம்,	ஆஸ்துமா செட்
மிக உயர் தரம் ரூ. 330	90 வேளை ரூ. 180	செட் ரூ. 90	ரூ. 124 – 226
சூப்பர் செட் ரூ. 600	60 வேளை ரூ. 120	சரும நோய் செட்	வயிற்று வலி செட்
சூப்பர் செட் A. ரூ. 900	30 வேளை ரூ. 60	ரூ. 140 – 260	ரூ. 140 – 260

சென்னை விஜயம்: தங்கும் தேதிகள்: பிரதி இங்கிலீஷ் மாதம் *10, 11 & 17, 18, 19 தேதிகள்*

சென்னையில் தங்கும் விலாசம்: **நியூ உட்லண்ட்ஸ் ஹோட்டல்** (மாலை A/C)
எட்வர்ட் எலியட்ஸ் ரோடு, மைலாப்பூர், சென்னை-600 004 போன்: 83111

பார்க்கும் நேரம்:
காலை 10 மணி முதல் 12 மணி வரை – மாலை 3 மணி முதல் 5 மணி வரை.

எங்கள் மாபெரும் வெற்றிகரமான மாதாந்திர சுற்றுப்பயண தேதி விலாசங்கள் கவனிக்கவும்:

1-ந் தேதி திருநெல்வேலி நெல்லை லாட்ஜ், ஜங்ஷன் ரோடு, போன் 147. காலை 8 முதல் 12 வரை
2-ந் தேதி மதுரை, மணீஸ் கபே, டவுன் ஹால் ரோடு, போன் 2019. காலை 8 முதல் மாலை 2 வரை
3-ந் தேதி காரைக்குடி, காலை 9 முதல் 11 வரை A.V.M.P.L. ரெஸ்ட் ஹவுஸ், போன் 309
4-ந் தேதி திருச்சி, ஹோட்டல் அஜந்தா, ஜங்ஷன் ரோடு, காலை 8 முதல் மாலை 2 வரை போன் 4501
5-ந் தேதி தஞ்சாவூர், காலை 8 முதல் 12 வரை, ராஜா ரெஸ்ட் ஹவுஸ், போன் 57
6-ந் தேதி கும்பகோணம், பகல் 12 முதல் 2 வரை, தாஜ்மஹால் லாட்ஜ், பொற்றாமரைக்குளம்
6-ந் தேதி மாயவரம் மாலை 3 முதல் 4-30 வரை காளியாக்குடி லாட்ஜ் பெரிய கடைவீதி போன் 460
7-ந் தேதி பாண்டிச்சேரி, காலை 8 முதல் 9-30 வரை, (அருணா லாட்ஜ்) பாரிஸ் லாட்ஜ், ஜவஹர்லால் வீதி
7-ந் தேதி கடலூர் N.T. காலை 10-30 முதல் 12 வரை ஹோட்டல் பிருந்தாவனம் போன் 352
11-ந் தேதி வேலூர், என்.ஏ. காலை 9 முதல் 10 வரை அஜீஸ்மேன்ஷன், போன் 123
12-ந் தேதி பெங்களூர், காலை 9 முதல் 2 வரை ஹோட்டல் பிராட்வே
13-ந் தேதி சேலம், மாலை 2 முதல் 5 வரை லட்சுமி ராஜ்பவன், போன் 2301
15-ந் தேதி ஈரோடு, காலை 10 முதல் 12 வரை, நவமணி லாட்ஜ், போன் 907
15-ந் தேதி திருப்பூர், பகல் 2 முதல் 3 வரை, ஸ்ரீ கிருஷ்ணா லாட்ஜ், போன் 186
15-ந் தேதி பொள்ளாச்சி, மாலை 5 முதல் 6 வரை, கோபால் பில்டிங், போன் 666
16-ந் தேதி கோவை, காலை 10 முதல் மாலை 2 வரை, விஜயா லாட்ஜ் போன் 22669

நாகர்கோவில், புதுக்கோட்டை, பட்டுக்கோட்டை, மன்னார்குடி, கரூர், திருவாரூர், நாகப்பட்டினம், காரைக்கால், சிதம்பரம், திருப்பத்தூர், ஆம்பூர், செஞ்சி, தர்மபுரி, மதுரை இந்த ஊர் கேம்புகள் பத்திரிகையில் வெளி வந்துகொண்டிருக்கின்றன.

கி. நகர் விற்பனை நிலையம்: 11/90, பாண்டிபஜார் (ராஜகுமாரி தியேட்டர் அருகில்) சென்னை-600 017
போன்: 444076, 21448

GOVT. REGD. T.M. No. 204841 REGD. 15443. MFG. L. No. 5

பழனி சித்தர் வைத்தியசாலை, பழனி-624 601

பழைய தாராபுரம் ரோடு, (இந்தியாவின் மாபெரும் வைத்திய ஸ்தாபனம்.)
போன்: 316, 316-A. வீடு: 420 பிரன்ச்: 361 தந்தி: சித்தர்

பழனியில் பிரதி மாதம் 5ந்தேதி முதல் 8ந்தேதி வரையும், 14ந்தேதியும், 23ந் தேதி முதல் 30ந்தேதி வரை டாக்டரை நேரில் சந்தித்து ஆலோசனை மருந்துகள் பெறலாம்.



சாதாரண மனிதன்

'லக்ஷ்மி'

1

மாலை நேரத்து சூரிய ஒளியில் தோட்டம் மஞ்சள் குளித்துக் கொண்டிருந்தது. பள்ளிக்கூடத்திலிருந்து சிறிது முன்னர்தான் சந்தியா வீடு திரும்பி யிருந்தாள். வழக்கம் போல் குளியலுக்குப் பின் வேறு உடுத்திக் கொண்டு இரவு சாப்பாடு தயாரிக்கச் சமையலறைக்குள் புகுந்து விட்டிருந்தாள். அத்தை ஜகதாவும் வழக்கம்போல் தோட்டத்துப் பூக்களில் சிலவற்றைப் பூக்கூடையில் சேகரித்து எடுத்துக் கொண்டு கோவிலுக்குப் போகத் தயாராகி விட்டிருந்தாள். கூடத்து அலமாரித் தட்டிலிருந்து விபூதி டப்பாவைத் திறந்து விரலால் தொட்டு நெற்றியில் கீற்றிக்கொண்டபடி வாயில் பக்கம் திரும்பினவள் திடுக்கிட்டுப் போய்விட்டாள்.

மூடியிருந்த கேட்டுக்கு அப்பால் வெளியே தெருவில் அவர்கள் வீட்டின் முன்னால் ஒரு கார் வந்து நிற்பதைக் கண்டாள். அதிலிருந்து இறங்கிய மனிதன் கேட்டைத் திறக்கக் கையை நீட்டி இரும்புத் தடுப்பை நீக்குவதைக் கண்டு அவள் நடுங்கிப்போனாள்.

''சந்தியா! லாம்சனைச் சட்டுனு கட்டிப் போடு. யாரோ நம்ப வீட்டுக்கு வராங்க.'' உரத்த குரலில் அபாய அறிவிப்பு விடுத்தாள்.

தோட்டத்துக் கத்தரிப் பிஞ்சுகளைச் சமையல் மேடை மீது நறுக்கும் மணைக் கட்டை அருகே வைத்து விட்டுக் கத்தியைக் கரண்டிக் குவியலில் தேடிக் கொண்டிருந்த சந்தியாவுக்குத் தேள் கொட்டியது போன்ற வேதனை கலந்த அதிர்ச்சி. பின் கதவைத் திறந்து கொண்டு தோட்டத்துக்குள் நுழைந்தாள். அவளைக் கண்டதும் ஆவலோடு பாய்ந்தோடி வந்த நாயின் கழுத்துப் பட்டையை வாகவமாகப் பிடித்துச் சட்டென்று பின் வராந்தாத் தூணில் தொங்கிய சங்கிலியில் பிணைத்தாள். எகிறிக் குதித்து அதம் செய்த நாய்க்கு விஷயம் புரிந்து விட்டது. யாரோ வேண்டப்படாதவன் வந்து கொண்டிருக்கிறான். வாசனையேறிய மூக்கைச் சுருக்கிக் கொண்டு கண்களில் கோபம் தெறிக்க அடிப் பற்கள் லேசாகத் தெரிய உறுமத் தொடங்கியது. பின்னர் கேட்டைத் திறக்கும் சப்தம் கேட்டதும் வீடே கிடுகிடுக்கும் வண்ணம் தலையை உயர்த்திக் கொண்டு குரைக்க ஆரம்பித்து விட்டது.

கேட்டைத் திறந்து கொண்டு ஓர் அடி உள்ளே காலை வைத்த பட்டுக் கரை வேஷ்டி மல் ஜிப்பா ஆசாமி வெதறிப் போய்விட்டார். சுற்று முற்றும் பார்த்தபடி மேலே பாய ஓடிவரும் நாயைத் தவிர்க்க அவர் சட்டென்று கேட்டை மூடிவிட்டு வெளியே ஓடத் திரும்பியதைக் கண்ட சந்தியா தன்னுள் எழுந்த வேதனையை மறந்து குபுக்கென்று சிரித்து விட்டாள்.

வாயிற் படியைத் தாண்டி மெல்ல இறங்கி வந்தவளைக் கண்டதும்தான் அந்த மனிதனுக்குப் போன உயிர் திரும்பியது போன்றதொரு தெம்பு ஏற்பட்டது.

''நாய்...நாய்....'' பேச முடியாத குழப்பத்துடன் கேட்டைப் பிடித்துக் கொண்டு நின்றார்.

''கட்டியிருக்கு — கவலைப்படாதீங்க...'' ஆறுதல் சொல்லிவிட்டுச் சந்தியா தன் கண்களால் அவரை ஆய்வு செய்து கொண்டிருந்தாள்.

வந்தவருக்கு ஐம்பது வயதுக்கு மேல் கூடிவிட்டது என்று கன்னத்தின் கீழே மடிந்து தொங்கிய சதையும் கண்களைச் சுற்றியிருந்த சுருக்கங்களும் விளம்பரப்படுத்தின.

ஆனால் தலையில் ஒரு துளி நரை தெரியாது மனிதன் சாயத்தை நன்றாகவே ஏற்றிக் கொண்டு வந்திருந்தார். முகம் முழுவதும் பூத்துவிட்டிருந்த வியர்வையில் மூக்குக் கண்ணாடி இடத்திலிருந்து நழுவுவதை உணர்ந்த மனிதன் அதைச் சரிசெய்யத் தமது இடது கையைத் தூக்கியபோது பார்த்தாள். அவரது இடது கை மோதிர விரலில் -கண் டைக்காய் அளவு ஒரு வைர மோதிரம் ஒளியிட்டுக் கொண்டிருந்தது.

'ஆசாமி ரொம்ப பசையுள்ள புள்ளிதான். கட்டாயப்படுத்திக் காரியத்தைப் பண பலத் தால் சாதித்துக் கொண்டு விடக் கூடும்.' கவலையும் திகிலுமாக அவருக்குப் பின்னால் தெரிந்த பியட்காரை உற்றுப் பார்த்தாள். வண்டி புதிது என்பதை வெகு தூர சவாரி யினால் ஏற்பட்ட புழுதிப் படலத்தைத் தாண்டி இங்குமங்கும் அதன் பச்சை வண் ணம் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது.

அத்தை ஜகதா பூக்கூடையை முக்காலி மீது வைத்துவிட்டுப் பரபரப்பாக வெளியே வந்தாள்.

''சந்தியாவுக்கு இப்பொழுதெல் லாம் பொறுமை என்பதே கிடை யாது. சட்டென்று எரிந்து விழு கிறாள். கல்யாணமாகாத ஓர் இளம் பெண். தன்னந் தனியே வாழ நேர்ந்துவிட்ட துர்ப்பாக்கியம். அத்தை யம்மாளை நம்பிக்கொண்டு காலம் முழுவதும் இருந்து விட முடியுமா என்கிற விவேகமில்லை. மடத் தனம். படித்திருக்கிறாள். வேலை பார்க் கிறாள். குணத்தில் தங்கமானவள்தான். ஆனால் உலக அறிவு இல்லாத வெகுளித் தவளை. அவளைப் பேச விடக் கூடாது....



பலவும் எண்ணியபடி புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு வேகமாகச் சந்தியாவைத் தாண்டிக் கொண்டு முன்வந்து நின்றாள்.

''வாங்க...உள்ளே வாங்க....'' — பல நாள் பழகிய நண்பரை வரவேற்பது போல் பரிவுடன் உபசரித்தாள்.

''குமரேசன் சொன்னார்... வீட்டில் நீங்க ரெண்டு பேர்தான் இருப்பீங்க, சாயங்கால வேளையில் போவது தான் நல்லது. மத்த சமயம் இந்தம்மா பள்ளிக்கூடத்திலே வேலையாக இருப்பாங்க. வீட்டைப் பத்தி எதுவும் பேசணும்னா இந்த அம்மாவிடம் தான் கேட்கணும்னு சொல்லியிருக்கார்....'' கூறிவிட்டுச் சந்தியாவைக் காலோடு தலை வரை கண்களால் அளந்தார்.

கோபத்தில் முகம் சிவக்க, நெஞ்சு படபடக்க விருக்கென்று அவர் பக்கம் திரும்பினாள் சந்தியா.

அத்தை முந்திக் கொண்டாள். ''வீடு இந்தப் பொண்ணோட சொத்து. அவளுக்குத்தான் விக்கிற உரிமை இருக்கிறதாலே...'' மென்று விழுங்கினாள்.

''நான் திருச்சியிலிருந்து இதைப் பார்த்துத் தீர்மானிக்கிற நோக்கத்தோட நேரே நானே காரை ஓட்டிக்கிட்டு வந்திருக்கேன். டவுனிலே முக்தா ஜ்வல்லர்ஸ்னு கேள்விப்பட்டிருப்பீங்க... வெள்ளி, தங்கம், வைரம் கவரிங்னு தனித் தனியே நாலு கடைகள் இருக்கு. எனக்கு மூணு பிள்ளைகள், ரெண்டு பெண்கள். சின்னப் பெண்ணுக்குக் கல்யாணம் கூடிவிட்டிருக்கிறது. குடும்பம் பெரிசாகிவிட்டதாலே டவுனை விட்டு இப்படிக் கிராமப் பக்கம் வந்து கொஞ்சம் ஒய்வா இருக்க ஒரு நல்ல வீடு தேவைன்னு மனத்



நிலபட்டுது. புரோக்கர் கிட்டே சொல்லி யிருந்தேன்....'' மூச்சு விடாது பேசிக் கொண்டே அவர் இருவரையும் தாண்டிக் கொண்டு தோட்டத்துக்குள் வந்தார்.

''ஆமாம். ஒரு ஏக்கருக்கு மேலே பூமி... வாழை, தென்னை, கொய்யா, இச்சிலி எல்லாம் போட்டிருக்காங்கன்னு குமரேசன் சொன்னரே...''

''உண்மைதான்... முன் பக்கமாகத் தள்ளி வீட்டைக் கட்டிட்டு என் அண்ணன் விரிவா பின்பக்கத்து நிலத்திலேபலதும் பயிரிட்டுட்டுப் போயிட்டார். இப்படி வந்து பாருங்கோ...'' ஜகதா பேசியபடி வந்தவரை வீட்டுக்குள் அழைத்துக் கொண்டு சென்றுள்.

பின் வராந்தாவில் தொண்டை' கிழியக் குரைத்துக் கொண்டிருந்த நாயைப் பயத் துடன் கடைக் கண்ணுல் பார்வையிட்டு விட்டுத் திருச்சிக்காரர் பின்னுல் நெடுந்தூரம் பசேலென்று பரவிக் கிடந்த தோட்டத்தைப் பிரமிப்புடன் பார்த்தார்.

''வாத்யார் வேலை செய்து ஓய்வடைந்த மனிதன் என்முர் குமரேசன்... அவருக்கு இப் படி தோட்டக் கலை மீது ஒரு ஆர்வமா?... அடேயப்பா! இந்தப் பக்கம் முழுவதும் பட்டு ரோஜா — அந்தப் பக்கம் ஜாதி மல்லி, முல்லை — இருவாட்சி. சுவர் ஓரமா ஒரு மகிழ மரம். அடுத்து ஒரு பூத்துக் குலுங்கும் சண்பக மரம்... பிறகு சாமந்திப்பூ... செம்பருத்தி... போகன்வில்லா... விருட்சிப் பூ. பவளமல்லி... மனுஷன் ஒண்ணையும்விட் டுக்கலை போலிருக்கு...''வியப்புடன் வாழை, தென்னை, பலா, புளி, வேம்பு என்று மரங்கள் மீது கண்களை ஓட்டினர். எல்லாவற்றையும் பார்வையிட்டபடி இரண்டு பெண்களும் பின்தொடர... வீட்டை யொட்டியிருந்த கிணற்றின் அருகே வந்தார்.

''தண்ணீர் இளநீர் போல இருக்கும்...'' ஜகதா அவர் கேட்கும் முன்னர் பேசினள்.

''இத்தனை பெரிய தோட்டத்துக்கு நீர் பாய்ச்ச....'' என்று கூறிக் கொண்டு அவர் திரும்பிப் பார்க்கு முன் அத்தையம்மாள் குறுக்கிட்டாள். ''பம்பு செட் போட்டிருக்கு. ஒரு பச்சைப் பிள்ளைகூடத் தோட்டத்துக்கு நீர் பாய்ச்சிடலாம். ஆள் படை இல்லைன்னு கவலை வேண்டாம்.'' சொல்லிக் கொண்டே கிணற்றுத் தண்ணீரை இறைக்கும் இயந் திரத்தை இயக்கி விட்டாள்.

பெரியதொரு குழாயின் வாய் வழியே தண்ணீர் தடதடவென்று அகலமான தொட்டி போன்றதொரு அமைப்பிலே கொட்டுவதைக் கண்ட திருச்சிக்காரருக்கு உற்சாகம் பொங்கியது.

''வெய்யில் நாட்களிலே பாத் டப்பிலே உட்கார்ந்து ஸ்நானம் பண்றப்பல இதிலே உட்கார்ந்து நல்லா குளித்து முழுகலாம் போலிருக்கே...'' காவிப் பற்களைக் காட்டிக் கொண்டு சிரித்தார்.

அருகிலிருந்த சந்தியா முகம் சுருங்கிப் போனுள்.

பரிசுத்தமான நீரைக் கிணற்றிலிருந்து இறைத்து வெட்டி விட்டிருக்கிற வாய்க்கால் வழியே ஓடவிட்டு. பாத்திகளுக்குப் பாய்ச்ச வேண்டும். நமக்குக் குடிக்கச் சுத்தமான தண்ணி எத்தனை அவசியமோ அதுபோல செடி கொடிகளுக்கும் நல்ல தண்ணீர் தேவையாச்சே... சோப்பும் அழுக்குமாக இவர் உடம்பிலிருந்து ஓடும் தண்ணீரையா செடிகளுக்குப் பாய்ச்சுவது... கண்றாவி.... இவரிடம் வீட்டை விற்ருல்..... மனத் துக்குள் குமைந்தபடி மெல்ல பின்னுல் நடந் தாள்.

கிளை முழுவதும் பழங்களாகக் குலுங்கிக் கொண்டிருந்த எலுமிச்சம் மரத்தருகே வந்ததும் திருச்சிக்காரர் வாயில் நீர் ஊறி விட்டது.

''பரவாயில்லையே... மரம் குட்டையாக இருந்தாலும் கூடைக் கணக்கில் பழம் தரும் போல இருக்கே?''

'அடப் பாவி! கண் போட்டு விட்டாயா?' பற்களைக் கடித்துக் கொண்டு தன்னுள் கோபத்துடன் பொருமினள் சந்தியா.

''இந்தப் பழம் ஒண்ணைப் பறிச்சு எடுத்துக் கிட்டுப் போய் என் மனைவி கிட்ட காட்ட றேன். அவளுக்கு எலுமிச்சம்பழ ஊறுகாய் என்றால் உயிர்... இது ஒண்ணுக்காகவே வீட்டை உடனடியா வாங்கணும்னு அடம் புடிப்பா....'' சிரித்துக்கொண்டே அவர் கையை நீட்டியதைக் கண்டதும் பதற்றத் துடன் இடைமறித்தாள் சந்தியா.

''எங்கப்பாவுக்கு வருஷத் திவசம் இன் னும் முடியலை.அவர் வச்ச மரம் இப்பத்தான் காச்சிருக்கு. பழங்களைப் பறிச்சு அப்படியே இந்த ஊர்ச் சிவன்கோவிலுக்கு அனுப்பிடற துன்னு வேண்டுதலை.அதனுலே ஒண்ணைக்கூட தொடாதீங்க.'' வெடுக்கென்று சொன்னுள்.

''பித்தாய் பிறை சூடின்னு' பாடுவாங் களே... அதனுலே இத்தனை எலுமிச்சம் பழங் களும் அந்தப் பெரியவருக்குத் தேவைப் படுதோ?'' — கேலியாகக் குத்தலாக அவர் கேட்டபோது சந்தியாவுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

''கோயிலுக்குக் கொடுத்தால் சிலவற்றை மட்டும் உபயோகித்துக் கொண்டு மீதியைச் சந்தையில் விற்று அந்தப்பணத்தைக் கோயில் திருப்பணிக்கு உபயோகிப்பார் தர்மகர்த்தா. எங்க தோட்டத்திலே முதன் முதலாகக் காய்க்கிற தேங்காய், பழங்கள், பூக்கிற

விடைகள் :

1. ஆ. சோபர்ஸ்: 365 ரன்கள்
2. இ. 75 ஓவர்கள்
3. ஈ. 66 அடி
4. அ. 200 ரன்கள்
5. இ. 9 அங்குலம்
6. ஆ. 5 அடி
7. இ. இரண்டு நிமிடங்கள்
8. ஆ. நாலேகால் அங்குலம்
9. ஆ. ஒரு இன்னிங்ஸ் 579 ரன்கள். 1938ல் ஓவலில் நடைபெற்ற பந்தயத் தில் ஆஸ்திரேலியாவை இங்கிலாந்து வென்றது.
10. அ. ஒன்பது.

அமைப்பு: ராஜேஸ்வரி

புதிய
கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்



குழந்தைகளுடைய பற்களின் மென்மையான எனமல் எளிதில் துவாரங்களுக்கும் சிதைவுக்கும் உள்ளாகிறது. பெரியவர்களுக்கும் பற்சிதைவுக்கு எதிராக பாதுகாப்பு தேவை.

புதிய ஃப்ளோரிகார்ட் டூத் பேஸ்ட் பல் துவாரங்களுக்கும், பற்சிதைவுக்கும் எதிராக உங்கள் குடும்பத்தினருக்கு நிச்சயமான பாதுகாப்பைத் தருகிறது. துவாரங்களையும், பற்சிதைவையும் உண்டாக்கும் வாய் அமிலங்களுக்கு எதிராகப் பற்களை உறுதிப்படுத்துவதற்கென பல் எனாமலுடன் இணைந்து செயல்படும் விசேஷ கோல்கேட் எம்.எஃப்.பி ஃப்ளோரைட் அதில் உள்ளது.

கோல்கேட் ஃப்ளோரிகார்ட் புல்லரிக்கும் புதுச்சுவை கொண்டது. உங்கள் குடும்பத்திற்கு இன்றே வாங்குவீர்.

MFP FLUORIDE

உலகெங்கும் உள்ள ஆராய்ச்சிசாலைகளில் சோதிக்கப்பட்டுள்ள எம்.எஃப்.பி ஃப்ளோரைட் துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராகப் பற்களை உறுதிப்படுத்துகிறது என்பது மருத்துவ ரீதியாக நிருபணமாகியுள்ளது. கோல்கேட்டின் தீவிர ஆராய்ச்சி மட்டுமே இந்த தனிப்பட்ட எம்.எஃப்.பி ஃபார்முலாவை உங்களுக்கு வழங்க முடியும்.



ஃப்ளோரிகார்டில் உள்ள எம்
எ.ஃப்.பி ஃப்ளோரைட் எனாமலுடன் இணைந்து துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.

தமிழ்நாடு, கேரள மாநிலங்களிலும், கர்நாடகத்தில் குறிப்பிட்ட சில மார்க்கெட்டுகளிலும் இப்போது கிடைக்கும்.

CFT.G.3 TM



KIRON/APCO/8112

பூக்கள் எல்லாத்தையும் அப்பா சிவன் கோவிலுக்குத் தமது காணிக்கையா அனுப்பிடற வழக்கம். அவர் இல்லாவிட்டாலும் அவர் செய்த காரியங்களுக்கு நான் மதிப்புக் கொடுக்க வேண்டாமா?''

''அப்படியா? இந்த ஊரில் சிவன் கோவில் ரொம்பப் பிரசித்தமோ?''

''எங்களுக்குச் சிவன்கோவிலில் எழுந்தருளியிருக்கும் அளவாமகேஸ்வரரும், அபயாம்பிகையும் குலதெய்வங்கள். அருகே இங்கே ஒரு பெருமாள் கோவிலும் இருக்கு. ஊரில் எல்லையோரத்தில் எல்லைக்காளியம்மன் கோவிலும், வாய்க்கால் கரையில் பிள்ளையார் கோவிலும் இருக்கு. அதோ தெரிகிறது பாருங்க நீலத் தொடரா, அதுக்கு தோகையான் குன்றுன்னு பேர். இங்கிருந்து நாலு மைல் தூரத்திலே இருக்கு. அதிலே முருகன் குடிகொண்டிருக்கிறான்.''

''தெய்வங்களுக்குக் குறைச்சல் இல்லை. ஆனால் வீட்டுக்குப் பக்கத்திலே மனுஷங்களுக்குத்தான் குறைச்சல்னு சொல்றீங்க...'' மறுபடியும் தமது காவிப் பற்களைக் காட்டிக் கொண்டு உரத்துச் சிரித்தார் அவர்.

''அப்பாவுக்குக் கூட்டம், சத்தம் இவை பிடிக்காது. அமைதியை விரும்பி... ஒரு ஆசிரமம் போல் இந்த வீட்டை ஊருக்கு ஒதுக்குப்புறத்திலே பெரிய தோட்டத்துக்குள்ளே கட்டினார்....'' தொண்டையை அடைத்த துயரத்தை விழுங்கிக் கொண்டு பேசினாள் சந்தியா. அந்த வீட்டுச் சுவரின் கற்களுக்கு இருந்த கனிவுணர்வு அந்தத் திருச்சிக்காரரின் கண்களில் கடுகளவும் ஏன் இல்லை? விந்தையாகத்தான் இருந்தது அவளுக்கு.

சுற்றிக் கொண்டே நடுவில் தமது டிஜிட்டல் கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்துக் கொண்டு அவர் தோட்டத்தின் ஒருபுறமிருந்த மாட்டுக் கொட்டகையருகே வந்தார்.

''இப்ப ஒரே ஒரு பசுவும் கன்றும்தான் இருக்கு. பசுவுக்குச் செல்லக்குட்டின்னு பேர். கூப்பிட்டா நாய் போல ஓடிவரும்.'' அத்தை பெருமையுடன் பேசியதைக் கேட்டு அவர் செல்லக்குட்டியைத் திரும்பிப் பார்த்தார்.

''நாளைக்கு எத்தனை கறக்கும்? கன்னுக்குட்டியே மாடு போல வளர்ந்து நிக்குதே?''—விசாரித்தார்.

கறவை மறத்துப் போச்சு. செல்லக்குட்டிக்கு வயசு ஆயிடுச்சு. இன்னும் ஒரு தடவை கன்னு போட்டாலே அதிகம்.''

''வீட்டை வாங்கறவங்களுக்கு இந்த மாட்டையும் கன்னையும் சேர்த்துத்தானே கொடுப்பீங்க... இதுகளை ஒட்டிக்கிட்டுப் பட்டணம் போய் எப்படி வைச்சுக் காப்பாத்துவீங்க? மேலும் கிழட்டு மாட்டை எத்தனை நாளைக்கு வச்சுக்கிட்டுத் தீனி போட்டுக் காப்பாத்த முடியும்?...''

இமைகளின் ஓரத்தைச் சுட்ட கண்ணீரைச் சமாளித்துக் கொண்டாள் சந்தியா. இந்தத் திருச்சிக்காரர் வீட்டை வாங்கின அடுத்த நாளே மாட்டையும் கன்றையும் அடிமாட்டுக்காரனிடம் ஒப்படைத்து விடுவார்... சந்தேகமேயில்லை... இவர் பேச்சிலும் பார்வையிலும் பணக்காரத்தனம்தான் தெரிகிறதே ஒழியக் கருணை கடுகளவும்கிடையாது.



ஆன்றோர் வாக்கு

● குழந்தைகளால் சொல்லப்படுகிற ஒரு விஷயத்துக்குப் பெருமை அதிகம். குழந்தைகளிடம் காமமும், குரோதமும் நிலைத்திருப்பதில்லை. இந்த விநாடி ஆசைப்பட்டு வாங்கிய பொருளை அடுத்த விநாடி கீழே போட்டுவிட்டுப் போய்விடும். இந்த விநாடி கோபித்துக் கொண்ட ஒருவரிடம் அடுத்த விநாடியே ஆசையோடு ஓடி ஒட்டிக்கொள்ளும். இதனால்தான் உபநிஷத்துக்களும் நம்மைக் 'குழந்தையாக இரு' என்று உபதேசிக்கின்றன.-

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

● ஏழைகளிடம் ஊர்ப் பொது நன்மைக்கும் அபிவிருத்திக்கும் உரிய சகலவித வேலைகளும் வாங்கிக் கொண்டு, அதற்குக் கைம்மாறாக ஒருயிர் மிச்சமில்லாமல் அத்தனை ஏழைகளுக்கும் தகுந்த ஆகாரம் கொடுத்துவிட வேண்டுமென்றும் சட்டம் செய்துவிட்டால் போதும். ஒருயிரேனும் ஒருபோதேனும் சோறின்றி இளைக்க ராஜாங்கம் இடங்கொடாதென்ற உறுதிப்பாடு ஏற்பட்டுவிடும். அடே அப்பா, பசிப் பயம் ஒன்று மாத்திரம் நீங்கிவிட்டால் மனித ஜாதி என்ன மேன்மையடைந்து நிற்கும்! —பாரதியார்

மனிதனிடம் கடவுள் இன்னமும் நம்பிக்கை இழக்கவில்லை என்பதையே ஒவ்வொரு குழந்தையின் பிறப்பும் உணர்த்துகிறது.

—தாகூர்

ஒவ்வொரு சாதனையின் பின்னாலும் பெருமிதம் மிக்க ஒரு மனைவியும் ஆச்சரியத்தில் ஆழ்ந்த மாமியாரும் இருப்பார்கள்!

—ப்ரூக்ஸ் ஹேய்ஸ்

அவளது செல்லக்குட்டியை அவள் யாரிடமும் ஒப்படைக்கப் போவதில்லை. அதன் கடைசி மூச்சுவரை அவளே காப்பாற்றப் போகிறாள்.

''வீட்டைப் பார்க்கணுமா?'' அத்தை நினைவூட்டினாள். ஓங்கிக் குரைத்த நாயைத் தாண்டிக் கொண்டு அவர்கள் உள்ளே புகுந்தனர்.

''மாட்டையும் கன்னையும் வேணு சேத்து எடுத்துக்கிறேன். இந்த நாயை யாருக்காவது கொடுங்கோ...என் பேரப் பிள்ளைகள் இதைப் பார்த்தா நடுங்கிப் போயிடுவாங்க.''

''ஸாம்சனை யாருக்கும் கொடுக்கும் எண்ணம் இல்லை. அது என் நண்பன். நட்புக்கு விலையுண்டோ?'' — சந்தியா கேட்டபோது திருச்சிக்காரர் முகம் இறுகியது.

''நீங்க வாத்தியார் வேலை பார்க்கிறீங்க. உங்ககிட்டப் பேசிச் சாத்தியப்படுமா?'' — சொல்லிக் கொண்டே வீட்டைக் கண்களால் ஆராய்ந்தார்.

அது பழைய காலத்துப் பாணியில் கட்டப்பட்ட வீடு. வாயிலில் பெரிய வராந்தா. உள்ளே ஒரு ஹால். அதை யொட்டி எதிர் எதிராக இரு பெரும் அறைகள். அது வரைதான் ஒரு கட்டிடம். அதைத் தாண்டிப் பின் பகுதிக்கு வந்தால் நான்குபுறம் ஓடிய தாழ்வாரம். கூடம், சமையல் அறை, உக்ராண அறை, குளியலறை இத்யாதிகள். ஓட்டுக் கூரை வேய்ந்த கட்டிடம். நடுவிலே விஸ்தாரமானதொரு முற்றம். அதைத் திருடர்களிடமிருந்து பாதுகாக்கப் பலத்த இரும்புக் கம்பித் தடுப்பு. நடுவிலே ஒரு சிறு துளசி மாடம். கூடத்தின் நடுவே கருங்காலி மரத்தில் பளபளத்ததொரு ஊஞ்சல். ஒட்டடை தூசி எதுவுமின்றி வீடு துப்புரவாகக் காணப்பட்டது. சமையலறை, குளியலறை—படுக்கையறை என்று எல்லாவற்றையும் நோட்டம் பார்த்துவிட்டு ஒரு வழியாக வந்து ஊஞ்சலில் உட்கார்ந்தார் அவர்.

அதற்குள் பொழுது மங்கி விட்டது. கூடத்துக் குழல் விளக்கைப் பொருத்தினாள் சந்தியா. தலைக்கு மேல் சுழன்ற மின் விசிறியையும் மெல்ல நிமிர்ந்து பார்த்துக் கொண்டார் திருச்சிக்காரர்.

''வீடு நமக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. ஆனா ரொம்ப ரிப்பேர் இருக்கு. சுவரிலே இங்கே அங்கே வெடிப்புகள் நிறைய இருக்கு. வீடு முழுதும் சிவப்பு சிமெண்டை அடிச்சு விட்டிருக்கார் உங்க அப்பா. என் மனைவிக்கு அது பிடிக்காது. மொசாய்க் தரை போடணும். ஓடு மாத்தி ரொம்ப நாளாகுது போலத் தெரியுது. அதைப் பிரிச்சு மாத்தணும். ரிப்பேர்னு கைவைச்சா ஐம்பது ரூபா இழுத்துட்டுப் போயிடும்.'' பெருமூச்செறிந்தார் அவர்.

''வீட்டை வாங்கின பிறகு உங்க இஷ்டம். என்ன செய்வீங்களோ? அது உங்க பாடு....'' என்று கூறிவிட்டு அத்தை வேகமாகச் சமையல் அறைக்குள் புகுந்தாள். சந்தியா—பிளாஸ்கில் தனக்காகத் தயாரித்துக் கொட்டி வைத்திருந்த ஹார்லிக்ஸை ஒரு டம்ளரில் ஊற்றி எடுத்து வந்தாள்.

''வெகு தொலைவிலிருந்து வந்திருக்கீங்க. தாகத்துக்கு ஏதாவது சாப்பிட வேண்டாமா?'' உபசரித்தபடி ஊஞ்சல் ஓரத்தில் வைத்தாள்.

''நல்லா பால் விட்டுக் கலக்கியிருக்கீங்க. சுவையா யிருக்கு. வீட்டுப் பசும்பால் கேட்கணுமா?'' குடித்ததும் புகழ்ந்துவிட்டு எழுந்தார்.

''நான் ஊருக்குத் திரும்பினதும் உங்க வீட்டு மருமகப் பிள்ளை குமரேசனைப் பார்த்து விலையைத் தீர்மானிச்சுடுவோம். அவர் கேட்ட விலைக்குப் பத்து ரூபா குறைவாகத்தான் தரதுன்னு முடிவு செய்துட்டேன். என்ன வீட்டிலே ரிப்பேர் ரொம்ப இருக்கு. அதுவே கையைக் கடிக்கப்போகுது.'' சொல்லிக் கொண்டே கிளம்பினார்.

வாசல்வரை இருவரும் நடந்தனர்.

''நீங்க சொன்ன விலைக்குப் பத்து ரூபா குறைச்சுத்தான் தரப்போறேன். சம்மதந்தானே?'' அதட்டலாகக் கேட்டபடி திருச்சிக்காரர் தமது காரின் கதவைத் திறந்தார்.

''ஸார்! மன்னிக்கணும். உங்களுக்கு எங்க அத்தான் வீண் சிரமம் கொடுத்திட்டார். நாங்க இந்த வீட்டை விக்கிறதாக இல்லை. நாங்களே வெச்சுக்கிறதா முடிவு செய்து விட்டோம்'' என்று பளிச்சென்று சந்தியா பதிலளித்தாள்.

படார் என்று காரின் கதவைக் கோபத்துடன் சாத்திய வேகத்தில் திருச்சிக்காரர் துரிதமாகக் கிளம்பி விட்டார்.

அதிர்ந்துபோன அத்தை ஜகதா உள்ளே வந்த பின்னர்தான் வாயைத் திறந்தாள்.

''சந்தியா! வீட்டை வாங்க வந்தவரை ஏன் அப்படி விரட்டினே? வீட்டை விக்காட்டி உனக்கு எப்படியம்மா கல்யாணம் செய்ய முடியும்?''

''அத்தை இந்த வீட்டை விற்று அந்தப் பணத்திலே எனக்கொரு கல்யாணம் தேவையில்லை. அப்பா இந்த வீட்டைக் கட்ட என்ன பாடுபட்டார்னு உங்களுக்குத்தெரியும். இங்கே உள்ள ஒவ்வொரு கல்லும் அவர் பயிராக்கின ஒவ்வொரு செடியும் கதைகளாக எனக்கு அவர் பட்ட கஷ்டங்களையெல்லாம் சொல்றது அத்தை. இதையெல்லாம் புரிஞ்சு கொண்டு அப்பாவின் உணர்வுகளை மதிக்கத் தெரிஞ்சவர்கிட்டத்தான் இந்த வீட்டை ஒப்படைப்பேன்.''

''இப்படி நீ பேசிக்கிட்டிருந்தா முடிகிற காரியமாம்மா? எனக்கு வயசாச்சே... என்னை நம்பிக்கிட்டு நீ இங்கே எப்படியம்மா தனியா இருப்பே?''

''எனக்கு ஒரு துணை வேணும்னு சுயநலமா நான் வயசுக் காலத்திலே உங்களை அனாதையா விட்டுட்டுப் போகணும் என்கிறீங்களா? அக்காமார்கள் ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக் கொண்டு போய் விட்டாங்களே. அங்க வீட்டிலே நானோ, அப்பாவோ நீங்களோ ஒரு பத்து நாள் போய் இருக்க முடிஞ்சுதா? அப்படி இருக்கச்சே என்னைக் கட்டிக்கப் போறவன் என் அத்தையை வச்சுக் கடைசிவரை காப்பாத்துவானு? எங்களோடவே ஐக்கியமாகிவிட்ட என் அத்தை, என் செல்லக்குட்டி, என் அருமை ஸாம்சன் இத்தனை பேரையும் விட்டு நான் பிரிய மாட்டேன் அத்தை — பிரியவே மாட்டேன்.''

''என்னம்மா உளர்றே?'' — சொல்லிக் கொண்டே அருகில் வந்த அத்தையைச் சந்தியா இறுக்கமாக அணைத்துக் கொண்டாள்.

''உண்மையைச் சொல்லுங்க அத்தை! இந்த வயசுக் காலத்திலே இந்த வீடும் நானும்இல்லாட்டா நீங்க எங்கேபோவீங்க?'' அழுகையில் குலுங்கினாள்.

''தெரியலேம்மா... எனக்கு இந்தக் குடும்பத்தைத் தவிர — இந்த வீட்டைத் தவிர வெளி உலகமே தெரியாதே... நான் என்ன செய்வேனு தெரியாது.'' ஜகதாவும் துயரத்தைத் தாள முடியாது விசும்பினாள்.

(தொடரும்)


சுருக்கமெல்லாம் நொடியில்
பறந்துவிடும்.
ஸில்க்
ரேயான்
சிறந்ததையே bajaj பஜாஜ்
வாங்குவீர் வாங்குவீர்
Heros'-BE-592 TAM



கிளி

ஜெயந்தன்

1

அம்மா உனக்கிது பெருந்துயரமாச்சே!

“பெர்னார்ட்ஷாபெர்னார்ட்ஷானு ஒருத்தர்இருந்தார் தெரியுமா?''

இதற்கு சுலோசனா வாய் விட்டுச் சிரித்தாள்.

''தெரியாது. சொல்லுங்க.''

''அவர் கற்பைப் பத்தி ஒண்ணு சொல்லியிருக்கார்.''

''என்ன சொல்லியிருக்கார்?''

“Chastity is nothing but lack of opportunity இதுக்கு அர்த்தம் தெரியுமோ?''

''தெரியாது ரகு. நீங்கதான் பி.ஏ. லிட்டரேச்சர் படிச்சவனபெர்னார்ட் ஷானு ஒருத்தர் இருந்தார் தெரியுமானு கேட்டுட்டிங்க. அப்பறம் அவனுக்கு அர்த்தம் மட்டும் தெரியுமாக்கும்?''

''பி.ஏ. படிச்சா பெர்னார்ட் ஷா தெரிஞ்சிருக்கணும்னும் அர்த்தம் இல்லே.''

''பி.ஏ. படிச்சாஅர்த்தம் தெரிஞ்சிருக்கணும்னும் அர்த்தம் இல்லே!''

''பின்ன பி.ஏ.யில என்னதான் படிக்கிறீங்க?''

''பி.ஏ. படிக்கிறோம்.'' – சொல்லிவிட்டு மீண்டும் அவள் கலகலவென்று சிரித்தாள். அவள் அப்போது இப்படி அரைகுறைகளுக்கெல்லாம் கூட கலகலவென்று சிரிக்கும் ஒரு கிளர்ந்த மனநிலையில் இருந்தாள். இந்த மனநிலை ரகு அவளோடு பேசும்போதெல்லாம் இவளுக்கு வந்து விடுகிறது. இதற்குப் பாதிப் பொறுப்பு இவளது பொதுவான இயல்பு. பாதிப் பொறுப்பு ரகுவின் அசாதாரணமான சுவையான பேச்சு.

''தெரியுமோ தெரியாதோ, சொல்றேன் கேளு.? Chastity is nothing but lack of opportunity-னு கற்பெனப்படுவது யாதெனில் சந்தர்ப்பமென்பது இன்மையாம்.''

''நல்ல வேளை. பெர்னார்ட் ஷா செத்துப் போயிட்டாரு இல்ல?''

''ஆமா, ஏன்?''

''இருந்தா வண்டன் போயே அவருமண்டையை ஒடச்சிட்டு வந்திருப்பேன்.''

''மண்டைய ஒடச்சுட்டாப் போதுமா? கருத்து ரீதியா அவருக்கு ஒன்னோட பதில் என்ன?''

அவள் திடீரென்று முகம் மாறி, சீரியஸாக, ''நான்தான் பதில்.'' என்றாள்.

ரகு கொஞ்ச நேரம் திகைத்து விட்டான். அவன் எதிர்பார்க்கவில்லை. அவன் இழுத்தான். ''நான்தான் பதில்னு....?''

''இப்ப, நான் ஒரு கன்னிப் பொண்ணு. இங்க இருக்கேன். நீங்க ஒரு வாலிபன். எதிரில் இருக்கீங்க. இப்ப இந்த ரூம்ல நம்ம ரெண்டு பேரையும் தவிர வேற யாருமில்லே. நாம எப்படி நடந்துக்கிட்டாலும் நம்மைத் தடை செய்ய எந்த விஷயமும் இல்ல. ஆனா, நான் உங்க எதிரில, மேஜைக்கு இந்தப்புறமா உக்கார்ந்துமட்டும்இருக்கேன். தெரியுதாஎன்னோட பதில்?''

ரகுசிறிது நேரம் யோசனையில் இருந்தான்.

''Of course you are correct now.... But.... சுலோசனா, எதுக்குமே ஒரு டிகிரி அல்லது ரேஞ்ச் இருக்கு இல்லியா? அது போலத்தான் சந்தர்ப்பத்துக்கும்?'' என்ற ரகு இளம் புன்னகையோடு: ''ஒருத்தருக்கு முதல் சந்தர்ப்பமே போதுமானதாக இருக்கலாம் ஒருசிலர் முதல் சந்தர்ப்பங்கள்ன தாக்குப் பிடிச்சுக்கலாம். ஆனா தொடர்ந்து எல்லாச் சந்தர்ப்பங்கள்ளயும் எல்லாரும்....''

''டேம் நான்சென்ஸ். இப்ப நான் ஒங்க மண்டையை ஒடைக்கப் போறேன்.''

''சாரி மேடம். அதுக்கில்ல. ஒரு வாதம்னு நான் என் கட்சியை நிலைநாட்ட வேண்டியவனா இருக்கேன். Say for example இப்ப. இந்த எடத்திலேயே கூட நான் சொல்லலாம். இப்ப இங்க எனக்குப்பதிலா என்னைவிட அழகு, ஆகிருதி, கவர்ச்சியா, உன்னோட மன இயல்புக்கு ஏற்ற மாதிரி, உணர்வுகளை சுண்டி விட்டுடக் கூடிய வேற ஒரு ஆள் இருந்துட்டான்னு வச்சுக்க. அப்புறமும் நீ மேஜைக்கு அந்தப் பக்கம்.... தான்னு....?''

சுலோசனாவின் முகம் வெடிப்பது போலக் கடுமையாகியது. “Shut up” என்றாள். அப்புறம் அந்த முகம் தணியவே கொஞ்ச நேரமானது. பிறகு உணர்ச்சியும் கிளர்ச்சியுமாகச் சொன்னாள்: ''எனக்கு ஒங்கள விட அழகும் கவர்ச்சியும் கிளர்ச்சியும் ஊட்டக் கூடியவனுமான வேற ஒரு ஆள் கன்ல பட முடியாது ரகு.''

ரகு மனத்தில் குறித்துக் கொண்டான். 'இவள் ரொம்பவும்தான் உணர்ச்சி வசப்படுகின்றாள்.'

''தேங்க்யூ சுலோசனா. எனக்குத் தெரியாதா என்ன? சும்மா ஜோக். அதிருக்கட்டும். இந்த பெர்னார்ட்ஷா விஷயத்த இன்னொரு எடத்துல சொன்னப்ப என்ன நடந்ததுனு கேளு.''

சுலோசனா மீண்டும் கலகலப்பாகி, ''சொல்லுங்க'' என்றாள்.

''அது ஒரு ஏழெட்டுப் பேரு இருந்த இடம். பெண்களும் ரெண்டு மூணு பேர் இருப்பாங்க. நான் Nothing but lack of opportunityனு சொன்னதும் எல்லாருக்கும் முகம் விழுந்து போச்சு. இவ்வளவுக்கும் அவங்க ஒண்ணும் சுத்த சனாதனிகள் இல்லே. உலக நெலமை

தெரிஞ்சவங்கதான். ஆனாலும் கற்பை இந்த மாதிரி ஒரேயடியா Strike out பண்ணிறதுல அவங்களுக்குச் சம்மதமில்ல. ஒருத்தர் ரொம்பக் கவலையும் யோசனையுமா ''அப்பிடி... நூத்துக்கு நூறுன்னு சொல்லிட முடியுமானு இழுத்தாரு. எனக்கு அவரப் புரிஞ்சு போச்சு. அட வாய்க்காலம் கெட்ட பயலே, கொறஞ்ச பட்சம் சொல்ற ஒனக்காகவும் கேக்குற எங்களுக்காகவுமாவது கொஞ்சம் விதிவிலக்கு விடக்கூடாதான்னு கெஞ்சுறார்னு. நான் உடனே அது சரி, அஞ்சு பெர்ஸண்ட்னாலும் சுத்தமானவங்க இருக்கத்தான்செய்வாங்கனு சொன்னேன். எல்லாத்துக்கும் முகம் பழய படியாயிடுச்சு. அவங்களும், அவங்க பெண்டு பிள்ளைகளுமாவது ஒளிஞ்சுக்க ஒரு படுதா கெடச்சிருச்சே. 'சரிதான், சரிதான்'னுங்க நான் தேங்க்ஸ் ஃபார் திஸ் ஃபைவ் பெர்சண்ட். இதுதான் இப்ப ஒங்களையும் என்னையும் காப்பாத்துனதுன்னேன். சிரிச்சாங்க. அப்புறம், 'இந்த அஞ்சு பர்செண்ட் ஒரு ஆபத் சகாயனாக நின்று, எங்கெல்லாம் பெர்னார்ட் ஷாவின் இந்த மொழி கர்ஜிக்கப்படுகிறதோ அங்கெல்லாம், அங்கிருப்பவர்களைக் காப்பாற்றட்டும்'னு நான் சொன்னதும் ரொம்பச் சிரிச்சுட்டாங்க.

''எவ்வளவு ஹை ஜோக் அடிச்சிருக்கேன்! நீ சிரிக்க மாட்டியே!''

''சுத்தப் பேத்தல்களுக்கெல்லாம் நான் சிரிக்கிறதில்லே. அது சரி ரகு, நீங்க ஏன் அடிக்கடி இந்தக் கற்பைப் பத்தியே பேசிக்கிட்டு இருக்கீங்க?''

''கண் முன்னால நின்று வழி மறிக்கிற எதிரியப் பத்தி ஒரு மனுஷன் எப்பிடிச் சிந்திக்காம இருக்க முடியும்?''

''அது என்ன உங்களை வந்து வழி மறிச்சுது?''

''இப்பவே பாரேன், உன்னையும் என்னையும் மேஜையில ஆளுக்கொரு பக்கமா உக்கார வச்சிருக்கிறது அதுதானே?''

''டட், நான் சென்ஸ். உங்ககிட்ட இது உள்ளபடி பெரிய வீக்னஸ் ரகு. நீங்க ஒரு அற்புதமான ஓவியனா இருக்கறதுக்கும், அறிவார்த்தமா அழகா பேசறதுக்கும், இதுல மட்டும் முந்தி முந்தி இடறி விழுறதுக்கும் எவ்வளவு முரண்பாடு இருக்கு தெரியுமா?''

''எனக்குக்கூட அப்படித்தான் இருக்கு கலோ. நீ ஒரு அற்புதமான பெண்ணா இருக்கிறதுக்கும், அறிவார்த்தமா, அழகா, இனிமையாப் பேசறதுக்கும், இதுல மட்டும் கல்யாணம் செய்துக்கப் போறவன் கிட்டயே டாட்டா காட்டிட்டுப் போயிடறதுக்கும் எவ்வளவு முரண்பாடு இருக்கு தெரியுமா?''

கலோசனா இவனிடம் பேசிப் பயனில்லையென்று உதட்டைக் கடித்தபடி ''அப்ப நான் எடத்தைக் காலி பண்றதுதான் உத்தமம்னு நெனைக்கிறேன்'' என்றாள்.

''இன்னொரு விஷயம் கலோ.''

''என்ன?''

''அன்னிக்கு நீ Sexual play is a part of married life onlyனு (உடல் உறவென்பது திருமண வாழ்க்கையில் உள்ள அதன் ஒரு பகுதி மட்டுமே) சொன்னே இல்லியா?''

''ஆமா.''

''நான் பின்னாடி யோசிச்சதில அது சரிதான்னு பட்டது.''

''அம்மாடி! ரொம்ப தேங்க்ஸ் சாமி.''



''ஆனா திருமண வாழ்க்கைன்னு என்ன அப்படீங்கறதுல மட்டும் எனக்கொரு சந்தேகம் அல்லது திருத்தம்.''

''என்ன?''

''திருமண வாழ்க்கை எப்ப ஆரம்பிக்குதுன்னு, தாலி கட்டுனதும்னு எல்லாரும் சொல்றாங்க இல்லியா?''

''ஆமா.''

''அது ஏன், ஒரு ஆணும் பெண்ணும் கல்யாணம் செய்துக்க முடிவு கட்டிட்ட அந்த நிமிஷத்துல இருந்துன்னு வச்சுக்கக்கூடாது?''

''You scoundral'' — சுலோசனா மேஜை மலர் ஜாடியில் இருந்த பூக்கொத்தை எடுத்து அவன் முகத்தில் எறிந்துவிட்டு, கதவு நிலைக்கு வந்ததும் திரும்பி நாக்கு நீட்டிப் பழிப்புக் காட்டிவிட்டு வெளியேறினாள்.

இன்னொரு நாள்.

சுலோசனா கேட்கிறாள். ''எனக்கென்னவோ புதுப் பேரு ஒண்ணு கண்டு பிடிக்கப் போறதாச் சொன்னீங்களே என்னாச்சு?''

''கண்டு பிடிச்சுட்டேன்.''

''என்னது?''

''அத நீ கண்டு பிடியேன் பார்க்கலாம்.''

''ரோஜா.''

''சைத்தான். உன்னையும் என்னையும் சேர்த்து இன்ஸல்ட் பண்ணாதே!''

''ஏன்?''

''இருந்திருந்து, போயும் போயும் உனக்கு ஒரு ரோஜான்னுதானா பேரு வைப்பேன்?''

''பின்னே?''

''முயற்சி பண்ணு. ஆனா உன்னால முடியாதுதான்.''

''ஏதோ ஒண்ணு. வைரம், வைடூரியம், நட்சத்திரம், நிலா, கடல், சுரங்கம்னு, பின்னே என்ன இந்த உலகத்திலே இல்லாத ஒண்ணையா வச்சுடப் போறீங்க?''

''கரெக்ட். இந்த உலகத்திலே இல்லாத ஒண்ணுதான்.''

''சொல்லித்தான் தொலையுங்களேன்.''

''நேமி.''

''நேமியா?''

''ஆமா.''

''நேமினா?''

''இந்த உலகத்திலே இல்லாதது. எந்த மொழியிலயும் இல்லாதது.''

''என்ன உளர்றீங்க?''

''எஸ் மை நேமி. உன் அழகு, உள்ளம், பேச்சு, சிரிப்பு உணர்வு நிலை எல்லாம் என் நெஞ்சில வார்த்திருக்கிற ஓவியத்துக்கு நிகரா எந்தப் பொருளும் எனக்குப் படல. நீ சொன்னபடி இந்த ரோஜா, மயில், குயில் எல்லாம் உனக்குப் பெயராச்சுனா அதெல்லாம் உன்னைக் கொச்சப் படுத்துமே தவிர சிறப்புச் செய்யப் போறதில்ல. அதுனாலதான் புதுச் சொல்லாவே ஒண்ணு கண்டு பிடிச்சேன். 'நேமி' காரணப் பேரு இல்ல. இடுகுறிப் பெயர். நேமின்னா நீ. முழுக்க நீ. அது சுலோசனா கூட இல்ல.''

அவனது சொற்களை விட அவனது குரலில் ஏதோ ஒன்று ததும்பியதாக அவளுக்குப் பட்டது. அவளுக்கு நெகிழ்ச்சியாகி வந்தது. அவன் கையை எடுத்து முதன் முறையாக முத்தமிட்டாள்.

''தேங்க்யூ நேமி.'

பின் அவள் தன் கரத்தை நீட்டினாள். ஆனால் அவன் அதை எடுத்துக் கொள்ள வில்லை.

''ப்ளீஸ் ரகு.''

தொடர்ந்து அவன் பேசாமல் இருந்தான்.

அவள் மேஜையைச் சுற்றி வந்து அவன் முன்னால் வந்து நின்று மீண்டும் கரத்தை நீட்டினாள்.

அவன் புன்னகை செய்யக் கூட இல்லை.

கிடைக்காத ஏமாற்றத்திலும் தோல்வியிலும் அவள் அவனது தோள்களைப் பற்றி அவன் உதட்டருகே தனது கன்னத்தைக் கொண்டு போனாள்.

அவன் மரமாக நின்றான்.

அவள் கோபம் கொண்டவளைப் போல் ஒரு வெறியோடு அவன்முகம் பிடித்துத் தனக்குக் கிடைக்காததை அவனுக்குக் கொடுத்தாள்.

அவன் இன்னும் மரமாகவே நின்றான்.

அவள் அவனது கழுத்தில் விழுந்து கரங்களால்

கலெக்டர் கொடுத்த மரியாதை!

1939ம் வருடம் சேலம் ஜிம்கானா கிளப்பில் நான் ஒரு கிரிக்கெட் ஆட்டக்காரன். ஒரு ஞாயிற்றுக் கிழமை திரு ஏ. எல்ப். டபிள்யூ. டிக்ஸன், ஐ.ஸி.எஸ். (சேலம் கலெக்டர்) தலைமையில் கிருஷ்ணகிரிக்குக் கிரிக்கெட் மாட்ச் விளையாடச் சென்றோம். நாங்கள் முதலில் பேட் செய்ய ஆரம்பித்தோம். கிருஷ்ணகிரி கிளப்புக்காக பெங்களூரில் இருந்து வந்த வேகப் பந்து வீச்சாளர்களின் பந்தில் முதல் ஐந்து ஆட்டக்காரர்கள் குறைந்த ரன்களில் ஆட்டம் இழந்தார்கள். நான் ஆறுவதாகச் சென்றேன். வெளியூரில் நான் ஆடும் முதல் மேட்ச் அதுதான். முதலில் எனக்குச் சிறிது பயம் இருந்தாலும் பின் தைரியத்துடன் பந்தை விக்கெட்டின் எல்லாப் பக்கங்களிலும் அடித்து வேகமாக ரன்களைக் குவிக்க ஆரம்பித்தேன். எனக்குப் பார்ட்னராக ராமசாமி என்பவரும் உறுதியுடன் ஆடினார். என் ரன்கள் 50ஐத் தாண்டியது. ஒரு பந்தை வேகமாக அடிப்பதற்குப் பதிலாக விளையாட்டுத்தனமாக மெதுவாக அடித்ததால் பந்தை பாயிண்டில் இருந்தவர் லாகவமாகக் கீழே விழுந்து பிடித்து அவுட் செய்து விட்டார். நான் பெவிலியனுக்குப் பாதி வழி வரும்போது தாம் ஒரு ஜில்லாக் கலெக்டர் என்பதையும் மறந்து எனது கேப்டன் திரு டிக்ஸன் ஓடிவந்து என்னைக் கட்டிப் பிடித்துத் தூக்கிச் சென்று அவருடைய தனிக் கூடாரத்துக்கு அழைத்துப்போய்ப் பலத்த உபசாரங்கள் செய்தார்.

பீ. வடிவேலு





ஆரோக்கியம், ஆனந்தம், ஒன்றுக்கொன்று ஆதாரம்!
Bournvita
Bournvita
போர்ன்விடா பருகுங்கள்.
உங்கள் குடும்பத்தினருக்கு இன்சுவைமிக்க போர்ன்விடா வழங்குங்கள். போர்ன்விடாவில் கோகோ, மால்ட், பால் மற்றும் சர்க்கரையின் நற்பண்புகள் நிறைந்துள்ளன. நூறு ஆண்டுகளுக்கும் மேலாக உணவுப்பான நிபுணர்கள்-காட்பரி தயாரித்து அளிப்பது.
காட்பரிஸ் போர்ன்விடா
உங்களோடு வளரும் நன்மை
Bournvita
Bournvita
மிச்சப்படுத்துங்கள் பணத்தை...
OBM/7539/TM

WHY Shriram CHITS


are safe, more profitable, most attractive!

Instant lump sums?
Handsome earnings?
Shriram Chits meet your needs handsomely.

Here's how :

• Wide variety of Chit Groups: see the table below and choose yours • Lump sum amounts when you need them most • Dividends up to 24% • No ceiling on bidding • Caution Deposit system prevents uneconomical biddings • Prompt payments, personalised service • Full security of capital—only sound

And proven integrity!
Check with existing members.
Come over any day and ask our members about their faith & experience.



Branch at
54, North Usman Road
T. Nagar, Madras-17

Groups :

Rs.	125 x Months 40	–	Rs.	5,000
Rs.	250 x Months 40	–	Rs.	10,000
Rs.	400 x Months 25	–	Rs.	10,000
Rs.	625 x Months 40	–	Rs.	25,000
Rs.	1,250 x Months 40	–	Rs.	50,000
Rs.	2,500 x Months 40	–	Rs.	1,00,000

Write for detailed information & Free Brochures etc.

Shriram
Chits & Investments Private Limited
123, Angappa Naicken St.,
Madras 600 001.
Phones: 37890, 28545

ADWAVE/SCI/1490

கட்டிக் கொண்டு சந்தபோதிலும் அவன் அப்படியே இருந்தான்.

அவள் திரும்பி வந்து தனது நாற்காலியில் உட்கார்ந்தபோது அவனும் உட்கார்ந்து கொண்டான்.

ஒரு நிமிஷம் மௌனத்தில் போனது.

''தேங்க்யூ ரகு.''

''எதுக்கு?''

''என் உணர்ச்சிவசப்பட்ட நிலையை நீங்க பயன்படுத்தியிருக்கலாம் இல்லையா?''

''ஓ. அதுக்கா?'' — அவன் மெல்லச் சிரித்தான்.

''முன்னெல்லாம் நீங்க துடிச்சுக்கிட்டு இருப்பீங்க. இப்ப எப்படி உங்களுக்கு இந்த அடக்கம் சாத்தியமாச்சு?''

''இது சகஜம் தேமி. கை நீட்டிக் கை நீட்டி ஏமாந்து போனவன் ஒரு கட்டத்துல இனி கைநீட்டறதில்லேன்னு ஒரு தீர்மானத்துக்கு வரத்தான் செய்வான்.''

கலோசனு பின்னும் நெகிழ்ந்த காதலோடும் அனுதாபத்தோடும் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''ஆல்ரைட் தேமி. இன்னும் என்ன ஆஃப்டர் ஆல் ரெண்டு வருஷம்தானே இருக்கு. தாக்குப் பிடிச்சுடலாம்.''

''ரெண்டுவருஷமா? அது என்ன கணக்கு?''

''நீ சொன்ன விஷயங்களை வைச்சுப் பார்த்தா உன் அக்கா மாரேஜ் முடிய இன்னும் இரண்டு வருஷம் ஆகலாம் இல்லையா?''

''ஓ. அதுவா, அது அவ்வளவு நாள் ஆகாது ரகு.''

''அப்பிடியா? எவ்வளவு நாளாகும்?''

அவள் யோசித்தபடி ''ஒரு வருஷம் வேண்ணா ஆகலாம்'' என்றாள். ஆனால் அவள் பின்னும் போட்டுப் பார்த்துக் கொண்ட கணக்கில் இரண்டு வருஷம் ஆனாலும் ஆகலாம் என்றுதான் தோன்றியது. உள்ளே அவளே மலைத்தாள். இன்னும் இரண்டு வருஷங்கள்! இந்த உடலோடு போர் தொடுத்திருக்கும் காதல் வாழ்க்கையோடு. அது இருபது வருஷம் போல நின்று கொன்றாலும் கொல்லலாம்.

என்ன செய்வது?

பின்னுமொரு நாள்.

கடற்கரையில் அந்தி மயங்கும் நேரத்தில் இல்லாத எதிரியோடு மானசீகமாகக் கத்தி வீசிப் போய்க் கொண்டிருந்த குடிகாரன் ஒருவனின் ஆபாச வசைத் தொடர் ஒன்று கலோசனுவைக் கூச்சப் படுத்தியது. பக்கத்தில் ரகுவும் இருக்கவே. அது நாணமும் படுத்த அவள் மெல்லிய புன்னகையோடு தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். ரகுவும் அந்தத் தொடருக்குப் புன்னகை செய்யவே செய்தான் என்றாலும் பின் மெல்லச் சிரிக்க ஆரம்பித்துக் கடகடவென்று சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீங்க ரகு?''

''ஒன்னுமில்லே தேமி.'' —சொல்லிவிட்டு அவன் சிரிப்பை அடக்கிக் கொண்டாலும் அவன் உள்ளேயே சிரிப்பது தெரிந்தது.

''அட சொல்லுங்களேன்.''

''உனக்குச் சம்பந்தமில்லை தேமி.''

''என்ன எனக்கு மட்டும் சம்பந்தமில்லாமப் போயிடும்?''

''சொன்னா அடிக்க வந்துடுவே.''



அதிசய சம்பவம்

1959ம் வருடத்தில் மதுரை இங்கிலீஷ் மைதானத்தில் லீக் மேட்ச் விளையாடியபோது ஒரு சம்பவம். எங்களுக்கும் (கிரிக்கெட் கிளப் ஆஃப் மதுரை) வெட்ரன்ஸ் கிரிக்கெட் கிளப்புக்கும் பந்தயம். எதிர்த் தரப்பில் பிரபல ஆட்டக்காரர்களான திரு என். கண்ணாயிரம், பால், பி.வி.எஸ். மணி போன்றவர்கள் இருந்தார்கள். நாங்கள் முதலிலே பாட் செய்து 96 ரன்கள் எடுத்தோம். எங்கள் எதிர்க் கட்சி 89 ரன்கள் எடுத்து இரண்டு விக்கெட்டுகளை இழந்தவர்களாகவே ட்ரிங்க்ஸுக்கு முன்பாக (3 மணிக்கு) இருந்தார்கள். திடீரென்று மேலும் ஏழு பேட்ஸ்மென்கள் அவுட்டாகி விட்டார்கள். இதற்கிடையில் அவர்களுடைய ஸ்கோர் 89லிருந்து 95க்கு வந்து ஒன்பது விக்கெட் நஷ்டத்திற்கு உள்ளானார்கள். கடைசி பாட்ஸ்மேன் அவுட்டாகப் போகும் தருவாயில் அம்பயர் பௌலருக்கு நோ பால் கொடுத்தார். இதனால் இரு கட்சிகளும் ஒரே ரன்கள் வந்தோம். அடுத்த பந்தில் நோ பால் போட்ட பௌலர் கடைசி ஆட்டக்காரரை பௌல்டு செய்து ஒருவருக்கும் வெற்றி இன்றி டிரா ஆகிய சம்பவம் இன்றும் நினைவில் இருக்கிறது. இந்த ''டை'' பிரபலமானது. மெல்போர்னில் ஆஸ்திரேலியாவுக்கும் மேற்கிந்திய தீவுகளுக்கும் நடந்த உலகப் பிரசித்த சம்பவத்துக்கும் முன்பாகவே நடந்தது.

கே. வி. சந்தரராஜன்

''என்னது ரொம்பத்தான் பிகு பண்றீங்க?''

''அது ஒரு கதை தேமி. இந்தக் குடிகாரன் உதுத்துட்டுப் போறானே, அந்தத் தொடரை வச்ச.''

அவளுக்கும் அந்தக் கதை ஞாபகமாகவே அவள் தன்னை அறியாமல் 'ச்சீ' என்றாள்.

''என்னது உனக்கும் அது தெரியுமா?''

இப்போது கலோசனுவுக்குத் தனக்கு அது தெரிய நேர்ந்திருந்ததே வெட்கமாகப் போய்விட்டது. அவள் குறுகிக்கொண்டாள்.

''பெண்கள் வரைக்கும் இந்தக் கதை வந்திருக்கிறது ஆச்சரியம்தான்.''

''நான்எட்டாவதோஒன்பதாவதோ படிச்சப்ப குத்ரா குத்ரானு ஒரு கழுத இருந்தா. அவளுக்கு இதெல்லாம் எங்கிருந்து கெடைக்குமோ திமிர்னு எதையாவது ஒரு கதையைச் சொல்லி எங்களை அதிர அடிச்சுடுவா. அவளுக்குக் கதையைச் சொல்றதுல ஒரு பங்கு சந்தோஷம்னு கதையக் கேட்டு நாங்க அலறி

யடிச்சு ஓடறதைப்பாக்குறதுல பத்து மடங்கு சந்தோஷம் போல இருக்கும்.''

இதன் பின் ரகு வினயமான அமைதியுடன் கேட்டான்: ''அவ இந்த மாதிரி எத்தினி கதை சொல்லியிருப்பா?''

''ஒரு ஏழெட்டு இருக்கும்.''

''எல்லாத்துக்குமா அலறியடிச்சு ஓடினீங்க?''

''ஆமா.''

''அது சரி, மொதல் ஒண்ணு ரெண்டு கதைக்கி அலறியடிச்சு ஓடினது சரி. ஏன்னா அப்ப அவ என்ன சொல்லப் போறான்னு உங்களுக்குத் தெரியாது. ஆனா அப்புறம்தான் அவ என்ன சொல்லிமுடிப்பான்னுதெரியுமே. மொதல்லயே ஐயையோன்னு ஓடியிருக்க வேண்டியதுதானே? ஏன் ஒவ்வொரு தடவையும் முழுக்கக் கேட்டுட்டு ஓடுனீங்க?''

பல் போச்சு அழகு வந்தது!

அன்று நான் கோவை ஆர். எஸ். புரம் அரசினர் பள்ளியில் ஒன்பதாவது வகுப்பு மாணவனாக இருந்தேன். அங்கு ஆர். எஸ். புரம் வட்டாரக் கிரிக்கெட் குழு ஒன்று இருந்தது. நான் அதன் துணைக் காரியதரிசி. ஒரு முறை எங்கள் குழுவுக்கும் பொள்ளாச்சியிலிருந்து வந்த ஒரு குழுவுக்கும் மாட்ச் ஆரம்பமாகியது. நான் சுழல் பந்து வீசுவதில் வல்லவன். எனினும் என்னை ஓபனிங் பாட்ஸ்மேனாக மைதானத்துக்கு அனுப்பினார்கள். எதிர்க் குழுவின் வேகப் பந்து வீச்சாளர் ஒருவர் பந்து வீச ஆரம்பித்தார். முதல் ஓவரில் மூன்று பந்துகள் பேய் வேகத்தில் வந்தன. எனக்கு என்ன செய்வது என்றே தெரியாமல் எப்படியோ ஆடினேன். அடுத்த பந்து ஒன்று 'விர்' என்று வந்தது. விக்கெட் விழுவதற்குப் பதிலாக என் முன் பற்கள் இரண்டும் தெறித்து விழுந்தன. முகமெல்லாம் ரத்தம். நான் நினைவிழந்து விட்டேன். அவ்வளவுதான். அடுத்த பத்து நாட்கள் நான் படுக்கையில் இருந்தேன். முகமெல்லாம் வீக்கம். ஆனால் நான் சந்தோஷமாக இருந்தேன். ஏன்?

கல்யாணராமன் படத்தில் கமலஹாசன் எப்படி வருகிறார்? முன் பற்கள் இரண்டு நீண்டு முக அழகைக் கெடுத்துக் கொண்டு இருக்கிறதே. அதேபோல் எனக்கும் இரண்டு பற்கள் நீண்டு இருந்தன. பல் டாக்டரிடம் போய் அவைகளைச் சரி செய்ய எண்ணியிருந்தேன். ஆண்டவனே பார்த்து அவைகளை அவுட் ஆக்கிவிட்டார். நான் ஏன் மகிழ்ச்சி அடைய மாட்டேன்? பிறகு என் முக அழகுக்கு ஏற்ப இரண்டு செயற்கைப் பற்களை டாக்டர் அமைத்து அழகு படுத்திவிட்டார். என் முகம் கண்ணாடியில் பார்த்து நானே பாராட்டும் அளவு அழகு பெற்றது.

-சி. ஆர். ராமச்சந்திர மேனன்



கலோசனா நாக்கைக் கடித்துக் கொண்டாள். ''அது என்னவோ தெரியல.''

''சரி நேமி, ஒரு விஷயத்துக்கு நீ மறைக்காமப் பதில் சொல்லணும். ஏன்னா இது ஒரு பொதுவான மன இயல் விஷயம். டாக்டர் கின்ஸீஸ் ரிப்போர்ட்ல அந்த டாக்டர் குழு சொல்லுது: பெண்ணுக்கு உடல் உறவு இன்பத்துல அதிகம் கிளர்ச்சி தரக்கூடிய மூணு அம்சங்கள்ள இந்த இரவுக் கதைகள் அதாவது Nocturnal Storiesம் ஒண்ணாம். அது நெஜம்தானா?''

''என்னைக் கேட்டா?''

''அட, உன்னைக் கேட்டா உண்டு இல்லேன்னு பதில் சொல்லேன். அப்பப் பள்ளிக்கூடத்திலேயோ இல்லாட்டி இப்ப நெனச்சுப் பாக்குறபோதோ அறிவு வந்து ஆகாதுன்னு சொன்னாலும் உணர்வு சலனப்படுதா இல்லியா?''

கலோசனா முந்தானைத் தலைப்பால் போர்த்தி முழங்கால்களில் முகம் பதித்தவளாக, ''கொஞ்சம் சலனப்படத்தான் செய்யுது'' என்றாள்.

சிறிது நேரம் இரு தரப்பிலும் பேச்சில்லை. பிறகு கலோசனாவே கேட்டாள்: ''கின்ஸி ரிப்போர்ட் சொல்றபடி பெண்களுக்கு செக்ஸ் கிளர்ச்சி தரக் கூடிய மத்த ரெண்டு அம்சங்கள் என்ன ரகு?''

''இன்னொண்ணு அவன் சினிமாவச் சொல்றான்.''

''சினிமாவையா சொல்றான்?''

''ஆமா. ஆச்சரியமா இல்லே?''

''மூணாவது அம்சம்?''

ரகு சட்டென்று ஏதும் தயக்கமோ கூச்சமோ இன்றி அதைச் சொன்னான். இது கலோசனாவை உலுக்கி விட்டது. அந்த உறவு முறை விளையாட்டை அவன் தன்னிடம் நிகழ்த்தி விட்டதே போல், நாளங்கள் கொள்ளாது ரத்தம் கொப்பளித்து நுரைக்க அவள் உள்ளே படபடவென்று ஆடினாள்.

''நேமி.''

பதில் இல்லை.

''கலோ!''

பதில் இல்லை.

பின் அவளாக அழைத்தாள். ''ரகு!''

''ம்?''

''அன்னிக்கு நீங்க ஒண்ணு சொன்னீங்களே?''

''என்ன?''

''திருமண வாழ்க்கைங்கறது ரெண்டு பேர் கல்யாணத்துக்குத் தீர்மானம் பண்ணிட்ட அந்த விநாடியிலே இருந்து ஆரம்பமாகுதுன்னு...''

''ஆமா.''

''அதையே நாம ஏத்துக்கலாம்போல இருக்கு.''

''நேமி....''

''ஆமா ரகு!'' — அவள் அவனது மடியில் விழுந்தாள்.

எங்கிருந்தோ வேக வேகமாக வந்த அலை ஒன்று கரையேறி வந்து இவள் காலருகில் நின்று 'அடிப் பாவி மகளே! இது உனக்குப் பெரும் துயரமாச்சே' என்று முணு முணுத்து விட்டுப் பின் பின்வாங்கிப்போய்க் கரைந்தது.

(தொடரும்)


மங்கல மதிமுகத்தில் மெருகூட்ட
ஐடெக்ஸ்
டீலக்ஸ் குங்குமம்
matt finish
EYETEX
ஐடெக்ஸ்
சென்னை 600 033


நினைவெல்லாம் நித்யா
1
சித்திரம்:
கதை:
அபர்ணா நாயுடு
கடவுளே! எனக்குப் புத்தி வந்துருச்சு. இனிமே சத்தியமா இந்த மாதிரி விவகாரத்திலே எல்லாம் ஈடுபட மாட்டேன்...
TELEPHON
நல்ல வேளை, தப்பிச்சுட்டேன். அவன் என்னைத் துரத்திக்கிட்டு வரல்லை. ரமேஷுக்குப் போன் செஞ்சு, அவரை உடனே வரச் சொல்லணும்...
உண்மை தெரிஞ்சா ரமேஷ் எரிமலையா வெடிப்பாரு. ஆனா வேறே வழியில்லே... கடவுளே! அவர் இப்போ வீட்டிலே இருக்கணுமே!
இந்த நேரத்திலே யார் கூப்பிடறாங்க? நிச்சயமா நித்யாவா இருக்க முடியாது... ம்... அவதான் கொஞ்ச நாளா ஒதுங்கிப் போயிட்டாளே! அப்போ.. வேற யாரு?
ஹலோ! யாரு?
ரமேஷ்! நான்தான்... நித்யா பேசறேன்... ஒரு ஆபத்திலே இருக்கேன். நீங்கதான் உதவி செய்யணும்...


ஓ! நித்யாவா! ம்... திடீர்னு, 'ஆபத்பாந்தவா.. அநாதரட்சகா'ன்னு கூப்பிட்டவுடனே ஓடி வரதுக்கு நான் ஒண்ணும் கருட வாகன நாராயணன் இல்லே... வெறும் ரமேஷ் தான்!
உங்க கோபம் நியாயம் தான், ரமேஷ்! நேரிலே விவரமா எல்லாத்தையும் சொல்றேன். இப்போ உடனே வாங்க... ப்ளீஸ்...
காரணம் சொல்லாமலே, நீ இப்படி ஒதுங்கிப் போயிடுவேன்னு நான் எதிர்பார்க்கவே இல்லே, நித்யா!
ஐயோ, ரமேஷ்! இப்போ பேச்சிலே நேரம் கடத்தினீங்கன்னா, என் உயிருக்கு ஆபத்தாயிடும். உடனே வாங்க.
ஏன்? என்ன ஆச்சு? எங்கேயிருந்து பேசறே?
அந்தப் பொண்ணு தனிஞ்சு வரதுக்குள்ளே நான் அவசரப் பட்டுட்டேனோ? விஷயங்களை அவ வெளியிலே சொல்லிட் டான்னா ஆபத்தாச்சே! அதோ... அங்கே தான் இருக்கா... விடக்கூடாது...
... இது தான் விஷயம்... லோகேஷைக் குறிச்சுக்கிட்டீங்களா? உடனே வாங்க... ப்ளீஸ்..
ஐயோ! நீயா?
தப்பி ஓடலாம்னு பார்த்தியா? முடியுமா? விடுவேனா?
தொடரும்

இந்த நாளும் ஒரு பந்தயம்!

வாதூலன்

"இன்னும் ஒரு வாரம் இருக்கிறது" என்று மைதானத்தில் மட்டையைச் சுழற்றிக் கொண்டே எண்ணமிட்டான் ராம்கோபால். பம்பாயில் முதல் டெஸ்ட் மாட்ச் துவங்க மட்டும் அல்ல; வேறு ஒரு காரணத்துக்காகவும்தான். வத்சலா வரப்போகிறாள். (அவளைத் தீவிர கிரிக்கெட் ரசிகை ஆக்குகிறேன் என்று ஒரு கூட்டத்தில் சவால் விட்டிருக்கிறானே?)

வத்சலாவுக்கும் அவனுக்கும் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது. பெரியோர்கள் பார்த்து நிச்சயம் செய்த கல்யாணம் என்றாலும்கூட, 'சிறியோர்'களும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு மூன்று வருடத்துக்கு முன் மேற்கிந்தியக் குழு சென்னைக்கு வந்தபோது அவன் வத்சலாவைச் சந்தித்தான்.

இரண்டாம் நாள் ஆட்டம் டல்லாக இருந்தது. ராம்கோபால் மடமடவென்று இறங்கிக் காண்டீனுக்குள் போனான் — நண்பர்களுடன். பக்கத்து ஸீட்டிலிருந்து கிளம்பிய கிரிக்கெட் பற்றின விவாதம், அவனைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

"சரியான இவன்டீ நீ. திருச்சியிலேருந்து மெனக்கெட்டு வந்திருக்கிறேன் — உன்னைப் பார்க்கவென்று. நீ என்னடாவென்றால் பெரிசாக் கிரிக்கெட் மாட்ச் பார்க்க வந்துவிட்டாய். சாந்தா ரங்கசாமி மாதிரி ஆகப் போகிறாயா?"

"ஜாலி டயமும் உண்டு மாட்சிலே."

"மாட்சிலே நாள் முழுக்க இருப்பது கிரிமினல் வேஸ்ட்!"

ராம்கோபால் கழுத்தைச் சாய்த்துப் பார்த்தான். பார்த்த உடனேயே அந்தப் பெண்ணின் மூக்குத்தான் முன் நின்றது.

தன் கண் முன்னே டெஸ்ட் மாட்சை ஒருத்தி இகழ்வதாவது. தான் கேட்டுக் கொண்டிருப்பதாவது!

"என்னவோ கிரிக்கெட்டில் ரொம்ப முன்னேறிவிட்டார்கள் என்கிறாயே? ஞான சூனியங்களும் இருக்கிறார்கள்!" என்றான், அவள் காதில் விழும்படியாக.

ஒற்றைப் பின்னல் முன் வந்து நின்றாள். "என்ன மிஸ்டர் ஒட்டுக் கேட்கிறீர்களோ?"

ராம்கோபால் எழுந்து போலிப் பணிவுடன் கை கூப்பினான். "ராம்கோபால், ரஞ்சி ட்ராஃபி பிளேயர்."

"டேய் டேய்! ட்ராபி அது இதென்று சொன்னால் எப்படிடா புரியும்? ஏதோ தின்பதற்கு டாஃபி என்று நினைத்துக்கொள்ளப் போகிறாள்" என்றான் ஒரு நண்பன்.

அத்தனை பேரும் சிரித்தார்கள்.

அந்தப் பெண் பின்னலை விஷமம் செய்து கொண்டே, வெடுக்கென்று முறைத்து விட்டுப் போன காட்சி ராம்கோபாலின் மனத்தில் பசுமையாகப் பதிந்து விட்டது.

அதற்குப் பிறகு பல ஆட்டங்கள் ஆடுகையில் நாகரிக உடை உடுத்து உதட்டில் தனுக்காகப் பாராட்டிச் செல்லும் பெண்களைக் காணும் போதெல்லாம் ராம்கோபாலுக்கு அவள் முகமே ஞாபகத்துக்கு வரும். பெயர் என்ன?

பெயர் வத்சலா என்று தெரிந்தபோது, அந்த வத்சலாவைத் தனக்கு மணம் முடிக்க எண்ணியிருக்கிறார்கள் என்று அறிந்தபோது, வத்சலாவின் தந்தையும் தன் தகப்பனாரும் ஆதி நாளைய நண்பர்கள் என்று கேள்விப்பட்டபோது, அந்தச் சம்பிரதாய நிகழ்ச்சியில் நேரில் அவளைப் பார்த்த போது—

ராம்கோபால் அதிர்ச்சியடையத்தான் செய்தான். முன்னைக்கு இப்போது அவள் இன்னும் அழகாகக் காட்சியளித்தாள்.

"ஓஹோ... உனக்கு முன்னாடியே தெரியுமா?" பலமாகச் சொல்லிக் கை தட்டினார் அப்பா." நிறைய



டூர் போனபோது பார்த்திருப்பாய்—அப்படித் தானே?'' எனத் தங்கை லீலாவும் கூடச் சேர்ந்து கொண்டாள்.

ராம்கோபால் மௌனமாக இருந்தான். தான் எந்தச் சூழ்நிலையில் வத்சலாவைச் சந்தித்தோம் என்பதை எவ்விதம் விளக்கிச் சொல்வது? சொன்னாலும் புரிந்து கொள்வார்களா? அதற்காக இவளை நிராகரிக்க மனம் வரவில்லை. அழகு ஈர்த்தது. ஆனால் சமய சந்தேகமும் உதித்தது. கிரிக்கெட் உலகத்தில் தான் மேலே மேலே போகப் போவது நிச்சயம்; பின்னால் தொடர ஓரளவாவது மனைவிக்கு விஷயம் தெரிந்திருக்க வேண்டாமா?

இந்தத் தர்மசங்கடத்தைத் தீர்க்கப் போன மாதம் நடந்த ஒரு நிகழ்ச்சி பெரிதும் உதவியது. குறிப்பிட்ட வட்டாரத்தைச் சார்ந்த கிளப் ஒன்றில் சிற்சில துறைகளில் முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் இளைய தலைமுறையை அழைத்து நேருக்கு நேர் நிகழ்ச்சி நடத்தினார்கள்.



பேட்டியில் தனது வருங்கால மனைவிபற்றி மனசில் உள்ளதை அப்படியே சொன்னான்.

''என் வருங்காலமனைவி கிரிக்கெட் ரசிகை இல்லைதான். ஆனால் அவளை மாற்ற முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.''

தான் அதுபோல் கூறியதை ராம்கோபால் மறந்தே போனான். மறு வாரம் பேட்டியுடன் போட்டோ வந்ததை லீலா காண்பித்ததும் திகைத்தான்.

'கிரிக்கெட்டில் என் வருங்கால மனைவி சைபர்' என்று அவன் சொன்னதில் கூடச் சேர்த்து மிகைப்படுத்தி எழுதியிருந்தார்கள். அவனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

டெஸ்ட் மாட்சுக்கு வத்சலாவை வரவழைத்து அவளுக்கு வேண்டிய ஞானத்தைக் கற்பித்தால் என்ன? சென்னைக்கு வத்சலா வரப்போவதாக அவள் தந்தை எழுதியிருந்தது அவன் முடிவுக்கு உறுதுணையாக இருந்தது.

முதல் நாள்.

ஆட்டத்தின் துவக்க தினத்தன்று ஹோவென்று சப்தம் எழுந்து (யாரோ அவுட்) டி.வி.யின் திரையைக் கிழித்து விடுமோ என்று அம்மா பயந்தபோதுதான் வாசலில் ஓசை கேட்டது.

ராம் கோபால் போய்த் திறந்தான். பார்த்ததும் அட! ' வத்சலா! ''எங்கே வராமல் போய்விடுவாயோ என்று பயந்து கொண்டிருந்தேன். இப்பத்தான் மாட்ச் ஆரம்பமாச்சு.''

வத்சலா புன்னகை புரிந்தாள். உள்ளே போய் ராம்கோபால் தாயார், தகப்பனார் இருவருக்கும் வணக்கம் தெரிவித்தாள்.

''எவனோ பத்திரிகை நிருபர் கேட்டானாம். இவன் பண்ணுகிற கூத்து!'' என்ற அம்மாவின் வார்த்தையைக் காதில் போட்டுக் கொள்ளாமலேயே நாற்காலியில் அமர்ந்தான். ஆட்டத்தில் ஒன்றி ரசித்துப் பார்க்கலானான்.

திடீரென்று ஆடுவது நின்று போயிற்று. அம்பயர் இருவரும் பந்தைக் கையில் வைத்துக் கொண்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

''என்ன ஆச்சு?'' வத்சலா கேள்விக் குறியுடன் ராம்கோபாலை நோக்கினாள்.

விடுவானா அவன் இந்த வாய்ப்பை? பந்தின் உருவம் மாறிப்போயிற்று என்றும், குறிப்பிட்ட ''ஓவர்''கள் முடிந்த பிறகுதான் வேறு புதிய பந்தை எடுக்கலாம் என்கிற நியதியை மீறச் சில தருணங்கள் உண்டென்றும்:... விவரமாகச் சொன்னான்.

வத்சலா புருவத்தை உயர்த்தினாள். 'இவ்வளவு இருக்கிறதா?' என்று கேட்கிற மாதிரி. பந்தயத்தைக் கண்டு களிப்பதோடு இல்லாமல், உள்ளே போய், அம்மாவுக்கும் அனுகூலமாக இருந்தாள். லஞ்ச் டயம்போது சும்மா இருக்கவில்லை. 'அட! இந்த ரூமில் வெயில் அடிக்கிறதே. திரை போடலாமே!' என்று மெனக்கெட்டு அந்தக் காரியத்தில் இறங்கினாள்.


வெளிச்சம் கம்மியாக இருந்ததால் விரைவிலேயே ஆட்டம் 'முடிந்து விட்டது. வத்சலா கிளம்ப அவசரப்பட்டாள்.

''இரு'' என்று வற்புறுத்தினான் ராம் கோபால். க்விஸ் மாஸ்டர் மாதிரி சில கேள்விகள் கேட்டான். தெரிந்தவரைக்கும் சிரத்தையாகப் பதில் சொன்னாள் வத்சலா.

வெற்றி தோல்வி ஆனது!

எங்களுக்குள் இரண்டு கிரிக்கெட் அணிகள் உண்டு. ஏ. குரூப் அணிக்கும் பி. குரூப் அணிக்கும் ஒரு நாள் கிரிக்கெட் மாட்ச் நடந்தது. இன்னும் நான்கு ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில், கடைசி விக்கெட்டுக்காக ஆடிக் கொண்டிருந்தேன். எனக்கு பேட்டிங் அவ்வளவு சரியாக வராது. நன்றாய்ப் பந்து வீசுவேன். ஆகவே டிபன்ஸ் பண்ணிக் கொண்டிருந்தேன். ஐந்து பந்துகளைச் சமாளித்து விட்டேன். ஆறாவது பந்து மிக லாகவமாக ஸ்டம்புக்கு வெளியே வந்தது. இது தான் வசம் என்று என் சக்தியெல்லாம் திரட்டி ஓங்கி அடித்துவிட்டு ரன்னுக்காக ஓடினேன். எல்லோரும் சிரித்தார்கள். எதிர்ப் பக்கத்தில் நிற்கும் பேட்ஸ்மேனும் ஓடிவரவில்லை! என் கையிலிருக்கும் பேட் லேசாகியிருந்தது. நன்றாகப் பார்த்தேன். பேட்டின் கைப்பிடி மட்டும் இருந்தது. பேட்டைக் காணவில்லை. திரும்பிப் பார்த்தேன். நான் அடித்த அடியில் பேட் ஒடிந்து ஸ்டம்பில் போய் விழுந்து மூன்று ஸ்டம்புகளும் சரிந்திருந்தன. எங்கள் அணி தோற்றுப் போனது!

—எம். அலி.



பிறகு ''எல்.பி.டபிள்யூ' என்றால் என்ன?'' என்றான்.

யோசித்தாள். ''ஸ்டம்பில் படுவதைக் காலால் தடுத்தல்''

''அது கிரிக்கெட்டில். வாழ்க்கையில் என்ன அர்த்தம் தெரியுமா?'' ராம்கோபால் சுற்று முற்றும் நோக்கினான். அவளை நெருங்கினான். காதில் கிசுகிசுத்தான். 'லவ் பிஃபோர் வெட்டிங்''.

வத்சலா நகர்ந்து கொண்டாள். புன்னகை செய்தாள். ''நம்மோடது ''லோன் பிஃபோர் வெட்டிங்!'' லோ, வரேன். தாங்க் யூ.''

ராம்கோபால் அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தான். தன் மீது எத்தனை அக்கறை இருந்தால் இங்கு வருவாள் என்று நினைத்துப் பார்க்கும்போது ஒரு கர்வம் அவனுள் எழுந்தது.

மூன்றும் நாள்.

ஓய்வு தினத்துக்குப் பிறகு வந்த விடுமுறை நாளாதலால் இன்று மைதானத்தில் கூட்டம் அதிகமாக இருந்தது. வீட்டில் கூடத்தான். நிறையப் பேர் டீ.வி. பார்க்க வந்திருந்தார்கள். வத்சலாவைக்கண்டுலேசாகப் புருவத்தை உயர்த்தினார்கள். தெரிந்து கொண்டு புன்சிரிப்புச் செய்தார்கள்.

வத்சலா ''என்ன உங்களைப் பற்றிக் கண்டபடி பேப்பரில் அடிபடுகிறதே!'' என்று கேட்டாள்.

ராம்கோபால் பெருமிதமாகச் சிரித்தான். பிரபல கிரிக்கெட் விமர்சகர் சென்னையில் நடக்கப்போகும் பந்தயத்தில் யார்யார் ஆடச் சந்தர்ப்பம் என்று நல்ல ஊகத்தைத் தெரிவித்து இருந்தார். அதில் அவன் பெயரும் அடிபட்டது. அவன் ஆட்டத்தில் நிறைவு குறைகளைப் பிட்டுப்பிட்டு வைத்திருந்தார்.

''பரவாயில்லை. லேட்டஸ்ட் நியூஸ் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறாய்!''

ஹாலிலிருந்து லீலாவின் கூச்சல் கேட்டது. அவள் ஒரு கபில்தேவ் ரசிகை. கபில்தேவ் அவுட் ஆனதை அவளால் பொறுக்க முடியவில்லை.

வத்சலா மெதுவாகச் சொன்னாள். ''ஸ்டம்புக்கு வெளியே போகும் பந்து. அனாவசியமாக அதை ஏன் தொடணும்?''

ராம்கோபால் திரும்பினான். ''வெரி குட்னெஸ் இம்ப்ரூவ்மெண்ட். எக்ஸ்பர்ட் ஒபினியன் நீயே கொடுக்கலாம்போல் இருக்கிறது. நான் இப்போ என்ன பண்ணப் போறேன் தெரியுமோ? அந்த ரிப்போர்ட்டரைக் கூப்பிட்டு வரச் சொல்லி....''

''வரச் சொல்லி?''

''லைபர் என்று போட்டாயே? இப்போது எப்படி தெரியுமா? ஏ ப்ளஸ் என்று சொல்லப் போகிறேன்!''


ஐந்தாம் நாள்.


கடைசி நாள். ஓரளவாவது ஆட்டத்தில் உயிர் இருக்கும் என்ற எண்ணம் நீங்கிவிட்டது. மளமளவென்று இங்கிலாந்து அணியில் விக்கெட் சரிந்தன.

லீலா குதித்துக் கரகோஷம் செய்தாள். ''நான் நினைச்சது நடந்து விட்டது.''



உறுதி
■ காரணம், இந்தியாவிலே முதன் முதல் விட்ரஸ் எனாமல் செய்யப்பட்ட வாட்டர் ஹீட்டர். இத்தொழில் நுட்பம் அமெரிக்காவிலே 90% வாட்டர் ஹீட்டர்களில் உபயோகமாகிறது. இது உலோக அரித்தலைக் குறைக்கிறது.
■ காரணம், நீடித்து உழைக்கும் மின்சார ஹீட்டர் கொண்டது, மிதமான மின்சார உபயோகம் கொண்டது. தரமான தயாரிப்பு —பத்திரமானது.
மார்க்கெட்டிலுள்ள எந்த வாட்டர் ஹீட்டரோடும் ஒப்பிடுங்கள். இது ஈடிணையற்றதே!
புதிய
வீலேன்*
வாட்டர் ஹீட்டர்
வழங்குவோர் வோல்டாஸ்
* விட்ரலேனின் புதிய பெயர்
வோல்டாஸ் லிமிடெட்
அப்ளையன்செஸ் டிவிஷன்
CASV 458 202 TAM
மொத்த விற்பனையாளர்கள் :
மெஸர்ஸ் S. G. R. ஏஜென்சீஸ் 46, ஜோஸியர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600 034 போன் : 810841 மெஸர்ஸ் AR. A. S. P. V. P. V. 115, ஓமலூர் ரோடு, சேலம்-636 007 போன் : 3127 மெஸர்ஸ் எல்வின் ஏஜென்சீஸ் 9-11, நேரு ஸ்டேடியம், வ.உ.சி. பூங்கா, கோயம்புத்தூர்-641 018 போன் : 36264





''என்ன நினைச்சே?''

''இந்த மாட்சில் நாம் ஜெயித்தால்—மெட்ராஸ் டெஸ்ட்டில் உனக்கு 'சான்ஸ்' கிடைக்குமென்று நினைத்தேன்!''

ராம்கோபால் மௌனமாக இருந்தான். பிறகு, ''நான் என்ன நினைச்சேன் சொல்லட்டுமா? வத்சலா அந்த நாளும் வந்து பார்த்தால் எனக்கு 'லக்' என்று நினைத்துக் கொண்டேன்'' என்றான்.

''ரெண்டு'பேரும் சரிதான்.''

வத்சலா இந்தக் குதூகலத்தில் அதிகமாகப் பங்கு கொள்ளவில்லை. எதையோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தாள்.

சட்டென்று ஏதோ நினைவு வந்தவனாகக் கேட்டான்: ''இன்றைக்கே கிளம்பணுமா?''

''ஆமாம். ராக் போர்ட் எக்ஸ்பிரஸ்.''

''அடடா, டீ.வி.யில் 'ரீப்ளே' காண்பிப்பான். பிரமாதமா இருக்கும். நிறையப் புரியும்.''

வத்சலா பளிச்சென்று கேட்டாள். ''ஏன் நான் புரிந்து கொண்டது போதாதா? இன்னும் வேணுமானால் சொல்லுங்கள் கேட்டுக் கொள்கிறேன்.''

''ஆ...நான் மறந்தே போயிட்டேன். அந்த நிருபர் போன் பண்ணி உன் போட்டோ வேணுமென்று கேட்டான். இங்கேயே வரேனென்று சொன்னான். உன் போட்டோ முதன் முதலில் அவர்கள் பத்திரிகைகளில் வருவதாகஇருக்கணுமாம்!''

''அது சரி. எனக்கு கிரிக்கெட் போதிப்பதில் ஜெயித்தது நீங்கள் தானே என் படம் எதுக்கு? விடுங்கள்'' என்று சொல்லி விட்டு வத்சலா கிளம்பினாள். அவள் விடைபெறுதலில் சிறிது அவசரம் தெரிந்தது. வருங்கால மாமனார், மாமியார் ஆசிகள், நாத்தனாரின் அன்பு, கணவரின் கிரிக்கெட் ஞானம் — எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டு புறப்பட்டாள்.

ராம்கோபாலுக்கு உற்சாகமாக இருந்தது. எடுத்த காரியம் வெற்றி கிட்டிவிட்ட கர்வம் நிலவியது. அதே உற்சாகத்துடன் வெளியே போய் சினிமாப் பார்த்து விட்டுத் திரும்பினான்.

''என்ன? இப்போதேவா 'ரீப்ளே?'' என்றபடி கூடத்துக்கு வந்தான். ஒரு நிமிடம் கண்ட காட்சியைக் கண்டு பிரமித்துப் போனான். டீ.வியில் வத்சலா! யாரோ ஒரு பாடகிக்கு வயலின் வாசித்துக் கொண்டிருந்தாள்.

''சொல்லவே இல்லையே!''

''சொல்ல டயம் கிடைச்சாத்தானே? இவனோட பிரதாபத்தைக் கேட்டுக்கொள்ளவே அவளுக்கு நேரம் சரியாக இருந்ததே?'' என்றார் அப்பா கிண்டலாக.


ஜோக்காய்ச் சொன்னாலும் சுர்ரென்று ராம்கோபாலுக்கு உறைத்தது. தான் ஒரு துறையில் தேர்ச்சி பெற்றுப் புகழ் அடைந்திருந்தால் தன்னைப் போலவே வத்சலாவும் வேறொன்றில் கீர்த்தி பெற்றிருக்கிறாள் என்று தெரிந்தது. ஆனால் அவள் வாயைத் திறக்கவே இல்லையே! வருங்காலக் கணவருக்குத் தன்னைப் போலவே இசையில் நாட்டம் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டிருக்கலாமே? ஆனால் வெளியே ஜாடையாகக்கூடச் சொல்லவில்லையே!

அவள் அடக்கமும் பெருந்தன்மையும் ராம்கோபாலைக் கூனிக் குறுக வைத்தது.

''அண்ணா! அந்த ரிப்போர்ட்டர் வந்து விட்டுப் போனான். வத்சலா பிரமாத ரசிகை ஆகிவிட்டாளென்று சொன்னேன். நீ ஜெயித்துவிட்டாய் என்றும் சொன்னேன்'' லீலாவின் குரலில் உற்சாகம் கொப்புளித்தது.

ராம்கோபால் மௌனமாக இசையில் ஈடுபட முயற்சி செய்தான். வத்சலா முன் தான் தோற்றுவிட்டதுமாதிரிதான் தோன்றியது. ஆனால் அந்தத் தோல்வியிலும் தனி இன்பம் தெரிந்தது.

ஆசிரியர் கை குலுக்கினர்



இந்த நிகழ்ச்சி 1964ம் ஆண்டு நடைபெற்றது. நான் அப்போது பிஷப் ஹீபர் ஹைஸ்கூலில் பத்தாம் வகுப்புப் படித்து வந்தேன். நான் எங்கள் பள்ளியின் கிரிக்கெட் குழுவுக்குக் காப்டன் ஆக இருந்தேன். எங்கள் பள்ளியில் பள்ளி மாணவர் கிரிக்கெட் குழுவுக்கும் ஆசிரியர் குழுவுக்கும் வருடத்திற்கு ஒருமுறை மாட்ச் நடைபெறுவதுண்டு.

என் ஆசிரியர்கள் பேட் செய்யத் தொடங்கினார்கள். அவர்கள் குழுவில் திரு அசரியா அவர்கள் நன்றாக பேட் செய்யக் கூடியவர். அன்றும் நன்றாக பேட் செய்து கொண்டு இருந்தார். அவர்கள் ஸ்கோர் 68 ரன்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்திருந்தார்கள். அந்தச் சமயத்தில் என்னுடைய ஆட்டக்காரர் ஒருவரை அழைத்து (பாஸ்ட் பௌலர்) அவர் பேட் செய்யும்போது ''சார்ட் பிச் பால்'' ஒன்று 'ஆன்' சைடில் போடச் சொல்லிவிட்டு, அவர் நின்றிருந்த அந்த லாங் ஆன் பவுண்டரியில் நின்று கொண்டேன். அந்த சார்ட் பிச் பந்தை நான் எதிர்பார்த்தபடியே உயரத்தூக்கி எனக்குநேரே அடித்து காட்ச் கொடுத்து அவுட்டானார். நான் காட்ச் பிடித்தவுடன் அவர் அவுட்டாகி வெளியில் செல்லாமல் என்னிடம் வந்து என் கையைப் பிடித்துக் குலுக்கி என்னைத் தட்டிக்கொடுத்து வாழ்த்துக் கூறிய நிகழ்ச்சி என் கிரிக்கெட் விளையாட்டில் மறக்க முடியாத அனுபவம் ஆகும்.

—கே. வெங்கையன்

இதோ ஒரு பொங்கல் பரிசு...!



யூனிட் திட்டம்-64

வரியை அதிகரிக்காமல் வருமானத்தை அதிகரிக்கும் லாபகரமான முதலீட்டுத் திட்டம்

ஆம். யூனிட் திட்டம்-64-இல் மட்டுமே முதலீடு செய்யப்படும் ரூ. 25,000/- சொத்து வரியிலிருந்து விலக்குப் பெறுகிறது. (இது வழக்கமாக உள்ள ரூ. 1,50,000/- வரம்பைத் தவிர). இதைப் போலவே, யூனிட்டுகளில் முதலீடு செய்யப்பட்டு அதன் மூலம் வரும் வருமானம் ரூ. 2,000/- வரை தனி வரிச்சலுகை பெறுகிறது.

யூனிட் திட்டம்-64-இன் மற்றுமொரு விசேஷ அம்சம். மதிப்பீட்டின் கடைசி நாளான மே 31 அன்று முதலீடு செய்தாலும் வருடம் முழுவதற்குமான மொத்த டிவிடெண்ட் தொகையும் உங்களுக்கு கிடைக்கிறது.

யூனிட் — விசேஷ சலுகைக் கதம்பம்

- முதலீட்டின் பாதுகாப்பு
- வளரும் டிவிடெண்ட்
- சுலபமான மறுவிற்பனை
- விசேஷ வரிச்சலுகைகள்

எங்களுடைய மற்ற திட்டங்கள்

- குழந்தைகளின் அன்பளிப்புத் திட்டம்
- யூனிட் இணைந்த ஆயுள் பாதுகாப்புத் திட்டம்
- தர்ம, சமய டிரஸ்ட்டுகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கான திட்டம்

யூனிட் திட்டம்-64-இல் முதலீடு செய்யுங்கள் அதுவே சரியான முதலீடு.

யூனிட்டுகளை எங்களிடம் நேரடியாகவோ அல்லது அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள், தலைமை தபால் நிலையங்கள் மற்றும் எங்கள் முக்கிய பிரதிநிதிகள் மூலமாகவோ வாங்கலாம்.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

(பொது உடைமை நிதி நிறுவனம்)

தலைமை செயலகம்: பாம்பே-400 020

ரெஜினு மேன்ஷன், இரண்டாவது மாடி
8, செகண்ட் லைன் பீச், சென்னை-600 001.
போன்: 27433

UTI-834-81 TAM

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாக இருக்கட்டும்.

தமிழ்நாட்டில் உள்ள எங்கள் முக்கிய பிரதிநிதிகள்: ● திரு. ஏ. தனபால், 10-J, ஹூஸார் ரோட், கோயமுத்தூர்-641 018, போன்: 34776 (கோயமுத்தூர், பெரியார் மாவட்டங்களுக்காக) ● திரு. எம். ராமமூர்த்தி, 30, எல்.ஐ.சி. காலனி, மதுரை-625 002 (மதுரை மாவட்டத்திற்காக) ● திரு. கே. முத்துசாமி, 52-A, வ.உ.சி. நகர், தஞ்சாவூர்-613 007 போன்: 1224 (தஞ்சாவூர் மாவட்டத்திற்காக).

'சத்ய கங்கை' ஆசிரியர் திரு பகீரதன் ஆவேசமாய்ச் சொல்கிறார்:



"ஒரு பெண்மணி 'ஐயோ! கங்காதரா! நீ போயிட்டியா' என்று கதறி அழுது கொண்டிருந்தாளாம். கொஞ்ச நேரத்தில் அக்கம்பக்கத்துப் பெண்கள் கூடி விட்டனராம். கூடச் சேர்ந்து ஒப்பாரி வைத்தார்களாம். பின் வீட்டுக்குப் போனார்களாம். அழுது கொண்டிருந்த பெண்மணி சலவைத் தொழிலாளி. செத்து போனது அவள் வளர்த்த கழுதை. பெயர் கங்காதரன். எதற்கு அழுதோம் என்று தெரியாமல் அழுது விட்டுப் போனார்களே! அதேதான் கிரிக்கெட்டின் கதையும். வருபவர்களுக் கெல்லாம் விளையாட்டைப் பற்றி முழுமையாய்த் தெரியாது. கும்பலோடு கும்பலாய்க் கத்துவது, கைதட்டுவது இதுதான் இப்போது நடைபெறுகிறது.

'பதினொரு முட்டாள்கள் ஆட, அதைப் பதினோராயிரம் முட்டாள்கள் வேடிக்கை பார்க்கும் விளையாட்டு' என பெர்னார்ட் ஷாவும் 'பதினொரு தடியர்கள் நிற்க இரு தடியர்கள் இங்குமங்கும் ஓடுகிற பைத்தியக்கார விளையாட்டு' என அறிஞர் வேலுவும் விமர்சித்த ஆட்டம்தானே கிரிக்கெட்! நம் ஊரில் அமரர் கல்கி அவர்களுக்கும் அறவே பிடிக்காதது கிரிக்கெட்.

உலகில் முன்னணி நாடுகளாய் விளங்கும் அமெரிக்காவிலாகட்டும், ரஷ்யாவிலாகட்டும் ஜனத்தொகை மிகுந்த சைனாவிலாகட்டும் தொழில் துறையில் நெம்பர் ஒன்னான ஜப்பானில் ஆகட்டும், கிரிக்கெட்டை என்கரேஜ் செய்கிறார்களா? இல்லையே! இதை 'நேஷனல் வேஸ்ட்' ஆகக் கருதுகிறார்கள். ஒவ்வொரு கிரிக்கெட் மேட்சின்போதும் ஐந்தாறு நாள் வேலை நேரம் அனைவருக்கும் பாழ்.

வெள்ளையரிடம் அடிமைப் பட்டிருந்த நாடுகள்தாம் இன்று கிரிக்கெட் ஆடுகின்றன. இந்த அடிமை விளையாட்டு தேவைதானா? வெள்ளையர்களிடமிருந்து ஒழுக்கம், காலம் தவறாமை போன்ற நல்லவற்றையெல்லாம் கற்றுக்கொள்ளாமல், ஏன்தான் கிரிக்கெட்டைக் கட்டிக் கொண்டு அழுகிறோமோ?

'I would like to play cricket with you' என்று ஒருவர் சொன்னால், நாம் பெருந்தன்மையுடன் பழகுவோம் என்று பொருள். ஆனால் இன்றைய கிரிக்கெட்டில் பெருந்தன்மை எங்கே? அடிதடி, தகராறு, இல்லு முல்லு என்று பல அசிங்கங்கள்.

- நிற வெறிக்காரர்களான தென் ஆப்பிரிக்கருடன் விளையாடுகிறவர்களை மற்றவர்கள் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பது உலகம்முழுவதும் ஒப்புக்கொண்ட ஒன்று. இன்று அதை நாம் கடைப்பிடிக்கிறோமா? பாய்காட்டும், குக்கும் இருக்கும் இங்கிலாந்து அணியுடன் நாம் டெஸ்ட் தொடர் ஆடுகிறோம்.

மாட்ச் நாட்களில் ஸ்டேடியத்துக்குப் போனால் போதும். இளம் பெண்கள் எத்தனை அலங்கோலமான உடைகளில் மாட்ச் பார்க்க வருகிறார்கள்! வரும் ஆண்கள் மாட்ச் மட்டும் பார்க்க வருவதில்லை. பைனாகுலர் சகிதமாய் வந்து பைனாகுலரில் ஆட்டத்தோடு பெண்களையும் பார்க்கிறார்களே! இது நம் பண்பாட்டுக்கே இழுக்கல்லவா?

சென்னைசேப்பாக்கம் ஸ்டேடியத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஒன்னரைக் கோடி செலவில் கட்டியிருக்கிறார்கள். வருஷத்துக்கு ஒரு முறை பொங்கல் சீஸனில் நடக்கும் ஒரு மாட்சின்போது கிடைக்கும் வருவாய்தான். மற்ற சமயங்களில் எல்லாம் வருவாய்க்கு வழியில்லாத ஸ்டேடியம் தேவைதானா? கட்டத்தான் கட்டினார்களே, ஷாப்பிங் சென்டர் போல இணைத்துக் கட்டி நிரந்தர வருவாய்க்கு வழி செய்திருக்கலாம்!

மாட்ச் நடக்கும் நாட்களில் ஸ்டேடியத்தினுள் தின்பண்டங்கள், சிகரெட் விற்பனையைக் குத்தகைக்கு விடுகிறார்கள். குத்தகைக்காரர்களோ, ஒரு வரம்பின்றி மூன்று மடங்கு நாலு மடங்கு விலைக்கு விற்கிறார்கள். இப்படி வேறு ஒரு பகற் கொள்ளை!

நம் நாட்டின் தேசிய விளையாட்டு ஹாக்கி இருக்கிறது. வாலிபால், ஃபுட்பால், பாஸ்கெட் பால் எல்லாம் இருக்கின்றன. மூளைக்கு வேலைதரும் செஸ் இருக்கிறது. இவற்றையெல்லாம் ஊக்குவிக்க வேண்டும். இதை விட்டு விட்டு டீ.வி. ரேடியோ, பத்திரிகைகள் என எல்லா மீடியாக்களும் ஏன்தான் கிரிக்கெட்டைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு கொண்டாடுகின்றனவோ!

பணம் போனால் திரும்ப வரும். ஆனால் நேரம் போனால் திரும்ப வருமா? என்னைப் பொறுத்தவரை, கிரிக்கெட் கிரிமினல்வேஸ்ட். இந்தியாவைப் போன்ற ஒரு முன்னேறும் நாட்டில் அரசாங்கம், கிரிக்கெட்டை வளர விடாமல் தடை செய்வதுதான் நல்லது. எனக்கு மட்டும் அதிகாரம் இருந்தால் கிரிக்கெட்டை முதலில் ஒழித்துக் கட்டிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்.

பேட்டி: எஸ். சந்திரமௌலி

கிரிக்கெட் ஒழிக்கப்பட வேண்டும்!

நீங்களே கணக்கிட்டு பாருங்கள்!

300 கிராம்
ரூ. 3·20

ஒரு சாதாரண டிட்டர்ஜண்ட் சலவை கட்டியை விட
எடையோ
இரண்டு மடங்கு
விலையோ
சிலகாசுகள்தான் அதிகம்

டோட்டல்

நீல டிட்டர்ஜண்ட் சலவை பார்



சுலபமான
சலவைக்கு
5 சிறிய பகுதிகள்

உண்மையான முதல்
டிட்டர்ஜண்ட் பார்!
டோட்டல், நீல டிட்டர்ஜண்ட்
சலவைக் கட்டியின் அதிக
வெண்மையையும், சலவை
பார் சோப்பின் சௌகரியத்தையும்
கொடுக்கிறது.
சிக்கனமாக சலவை செய்ய இதை 5 சிறிய
பகுதிகளாக்கி உபயோகிக்கலாம்.
எடையோ இரண்டு மடங்கு
விலையோ சில காசுகள்தான் அதிகம்!
நீங்கள் 125 கிராம் எடையுள்ள சாதாரண டிட்டர்ஜண்ட்
கட்டியை என்ன விலைக்கு வாங்குகிறீர்கள்?
300 கிராமின் விலை ரூ. 3.20 என்றால் 250 கிராம் டோட்டலின்
விலை ரூ. 2.67 தான். அதாவது ஒரு சாதாரண சலவைக்
கட்டியைவிட எடையோ இரண்டு மடங்கு,
விலையோ சில காசுகள் தான் அதிகம்.

தமிழ் நாடு, பீஹார் மற்றும் ஆந்திர பிரதேஷ் மாநிலங்களில் மட்டும் கிடைக்கும்.

MCA-TDB-51-Tam

கர்நாடக சோப்ஸ் அண்டு டிட்டர்ஜெண்ட் லிமிடெட் அளிக்கும் தரமான தயாரிப்பு
விற்பனை செய்பவர்கள் : மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிட்., பெங்களூர்.

அமன்குடி அம்பிகை

கால வெள்ளத்தில் சரியான பராமரிப்பு இன்றி இடிபாடுகள் நிறைந்து காணப்படும் கோயில்கள் பல. கும்பகோணத்துக்குச் சமீபத்தில் உள்ள அம்மன்குடி அருள்மிகு பார்வதி தேவி, உடனுறை அருள்மிகு கைலாச நாதர் திருக்கோயில் இதற்கு விதி விலக்கு அல்ல.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ பரமாசார்யாள் அனுக்கிரகத்துடன்இக்கோயில்திருப்பணியை நிறைவேற்ற தவத்திரு திருப்பனந்தாள் ஆதீனம் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ முத்து குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் அவர்களைப் போஷகராகக் கொண்டு, திருப்பணிக் குழு நிறுவப்பட்டிருக்கிறது.

இந்த அழகிய கிராமத்தை அம்மன்குடி என்று மக்கள் வழங்கினாலும் அறிஞர்கள் ''அமன்குடி'' என்றே அழைக்க வேண்டுமென்கிறார்கள்.

இந்த ஆலயத்தின் கருவறையிலும், அர்த்த மண்டபத்திலும் பழமையான சிற்ப வேலைப்பாடுகள் உள்ளன. கருவறையில் சுவரின் வெளிப்புறத்திலும் சில கருங்கல் தூண்களிலும் முதல் ராஜ ராஜன், முதல் ராஜேந்திரன் காலத்து சோழர்களின் கொடைகளைவிவரிக்கும் சாசனங்கள்உள்ளன.

பராசக்தியானவள் துர்க்கா ரூபமாகக் கன்னிகா அவதாரம் செய்து கும்ப நிகும்பன் என்னும் மகிஷாசுரர்களை வதம் செய்து ''மகிஷாசுர மர்த்தினி'' என்னும் பெயரை வகித்து அவர்களை சம்ஹாரம் செய்த பிரும்மஹத்தியாதி பாபங்களையும் தீர்க்க அம்மன்குடி க்ஷேத்திரத்தில் பாப விமோசன தீர்த்தம் என்னும் தடாகத்தில் நீராடினாள். இந்தத் தீர்த்தம் ஆலயத்துக்கு வடபால் உள்ளது.

தேவி மகிஷாசுர வதத்திற்குப் பிறகு அவன் கழுத்தில் முன்பு ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கத்தை கைலாஸேச்வரர் என்ற பெயருடன் இங்கு ஸ்தாபனம் செய்தாள். தபஸுக்கு இடையூறு செய்கிறவர்களை நாசம் செய்வதற்கு ஸ்ரீ விநாயகரையும் பிரதிஷ்டை செய்தாள். பிறகு தேவியானவள் 12 வருடம் மிகக் கடுமையான தவம் செய்தாள். இதனாலேயே இந்த ஸ்தலம் ''தேவி தபோ வனம்'' என்ற பெயருடன் பிரசித்தி யடைந்திருக்கிறது.



✖ அமன்குடி அம்பிகை



✖ அமன்குடி கோயில்

எட்டு திருக்கரங்களுடன் ஆயுதங்கள் ஏந்தி வலது கால் பக்கத்தில் சிம்ம வாகனம் விளங்க இடது காலைத் தூக்கி மஹிஷனை உதைத்த கோலத்தில் காட்சி அளிக்கிறாள் அன்னை.

சிவனளித்த சூலம், விஷ்ணு அளித்த சக்கரம், வாயுவிடம் பெற்ற அம்பு வில், இந்திரனின் வச்ராயுதம் இவைகளை ஏந்தி நிற்கும் அன்னை ரௌத்ரமான அவ்வேளையிலும் மிதிபடும் அரக்கனின் தலைமீது தன் தளிர்க் கரங்களை வைத்து அனுக்கிரகம் புரியும் கோலம், இதயத்தை நெகிழ்விப்பது.

கர்ப்பக் கிருஹத்திலேயே ஸ்ரீ தேவியின் வடக்கே ஏற்கனவே பிரதிஷ்டை செய்யப் பட்டதும், காலம் அறுதியிட்டுச் சொல்ல முடியாததுமான ஸ்ரீ துர்க்கையின் சிலையொன்று தலையைச் சற்றே சாய்த்த கோலத்தில் எண் திருக்கரங்களுடன் அமைந்துள்ளது.

உற்சவ விக்கிரகம் ஒன்றும் அதே அமைப்பில் ஐம்பொன்னால் செய்யப்பட்டு மிக்க பொலிவுடன் விளங்குகிறது.

ஸ்ரீ துர்க்கையானவள் சகல தேவதைகளின் தேஜஸ்ஸிலிருந்து உண்டானபடியால் இந்த அன்னைக்குச் செய்யும் பூஜைகள் எல்லா தேவதைகளுக்கும் ப்ரீதி.

-கே. வி. ராஜகோபாலன்

1952ம் வருடம் புதுக்கோட்டை மன்னர் கல்லூரி கிரவுண்டில் இண்டர் வகுப்புக்கும் பி.ஏ. வகுப்புக்கும் ஒரு கிரிக்கெட் மாட்ச் நடந்தது. இண்டர் வகுப்பு வெற்றி பெற இன்னும் ஒரே ஓட்டம் தான் வேண்டியிருந்தது. நான் சுமாராக பௌலிங் செய்வேன். பாட்டிங் படுமோசம். கடைசி ஆட்டக்காரனுக நான் நுழைந்தேன்.

லட்டு போல மெதுவாக ஒரு பந்து வந்தது. ஆகாயத்தில் அடித்தேன். காட்ச் நிச்சயம் என்று தெரிந்து பெவிலியனை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். எதிர்க் கட்சி பீல்டர் காட்சைக் கோட்டை விட்டு விட்டார் உடனே பந்தைப் பொறுக்கி விக்கெட் கீப்பரிடம் எறிய அவர் ஸ்டம்புகளைக் கீழே சாய்த்தார். நடந்து கொண்டிருந்த நான் நடந்தது என்னவென்று தெரிந்து அப்படியே நின்று விட்டேன். எல்லைக் கோட்டின் அருகே பெவிலியனில் இருந்த என் கட்சிக் காப்டனைக் கூப்பிட்டேன்.

'அம்பயரிடம் சென்று நான் அவுட் இல்லை என்று சொல்' என்றேன். ஒரு விநாடி திகைத்த அவன் மைதானத்துக்குள் சென்று அம்பயரிடம் ஏதோ கூற எதிர்க் கட்சிக் காப்டன் மற்ற ஆட்டக்காரர்களும் என்னை நோக்கி வந்தனர்.

''என்னப்பா பி. கே. உனக்குப் பைத்தியமா?'' என்றான் ஒருவன்.

நான் அம்பயரிடம் ''பாட்டிங் கிரீஸில் இருந்து ஒரு நேர் கோடு இழுங்கள். நான் கிரீஸ்-க்குள் இருந்தபோது ஸ்டம்புகளை வீழ்த்தினார் விக்கெட் கீப்பர். கிரீஸ் லைனுக்கு வரையறை கிடையாது. ஆகையால் நான் அவுட் இல்லை'' என்றேன்.

ஒரு நேர் கோடு இழுக்கப்பட்டது. நான் கிரீஸ்-க்குள் இருந்தேன். 'நான் அவுட் இல்லை' என்று அம்பயர் தீர்ப்பளித்தார். எதிர்க் கட்சித் தலைவர் ஒத்துக்கொள்ள மறுத்து மாட்ச் ரத்தாயிது.

பி. கிருஷ்ணமூர்த்தி







நோபால்!

சென்னையில் கிரிக்கெட் மேட்ச் நடந்தபோது, தமிழில் ஒலிபரப்பான நேர்முக வர்ணனையை எங்கள் வீட்டு ரேடியோவில், நண்பர்களுடன் கேட்டுக்கொண்டிருந்தோம்.

ஒரு சமயத்தில் நடுவர் ''நோ பால்'' கூறியதாக வர்ணனையாளர் கூறினார். உடனே எங்கள் மாமா, ''அடடா... பந்து இல்லாமலேயே விளையாடிக்கிட்டு இருந்திருப்பாங்க போலத் தெரியுதே'' என்றாரே பார்க்கலாம்.

அனைவரும் 'கொல்' என்று சிரித்து விட்டோம்.

-கே. எம். இளங்கோ

இலவசம்!!　　　　இலவசம்!!

ரூ. 75 பெறுமான

லிப்கோ புத்தகங்கள் இலவசம்!

ரூ. 250-ஐ எம்மிடம் 3 ஆண்டுகளுக்கு நியாயமான வட்டிக்கு முதலீடு செய்பவர்களுக்கு ரூ. 75 பெறுமான லிப்கோ புத்தகங்கள் முற்றிலும் இலவசமாக உடனடியாக அனுப்பிவைக்கப்படும். முழு விவரங்களுக்கும், விலைப் பட்டியலுக்கும், விண்ணப்பத் தாளுக்கும் எழுதுக.

பயன்தரும் லிப்கோ புத்தகங்களில் சில:

		ரூ.காசு
1.	பத்திரங்களும் ரிஜிஸ்திரேஷனும்	15-00
2.	நாமக்கல் கவிஞர் பாடல்கள்	9-25
3.	என்ன செய்யப் போகிறீர்கள்?	3-00
4.	மஹாத்மாவின் மஹத்வம்	3-00
5.	இயேசுவின் இதயம்	2-50
6.	வள்ளுவர் வாய்மொழி - குறள் மூலம்	1-50
7.	உங்கள் பிறந்த தேதியும், வாழ்க்கை ரகசியங்களும்	3-00
8.	உடல் மச்சங்களும், உங்கள் வாழ்க்கை ரகசியங்களும்	2-00
9.	ஆங்கில ஆசிரியன்	12-00
10.	குழந்தைக்குப் பெயரிடுதலும் சீராட்டுதலும்	1-30
11.	குழந்தை வளர்ப்புக் கலை	5-00
12.	சமைப்பது எப்படி?	4-00
13.	இந்தி ஆசிரியன்	5-80
14.	ஸுந்தர காண்டம் - தமிழில் மூலம்	5-60
15.	ஸுந்தர காண்டம்-ஸ்ரீ C.R.S. தமிழ் மொழிபெயர்ப்பு	16-50
16.	ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் ஸ்ரீமத் திராவிட வேதங்களும் (ஸ்தோத்ரமாலையுடன்)	9-50
17.	ஸ்தோத்ரமாலை	3-00
18.	கம்ப ராமாயணம் - தமிழ் வசனம்	9-50
19.	ஸ்ரீமத் பகவத் கீதை - தமிழில் மூலமும் உரையும்	7-50
20.	மாங்கல்ய ஸ்தவம்	1-50
21.	ஸ்ரீ லக்ஷ்மீநாராயண ஹ்ருதயம்	1-50
22.	ஸகல காரிய ஸித்தி தரும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் - மூலம் ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் (அர்த்தத்துடன்)	10-00
23.	பஞ்ச ஸூக்தங்கள்	0-80
24.	ஸ்ரீ குருவாயூர் அப்பன் ஸுப்ரபாதம்	0-60
25.	ஸ்ரீ முகுந்தமாலை	1-50
26.	பஜ கோவிந்தம்	1-25
27.	கௌரீ கல்யாணம் வைபோகமே	7-20
28.	அபிராமி அந்தாதி - மூலமும் உரையும்	2-00
29.	ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ - மூலமும் உரையும்	2-90
30.	ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீ தேவீ பாகவதமும்	4-50
31.	பெரிய புராணம் (சுருக்கம்)	1-50
32.	திருவிளையாடற் புராணம் (சுருக்கம்)	1-50
33.	ஸகல காரிய ஸித்தியும் சைவத் திருமுறைகளும்	7-50
34.	ஸ்ரீ ஸத்யநாராயண வ்ரதம்	1-20
35.	ஸ்ரீ லக்ஷ்மீ குபேர பூஜாக்ரமம்	0-90
36.	நவக்ரஹ க்ஷேத்ர புராணம்	6-60
37.	திருப்புகழ் மஞ்சரி	2-00
38.	கந்தர் சஷ்டி கவசம், சண்முக கவசம், ஸ்ரீ ஸ்கந்த குரு கவசம்	0-60
39.	ஆறுமுகனுக்குகந்த ஆறு படைவீடுகள்	7-50
40.	இயற்கை தரும் இன்மருந்துகள்	8-00
41.	குழந்தைக்கு வீட்டு வைத்தியம்	1-00
42.	விரத பூஜா விதானம்	7-20
43.	குடும்ப ஜோதிடம்	7-20
44.	விவாஹ மந்த்ரார்த்த போதினி	2-50
45.	ரிஷிகளும் கோத்ரங்களும்	6-50
46.	ஸ்ரீ சனிக்ரஹ சாந்தி பூஜா விதானம்	2-00
47.	ஸ்ரீ மஹா பக்த விஜயம்	10-50
48.	தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதி	13-00
49.	Tamil Nadu General Sales Tax (English)	20-00
50.	Central Sales Tax (English)	12-50
51.	Documents-Drafting & Registration (English)	12-00

விவரங்களுக்கு:

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

43, ரங்கநாதன் தெரு, தபால் பை 1028
தியாகராயநகர், சென்னை-600017

போன்: 441538

53 ஆண்டுகள் பொன்னான சேவை!



டயலாக்

கிரிக்கெட் டெஸ்ட் மைதானம்

'அகஸ்தியன்'

''**வா**ய்யா ரமணி... ஜால்ராவோட வந்துட்டியா?''

''வழக்கம் போல் வாலண்டியராப் பூந்துட்டே போலிருக்கு.''

''அவங்கப்பா போலீஸ் டிபார்ட்மென்டு ஆச்சேடா... அதிர்ஷ்டம் பண்ணினவன்.''

''ஏம்பா... சுண்டல் எப்படி?''

''ஒரு ரூபாய்....''

''அநியாயமாக இருக்குதே.''

''உள்ளே போனதும் இரண்டு ரூபாய் சொல்லப் போறாரே. அப்போ இது நியாய விலை ஆயிடும்.''

''பாருங்கடா. இன்னமோ மியூசிக் அகாடமிக் கச்சேரிக்கு வர்ற மாதிரி மயிலாப்பூர் மாமிங்க பட்டுப் புடவையும், தலை நிறையப் பூவுமா வர்றாங்க....''

''யாருப்பா தம்பி... டிக்கட் இருந்தா உள்ற போ... வழியிலே நிக்காதே.''

''டேய், சம்பந்தம்... நீ எங்கேடா வந்தே?''

''சிவாஜியைப் பார்க்கத்தான். அவரு தபா தபா வருவாரே.''

''போடா...சொல்லப் போறேன். அவுட்டோர் போயிருக்காரு, மைசூருக்கு.''

''டிரான்ஸிஸ்டரை 'அலௌ' பண்ண மாட்டாங்களாமே!''

''அலௌவுமாச்சு லவ்வுமாச்சு இயர் போன் வெச்சிக்கிட்டா இவங்களுக்கு இன்னா வந்தது.''

''என்ன சேச்சா... லஞ்ச் மூட்டை பெரிசா இருக்கே.''

''லஞ்ச் மூட்டை பெரிசா இருந்தாத் தப்பில்லே. லஞ்ச மூட்டைதான் இருக்கக் கூடாது.''

''அய்யய்யோ...அய்யய்யோ.. இப்பவே அறுக்க ஆரம்பிச்சுட்டாண்டா சேச்சா. இன்னும் டெஸ்ட் மாட்ச் ஆரம்பமாகவே இல்லே.''

''என் 'சன்' தான் 150 ரூபாய் டிக்கட் வாங்கினான். இன்னிக்குன்னு கம்பெனி எம். டி. வர்றாராம். 'ஏர்போர்ட்டுக்குப் போகணும்; நீ மாட்சக்குப் போப்பா'ன்னான். கிதையிலே ஒரு சுலோகத்திலே...''

''அந்தப் பசங்க ருக்கும் பாய்காட்டும் டீம்லே இருக்காங்களாம்மா?''

''வழி வுடுப்பா ரோவர் வருது.''

''மொள்ளப் பேசய்யா. எதிரே ஆளைப் பாத்தியா... உசிலே மணி டு தி பவர் த்ரீ...''

''அட... நான் நிஜ ரோவரைச், சொல்றேன். அதோ பார் உருட்டிக்கிட்டுவர்றாங்க''

''இன்னா ராஜமாணிக்கம் மிளகு வடையா இந்த வருஷம்?''

''சுண்டல் போட்டா வம்பாகப் போறது. அண்ணே. மீந்துச்சுப் போனா அவ்வளவு பணமும் வேஸ்ட்டாயிடுது. மொளகு வடையினா நாலு நாள்தாங்கும். பீச்சாங் கரையிலே வித்துப்புடும்.''

''தம்பி... ஊதல் வியாபாரமெல்லாம் உள்ளே கூடாது.... நவுரு.''

''பார்ரு... சோ...சோ... சாரே பாத்து நல்ல இடமாக் குந்து. மண்டையைப் பந்து பதம் பார்த்துடப் போவுது.''

''அவுருக்கு இன்னாடா அட்வைஸ்... ஊருக்கெல்லாம் சொல்றவரு....''

''ஹல்லோ... ஹல்லோ டில்லியிலேருந்து எப்ப வந்தாப்போலே?''

''மார்னிங் ஃப்ளைட்... டெஸ்ட் மாட்ச் ஆசை யாரை விட்டுது? ஐந்து நாளைக்கு லீவ் போட்டுண்டு வந்தேன்...''

''ஆமாம், டில்லி எல்லாம் எப்பிடி இருக்கு பி.எம். ஏதாவது டிராமாடிக்கா செய்வாரா? உங்களுக்குத்தான் எல்லா இடத்திலேயும் 'ஸோர்ஸ்' இருக்கே.''

''அஃப் கோர்ஸ்... ஆனா இப்போ நான் எதையும் மூச்சு விட மாட்டேன்....''

''டேய், நான் பெட் கட்றேன். கவாஸ்கர்தான் டாஸ் ஜெயிப்பார்.''

''இல்லேடா. என்ன பெட்?''

''மூன்று மேட்ச் பாக்ஸ் லேபிள். பாரேன் நீ தோக்கப்போறே. எங்க அண்ணன்கூட கவாஸ்கர்தான்னு சொல்றான்.''

''உங்கண்ணன் பெரிய இவரு!''

''போடா... எங்கண்ணனுக்கு எல்லாம் தெரியும்... போர்த் கிளாஸ் படிக்கிறான்டா! உன்மாதிரி இரண்டாம் கிளாஸா?''

''ஆல் செட் அண்ட் டன், திஸ் டைம் தி மேட்ச் வில் பி டிசிஸிவ்... அன்லஸ் தே ரிசார்ட் டு நெகடிவ் டேக்டிஸ்.''

''பட் சேப்பாக் கிரௌண்ட் ஈஸ் ஆல்வேஸ் ட்ரிக்கி. எனிதிங் கேன் ஹேப்பன்.. ஆஃப்டர் ஆல் கிரிக்கெட் ஈஸ் தி மோஸ்ட் அன் பிரிடிக்டபிள் கேம்.''

''சேகர்... போய் கர்சீப் போட்டு வை. நம்ப மணி வரேன்னு சொல்லி இருக்கான். அவனை அழைச்சிண்டு பின்னாலே வரேன்.''

''ஏம்மா... ஏம்மா... குழந்தை உன்னைத் தான்... இந்தக் கிழவியை யாரும் கவனிக்க மாட்டேங்கறாங்க. இன்னாப்பா கூட்டம். புரட்சித்தலைவர் வர்றாரா இன்னா? மனுக் குடுக்கோணும்''

''டீ.விலியே காட்டறாங்க... இருந்தாலும் இவ்ளோ ஜனம் சாயுது. இந்த ஆட்டத்திலே என்ன மாயம் கீதோ புரியலே.''



கவாஸ்கர் பாடறாருமே..
மாமீ, அவர் பாடலே! ஆடறார்!
சுண்டல் ஒரு ரூபாயா? அநியாயமா இருக்கே!
உன்னே போலவும் நானே ரெண்டு ரெண்டு போசொல்லப் போறேன், அப்போ இது நியாயமாப் போயிடும்!
சிதம்பர தரிசனமா... ஆஹா.. உனக்கு.. மடையா.. சிதம்பர...
அப்பா.. அப்பா, இங்கேயும் பாடி எம்மானத்தை வாங்காதீங்க..
லஞ்ச் மூட்டை பெரிசா கொண்டு வந்திருக்கியே!
லஞ்ச் மூட்டை பெரிசா இருக்கலாம் லஞ்ச மூட்டைதான் இருக்கக் கூடாது!
போச்சுடா... மாட்ச் ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடியே அறுக்க ஆரம்பிச்சுட்டான்!
ரோஜர் வருதுன்னு அவரை சொல்லலே.. அதோ அந்த நிஜ ரோஜரை சொன்னேன்! பட்..
சேப்பாக் கிரவுண்ட் இஸ் ஆல்வேஸ் டிங்கி..
அந்தப் பசங்க குக்கும் பாய்காட்டும் மேலே இருக்காங்களா, அம்மா?
சோ, சார், நல்ல இடமா பார்த்து உக்காருங்க,
ஊருக்கெல்லாம் அட்வைஸ் பண்றவரு. நீ அவருக்கு அட்வைஸ் பண்றியா?
பால் மண்டையை பதம் பார்த்துடப் போகுது!
இன்னு கூட்டம் புரட்சித்தலைவர் வர்றாரு..

கிரிக்கெட்டியது...!

ஜெ.எஸ்.ராகவன்

குரங்கு பெடல் அடித்துக்கொண்டு நாப்பது டிகிரி செல்ஷியஸ் வெயிலில் நீ அணைப்பு ஊழியரின் அவசரத்துடன் வைத்தி வந்த போது கிரி நுங்கு சாப்பிட்டுக்கொண்டிருந்தான்.

''கிரி சார்! ஆஞ்சநேயர் வெஸஸ் பிள்ளையார் கோயில் தெரு மாட்சில் நீங்கதான் அம்பயராம்.''

''அட!''

''நாளைக்குப் பத்து மணிக்கு பஜனை மடவாசல் கிரௌண்டிலே மாட்ச். மறந்திடாதீங்கோ!''

வைத்தி போனவுடன் கிரி தன்னை டெஸ்ட் அம்பயராகப் பாவித்து, மானசீகமாக 'டிரஸ் செய்துகொள்ள ஆரம்பித்தான். கருப்பு பாண்ட். பாண்ட்டே தேவையில்லாத வகையில் நீளமான கோட். வெள்ளைத் தொப்பி, ஷூ... டிரெஸ் முடிந்தவுடன் குனிந்து வாயுப் பிடிப்பால் அவதிப்படும் இழவரைப்போல் இரண்டு கைகளையும் முட்டி மேல் வைத்துக்கொண்டு ஒரு கூர்மையான பார்வையுடன் தலையை உயர்த்தி, குனியத்தை வெறித்து நின்றான். எதிர் வீட்டு டெரஸிலிருந்து 'கலகல'வென்று சிரிப்பொலி கேட்டது.

கிரி அண்ணாந்து பார்த்தான். 'பளபள' வென்று புதிய கிரிக்கெட் ஸ்டம்ப் போல் வாளிப்பான உடல். சற்று முன் அவன் சாப்பிட்ட நுங்கு போன்ற கன்னக் கதுப்புக்கள். ''ஹௌ இஸ் தட்!'' என்று ஆச்சரியத்துடன் கேள்வியைத் தொடுப்பது போல் அகல விரிந்த கண்கள். லாங் லெக்ஸ்! கிரிக்கெட் பித்தரான இச்சாமியால் 'பாட்'மா என்று செல்லமாக அழைக்கப்படும் மெய்டன் பத்மா!

பரவசத்துடன் கிரி வலது கையை முன்னே நீட்டி 'விலுக் விலுக்'கென்று நான்கு முறை உதறினான். உடனே மூன்று அடி முன்னால் வந்து இரண்டு கைகளையும் யாரோ 'ஹாண்ட்ஸ் அப்' என்று உத்தரவு இட்டதுபோல் மேலே தூக்கினான்.

'ஊர் பௌண்டரியில்' இருக்கும் பூங்காவுக்குச் சாயந்திரம் ஆறு மணிக்கு வா' என்ற அம்பயரின் சிக்னல்களைப் புரிந்துகொண்ட பத்மா தலைகுனிந்து வந்தாள்.



பொசுக்கும் வெய்யிலில் ஒரு மணி நேரம்

நின்றுகொண்டிருந்த அம்பயர், டிரிங்க்ஸ் கொண்டு வருபவனைப் பார்க்கும் ஆர்வத்துடன் பத்மாவைப் பருகிக் கொண்டிருந்த கிரி, திடீரென்று கேட்டான்: ''பத்மா! நெஜமாவா! உன் அப்பா கூட நாளைக்கு ஆடப் போறாராமே!''

''ஆமாம் கிரி! அவரைப் பத்தித்தான் உனக்குத் தெரியுமே! சரியான கிரிக்கெட் பைத்தியம். குழந்தைகள் ஆறு பிறந்தவுடன்தான் 'ஓவர்' என்று சொன்னவர். ராகத்தில் சிறந்தது 'பந்து'வராளி என்று பீற்றிக்கொள்பவர். ஹூம்! பிள்ளையார் கோவில் தெருக்காக ஆடப் போறாராம்!''

''பத்மா! பிள்ளையாரும் ஆஞ்சநேயரும் கட்டைப் பிரம்மச்சாரிகள். ஆறு இந்தியப் பிரஜைகளை ஈன்ற உன் அப்பாவுக்கு இந்த மேட்சில் என்ன வேலை?''

''ப்ளீஸ் கிரி! நான் சொல்றதைக் கேளேன். நீதானே அம்பயர். அப்பா சட்னு அவுட் ஆகாமல் பார்த்துக்கோயேன். அவுட்டாயிட்டா அழுவார். கிரி...கிரி... அந்த சேஷாத்ரி 'ஹௌ இஸ் தட்' என்று காட்டுக் கூச்சல் போட்டால் படால்னு கையைத் தூக்கிடாதே!''

''நோ!'' என்று உரக்கக் கத்திவிட்டு விறைத்து நின்றான் கிரி. ''அது மாத்திரம் முடியாது. பத்மா! தெரிஞ்சுக்கோ. அம்பயர் கிட்டே இரண்டு விஷயங்கள் முக்கியம். ஒண்ணு பாரபட்சமா இருக்கக் கூடாது. ரெண்டு சைட் ஸ்கிரீனை விட அகலமாக இருக்கக் கூடாது!''

பத்மாவின் கண்கள் 'கண்ணீர், கண்ணீர்' என்று பயமுறுத்தின. 'நம் காதலுக்கு இது ஒரு டெஸ்ட்' என்பதைப் போல் ஒரு பார்வை பார்த்தாள். பின்னர் அங்கிருந்து வேகமாக நகர்ந்தாள்.

''**நா**ன்தான் ஓபன் பண்ணுவேன்'' என்று குஷியாகக் கிளம்பிய கிச்சாமியை பஜனை மட ஸ்டேடிய ரசிகர்கள் கைதட்டி, விசிலடித்து ஜால்ராக் கொட்டி உற்சாகப்படுத்தினர்.

தூக்கி டப்பாக் கட்டுக் கட்டிய வேஷ்டி: பனியனா, ஸ்லாக்கா, புஷ் கோட்டா, ஜிப்பாவா என்று இனங்கண்டு கொள்ள முடியாத ஒரு விபரீத மேலுடை. மூக்கு நுனியில் தொத்திக் கொண்டு உறவாடும் இரண்டு மைனஸ் ஆறு கோளங்கள். அரை மனசுடன் பேட்டிக்கு வந்து துப்புரவு ஊழியர் ஏந்திய துடைப்பம் போல் கைகளில் 'காஷ்மீர்வில்லோ' பாட் — கிச்சாமி முதல் பந்துக்குத் தயாராக இருந்தார்.

ஒன், டூ, திரீ என்று ஃபாஸ்ட் போலர் சேஷாத்திரி இருபத்தேழு ஸ்டெப்களை எடுத்துச் சடக்கென்று திரும்பி, ஓடிவந்து, கிலியுடன் நின்றிருந்த கிரியைத்தாண்டி, ஐந்தரை அவுன்ஸ் பந்தை மணிக்கு சுமார் ஐம்பது மைல் வேகத்தில் விட்டான்.

பீமன் வேஷம் பூண்ட புரிசை தெருக்கூத்துக் கலைஞர் கதையைச் சுழற்றிக்குதிப்பது போல் கிச்சாமி ஒரு முறை ஆடி அருளினார். பந்து அவர் கபாலத்தை முத்தமிட நினைத்து வேண்டாம் என்று மனம் மாறி இரண்டு



விரல்கடை இடைவெளி விட்டு மேலே பறந்தது.

''எங்கயான படக் கூடாத இடத்தில் படப் போகிறது'' என்று குழுமியிருந்த ரசிகர்களில் ஒருவர் தமது கவலையைத் தெரிவித்தார்.

அடுத்த பந்து, நல்ல பந்து! பந்தின் நீள வேகங்களைக் கணப் பொழுதில் கணித்த கிச்சாமி காஞ்சீபுரம் ஸ்ரீ வரதராஜப் பெருமானின் கருட வாகனம் போல் முட்டி போட்டு மட்டையின் உதவியுடன் பந்தை ஈசானிய மூலைக்குத் திருப்ப முயன்றார்.

கிரிக்கு 'மளக்' கென்று எலும்பு ஒடியும் சத்தம் கேட்டது. பந்து கிச்சாமியின் முட்டியையோ, அதைச் சார்ந்த பகுதியையோ நிச்சயமாகத் தாக்கியிருக்க வேண்டும்என்று கிரி உணர்ந்தான். கோவில் காளையின் மூர்க்கத்துடன் ''ஹௌ இஸ் தட்'' என்று கத்திய சேஷாத்திரியைப் பார்க்காதது போல் நின்றான்.

முட்டியைத் தடவிக் கொண்டே ''பரவாயில்லை. நீங்கள் போடுங்கள்'' என்று சமிக்ஞை செய்து பாட்டை கிச்சாமி கீழே வைத்த உடனேயே, அடுத்த பந்து கோடை இடி போல் இறங்கியது. தினைப்புனத்தில் ஆலோலம் பாடி 'சோ' என்று ஸ்ரீ வள்ளி

விரட்டிய நளினத்துடன் இச்சாமி பாட்டை விசிக் காட்சி அளித்தார்.


பந்துக்குப் பட்ட காலிலே படவேண்டும் என்று தெரியும். பட்டது. ''ஹௌ இஸ் தட்'' என்ற ராட்சசக் குரலைக் கேட்ட வுடன் கிரியின் வலது கை அசெம்பிளியில் ஆளும் கட்சி எம். எல். ஏ. தூக்கும் வேகத் துடன் எழும்பி வானத்தைப் பார்த்து நின்றது. இச்சாமியைக் குதிரை வண்டியில் வீட்டுக்கு எடுத்துக் கொண்டுபோனார்கள்.

பார்சல் செய்யப்பட்ட ஸ்பெஷல்மசாலா தோசை பாணியில் நீட்டாக பாண்டேஜ் சுற்றிய அப்பாவின் காலைப் பத்மா கவலை யுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''வாப்பா கிரி! நான் நேத்திக்கு அவுட்டே இல்லே. அந்தக் கொலைகாரப் பாவி சேஷாத் திரி போட்ட பந்துகளை நான் மேலே அடிக் கொண்டு இருந்து அவன், 'ஹௌ இஸ் தட்' என்று கத்தியிருந்தால் நீ என்ன, நமக்கு மேலே இருக்கிற அம்பயர் கூட கையைத் தூக்கி யிருப்பார். சமயோசிதமாக அவுட் கொடுத்து எனக்கு 'லைஃப்' கொடுத்தே.''

கிரி மென்று விழுங்கினான்.

''பத்மாவை அவனுக்குக் கல்யாணம் செய்து வைக்க மாட்டேன்னு சொன்னதில் அவனுக்கு வெறி....''ஸ்போர்ட்டிங்கா எடுத் துக்கத் தெரியாதவனெல்லாம் லைஃப், கிரிக் கெட் ரெண்டிலேயும் அவஸ்தைப் படணும். ஹூம் அவன் எனக்குக் கால் கட்டுப் போட் டான், நானும் போடறேன். யாருக்கு? உனக்கும், பத்மாவுக்கும்தான். நீதான் அம் பயராச்சே, ஆடமாட்டே!'' முட்டியை அழகு பார்த்துக் கொண்டு இச்சாமி தொடர்ந்தார்: ''ஆட்டி வைப்பே!''



நான் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள இந்து உயர்நிலைப் பள்ளியில் 1956ம் ஆண்டு எஸ்.எஸ்.எல்.ஸி. படித் துக் கொண்டிருந்தேன். எங்கள் பள்ளி யில் என். ஸி. ஸி. அதிகாரி மிகவும் நல் லவர். மிகவும் சோஷியல் டைப். நாங்கள் சேப்பாக்கம் கடற்கரைக் கருகில் கிரிக்கெட் விளையாடும்போது அவரும் எங்களுடன் ஆடுவார். ஒரு நாள் அவர் அடித்த பந்தை நான் காட்ச் பிடிக்கச் சென்றபோது, எங்களது சக மாணவன் ஒருவன் ''ஆ'' என்று வாயைத் திறந்துகொண்டு அதே காட்ச் சைப் பிடிக்க வந்திருக்கிறான். அவனுக் குப் பல் பெரியது. நாங்கள் மோதிக் கொண்ட போது அவனது பல் என் வலது கண்ணுக்குச் சற்றுக் கீழே ஆழ மாகப் பதிந்துவிட்டது. குபுகுபுவென்று இரத்தம் வந்தது. உடனே மேற்படி என்.ஸி.ஸி. அதிகாரி என்னை ராயப் பேட்டை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போய்த் தையல் போட்டு வீட்டுக்கு அனுப்பி வைத்தார். இன்றும் கண்ணாடி யில் என் முகத்தைப் பார்க்கும்போது அந்தத் தழும்பு நன்றாகத் தெரியும். மகிழ்ச்சியான நாட்களை நினைவூட்டும்.

—எம். நடராஜன்



களம்: சென்னை யூனிவர்ஸிட்டி யூனி யன் கிரவுண்ட். லீக் மேட்சில் எங்களை எதிர்த்து ஆடிய ஐ.ஸி.எஃப். அணியில் அப்போது பிரபல ஆல் ரௌண்டர் பிரகாஷ் பங்காரா ஆடினார்.

சுழற் பந்து வீச்சாளரான என் மூத்த சகோதரன் பந்தை வீச, பிரகாஷ் பங் காரா மட்டையை ஓங்கி வீச, 'டொங்' என்ற சத்தம் கேட்க, மின்னல் வேகத் தில் ஒரு உருண்டையான வஸ்து எல் லைக் கோட்டைத் தாண்டி மறைந்தது. ஸில்லி மிட் ஆனில் நின்றிருந்த குஞ்சித பாதம் (நல்ல மோட்டா ஆசாமி) தன் தலையை வேகமாகத் தேய்ப்பதைப் பார்த்ததும்தான் எங்களுக்கு விஷயம் விளங்கியது. அடுத்து பந்து எங்கே என்று கேட்கப்பட்டபோது, குஞ்சித பாதம் அந்த நிலையிலும் நகைச் சுவை உணர்வுடன் தன் தலையைக்காட்டினான். பலமான பந்தடியால் அவன் தலையில் ஒரு சிறு 'பந்து' புதிதாக உருவெடுத் திருந்ததே அதற்குக் காரணம்!

—ஏ. கே. பிரசாத்


உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
EGG
Halo
SHAMPOO
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தி
யின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும்
காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான
ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம்
நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப்
படியவைத்து அதற்குத் தேவையான எல்லா
ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக
ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரை வளம்
உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும்
தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
HES. G. 4. TH

"அவன் எல்லாம் என்னிக்குமே மேலே போகமாட்டான் எழுதி வேணுமின்னுத் தரட்டுமா?'' என்று ஹெட் கிளார்க் ஏகாம்பரம் பியூன் பங்காருவிடம் சீரியஸாகப் பேசிக் கொண்டிருந்தபோது சரவணன் சத்தமில்லாமல் ஆபீசுக்குள் நுழைந்து கொண்டிருந்தான்.

''இவனுக்குச் சாவே இல்லேடா. இவனைப் பத்திப் பேச ஆரம்பிக்கும்போதே வந்துட்டானே!'' மெல்ல பங்காருவிடம் முணுமுணுத்த ஏகாம்பரம் சரவணன் தன்னைக் கடக்கும்போது ''குட்மார்னிங் சார்'' என்று ஒரேயடியாகக் குழைந்தான். அவனுடைய காலை வணக்கத்தை மிகவும் மரியாதையோடு ஏற்றுக் கொண்டு ''வே டு டிசைன் டிபார்ட்மெண்ட்.'' என்று அம்புக் குறி கை காட்டிய மாடிப் படிகளின் மேல் விரைவாக ஏறினான் சரவணன். டிபார்ட்மெண்டுக்குள் நுழைந்து வரிசையாகப் போடப்பட்டிருந்த டேபிள்களை ஒட்டிக் கம்பீரமாக நின்றிருக்கும் டிராயிங் போர்டுகளை அணுகினான். அவைகளின் மேல் படர்ந்திருக்கும் பேப்பர்களில் பாதி பிறப்பெடுத்திருக்கும் படங்களைப் பார்வையால் மேய்ந்தபடி தனியாகப் போடப்பட்டிருந்த தன் இருக்கையை அடைந்தான். ஜன்னல் கதவுகளைத் திறந்துவிட்டு, சற்று நேரம் காலை நேரத்துக் காற்றைக் கண்களை மூடி அனுபவித்தவன் தொலைவில் சரம் சரமாகப் புகை விட்டபடி சத்தமில்லாமல் இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலையைப் பாசத்தோடு பார்த்துவிட்டு, சுவரில் தொங்கிக்கொண்டிருந்த ஸ்வாமி படங்களுக்குக் கரங்குவித்தான். பிறகு கண்ணாடி தளமிட்ட மேஜையையும், எம். சரவணன் சீனியர் ட்ராப்ட்ஸ்மேன் என்று வெள்ளை எழுத்துக்களில் பல்லைக்காட்டிய பெயர்ப் பலகையையும் பளபளவென்று துடைத்துவிட்டு நாற்காலிக்குப் பாரமானான். பென்சிலை எடுத்து அதன் முனையைச் சோதித்துத் திருப்தி அடைந்தவனாகப் பத்திரப் படுத்திவைத்திருந்த 'ஸ்கெட்ச்' நோட்டை எடுத்து நிதானமாகப் புரட்டத் தொடங்கும்போது காலை மணி எட்டுஎன்பதைச் சொல்வதற்காக சைரன் ஒரு முறை பெரிதாக அழுது ஓய்ந்தது.... ஆயிற்று... இனி மாலை ஐந்து மணி வரை இந்தச் சரவணனை மனிதனாகவே பார்க்க முடியாது. ட்ராப்டரையும், பென்சில்களையும், மூளையையும், கனவேகமாக இயக்கும் ஓர் இயந்திரமாகத்தான் பார்க்க முடியும். இன்று நேற்றல்ல. கடந்த பத்து வருடங்களாக இந்தக் கம்பெனியின் வளர்ச்சிக்காகக் கடுமையான உழைப்பில் தன்னைக் கரைத்துக் கொண்டிருக்கிறான் சரவணன். இதுவரை எந்த வேலைக்கும் அவன் சலித்துக் கொண்டதே இல்லை. இந்த ஆபீசில் காலை மணி எட்டு என்பதை யாரும் கடிகாரத்தைப்பார்த்து அறிந்து கொள்வதில்லை. சரவணன் சீட்டில் இருந்தால் போதும். காலை மணி கண்டிப்பாக எட்டுத்தான்.. குறித்த நேரத்தில் தொடங்கி, குறையில்லாமல் வேலையை முடிப்பதுதான் அவனுடைய 'ஸ்பெஷாலிடி' — எளிமை — இனிமை — திறமை — இவை மட்டுமே இவன் உடைமை! அச்சு இயந்திரங்களை உற்பத்தி செய்யும் இந்தக் கம்பெனியின் வளர்ச்சிக் கோட்டின் ஒவ்வொரு அங்குலத்தின் பின்னும் இவ



னுடைய அயராத உழைப்பு ஒளிந்து கிடப்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை! ஆனால் இவன் மட்டும் இன்னும் அப்படியேதான் இருக்கிறான். 'ப்ரமோஷன்' என்ற பேச்சுக்கே இடமில்லை. இவனும் அதைப் பெரிதாக நினைப்பதோ, அதைப் பற்றிப் பிரஸ்தாபிப்பதோ இல்லை. ஆனால் மற்றவர்கள் இவனைப் ''பிழைக்கத் தெரியாதவன்'' என்கிறார்கள்.

அதையும் இவன் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டு எழுதி எழுதித் தேயும் பென்சில் முனையாகிக் கொண்டிருக்கிறான். அடுத்தவர்கள் இவனுடைய நிலைமைக்காக அனுதாபப்பட்டு அக்கறையோடு விசாரிக்கும் போது இவனுக்கு அடி மனத்தில் 'ப்ரமோஷன்' ஆசை துளிர் விடுவதுண்டு. ஆனால் அதை வெளிக் கொண்டு வரும் சாமர்த்தியமும் தைரியமும் இல்லாமல் வெயில் பட்ட தண்ணீராக அது வீணாகிப் போகும். அதற்காக வேலையில் அலட்சியம் காட்டுவதை இவன் மறந்தும் செய்வதில்லை. இவனுக்குப் பின்னால் இங்கு வந்து, இவனிடம் டிரெய்னிங் எடுத்துக்கொண்டவர்கள் எத்தனையோ பேர் இன்று உயரத்தில் இருப்பதை உற்சாகத்தோடு பார்த்துக் கொண்டு இவன் இங்கேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறான்.

'ப்ரமோஷனை' எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்திருந்த நேரத்தில் சென்ற வருடம் ''சீனியர் ட்ராப்ட்ஸ்மேன்'' என்ற ஆர்டரைக் கையில் வாங்கியதும் இவனுக்கு ஏக குஷியாக இருந்தது. ஆபீசில் எல்லோருக்கும் எஸ்.கே.சி. (ஸ்வீட், காரம், காப்பி) சப்ளை செய்தான். அதைச் சப்புக்கொட்டி உள்ளே தள்ளிய எவரும் இதைப் பெரிய சாதனையாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஒப்புக்காக இவனைச் சிலாகித்துப் பேசிவிட்டு இவன் முதுகுக்குப் பின்னால் போய்ச் சிரித்துவிட்டுப் போனார்கள்!

கையில் காப்பிக் கோப்பையோடு கலகலப்பாக எல்லோரும் அரட்டை அடித்துக் கொண்டிருக்கும்போது சரவணன் மட்டும் எதையோ தீவிரமாக 'ஸ்கெட்ச்' பண்ணிக் கொண்டிருந்தான். காப்பிக் கோப்பையைக் கவனிக்காமல் பேப்பரில் கோடு கிழித்துக் கொண்டிருக்கும் இவனைப் பற்றிச் சத்தமில்லாமல் 'விட்' அடித்து எல்லோரும் சத்தம் போட்டுச் சிரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போதுதான் ஆபீசுக்குள் நுழைந்தான் சங்கர். அவனுக்கு முன்பே அவனுடைய கையை விளம்பரப்படுத்தும் உயர் ரக 'இன்டிமேட்' சென்டில் உருகிப்போய் எல்லோரும் திடீரென ஊமையானார்கள். அவன் 'ஹாய்' என்று அட்டகாசமாகக் கையசைத்து எல்லோருக்கும் உயிர் கொடுத்தான்! அதைத் தொடர்ந்து ஆபீஸ் அதிகப்படியான ஆர்ப்பாட்டத்தில் அமிழ்ந்தது. சங்கர் இந்த ஆபீசில் ஒரு 'அட்ராக்டிவ் பிகர்'. பொறுப்பு வரவேண்டும் என்ற ஆசையில் பொழுது போக்காக வேலைக்கு வரும் பெரிய இடத்துப் பிள்ளை. நாக்கு நுனியில் சரளமான ஆங்கிலம்

'கார்பன் காப்பிகள்'

— ஜரா —



நடனமாட, ஹாட்விசேஷையும், அகதா கிறிஸ்டியையும் அப்படியே அலசுவதுதான் அவனுக்கு ஆபீஸ் வேலை! பியூனிலிருந்து மானேஜர் வரை அத்தனை பேரையும் தன் வசீகரமான பேச்சு வலையில் பிடித்துப் போட்டிருப்பவன்! காலத்துக்கு ஏற்ற உடையலங்காரம், நேர்த்தியான பேச்சு, பெரிய மனுஷ தோரணை, பெரிய இடங்களின் சிபாரிசு, எல்லாமாகச் சேர்ந்து அவனை அதி முக்கிய மான [illegible]ஸனாலிட்டியாக்கி வைத்திருந்தன!

லேட்டஸ்ட் ஹிந்திப் படம் ஒன்றின் 'ஏ' சீனைப் பற்றி ரன்னிங் காமெண்டரி கொடுத்துக் கொண்டிருந்த சங்கரின் ஆர்வத்தை அனுமதி இன்றிக் கலைத்தான் சரவணன்! ''சங்கர்! அந்த சிலிண்டர் மிஷின் அசெம்பிளியை முடிச்சிட்டீங்களா?''

சினிமாவைப் பற்றி சீரியஸாகப் பேசிக் கொண்டிருக்கும்போது சிலிண்டர்மிஷினோடு உள்ளே பிரவேசிக்கும் அநாகரிகத்தைக் கண்டிப்பவன் போல் இவனை அருவெறுப்பாகப்

பார்த்த சங்கர் ''இப்பத்தானே சார் ஆன் டூட்டியிலேருந்து ரிலீவ் ஆகி வந்திருக்கேன். அதுக்குள்ளே போர்டுக்குப் போகணுமா! உங்களுக்கு அவசரம்னு நீங்களே பார்த்துடுங்க'' என்று எரிச்சலோடு முனகிவிட்டு மீண்டும் தன் பணியில் மூழ்கி விட்டான். சற்று நேரம் நிதானித்து விட்டுச்சங்கரின் போர்டை நெருங்கி, அரை குறை கோடுகளில் அரை நிர்வாணமாக நிற்கும் டிராயிங்கை ஆர்வத்தோடு பரிசோதிக்கும் சரவணனைப் பார்த்துக் கொண்டிருந்த பங்காரு ஒதுங்கிப்போய்த் தலையில் அடித்துக் கொண்டான்.

மாலை மணி நான்கு இருக்கும்! மதிய இடைவேளையில் பியூன் பங்காரு ஹோசூரில் ஆரம்பித்திருக்கும் இதன் கிளைத் தொழிலகத்துக்கு சரவணனை ''டிஸைன் என்ஜினியராக'' ப்ரமோட் பண்ணியிருக்கிறார்கள் என்ற வெடிகுண்டை எல்லோர் முன்னிலையிலும் வெடிக்கவும் அது எழுப்பிய புகை மண்டலத்தில் இப்போது எல்லோரும் திணறிக்கொண்டிருந்தார்கள். ''ஆர்டரை நீ பார்த்தியா பங்காரு''

''என் ரெண்டு கண்ணாலே பார்த்தேங்க... நம்ம டிஸைன் என்ஜினியர் கூட சரவணன் சாரைப் பத்தி மானேஜர்கிட்டே இங்கிலீஷிலே புகழ்ந்து தள்ளினாரே!''

''ஆமா ஹோசூர் 'ட்ரை' ஏரியாவாச்சே! இது அங்கே போய்த் தாக்குப் பிடிக்குமா?''

''நீ ஒண்ணு! பக்கத்திலே பெங்களூர் ஸிடி இருக்கில்லே — அம்சமா அனுபவிக்கலாம். ஆனா இதுக்கு அதனோட அருமை தெரியணுமே!''

அத்தனை பேருடைய பாராட்டுக்களும் தந்த அழுத்தத்தில் திக்கு முக்காடித் திணறிக் கொண்டிருந்த சரவணனை மானேஜரின் அழைப்பு இலேசாக்கியது. மகிழ்ச்சியை வரவேற்கத் தன்னைத் தயார்ப் படுத்திக் கொண்டு மேனேஜரின் அறையை நோக்கி நடந்தவனிடம் ஒவ்வொருவராக வந்து ''சார்... ஸவினிங் எஸ்.கே.சி. உண்டுல்லே?'' என்று உறுதிமொழி வாங்கிக்கொண்டார்கள், சரவணன் உவகை மிகுதியால் உயர உயரப் பறந்து கொண்டிருந்தான்.

''மிஸ்டர் சரவணன்! உங்களுக்கு ஒரு குட் நியூஸ்' சொல்லப் போறேன். நம்ம 'ஹோசூர் பேக்டரியோட' வளர்ச்சிக்காக ரொம்பக் கஷ்டப்பட்ட உங்களுக்கு எம்.டி. கிட்ட இருந்து வாழ்த்துச் செய்தி வந்திருக்கு! உங்களுக்கு ரெண்டு இன்க்ரிமெண்ட் கூடப் போட்டிருக்காரு.''

''ரொம்ப சந்தோஷம் சார்!'' குரல் நெகிழக் கூறிவிட்டு சிகரெட் சாம்பலை 'ஆஷ் டிரேயில்' தட்டும் மேனேஜரை ஏறிட்டுப் பார்த்தான் சரவணன்.

''கூடவே ஹோசூர் பேக்டரிக்கு ''டிஸைன் என்ஜினியரா...மிஸ்டர் சங்கரை 'ப்ரமோட்' பண்ணி இருக்காரு.''

மேனேஜரின் வார்த்தைக் குண்டுகள் தாக்கிய வேகத்தில் மேலே பறந்து கொண்டிருந்த சரவணனின் உவகைப் பறவை சிறகொடிந்து போய்க் கீழே விழுந்தது. இருக்கை கொள்ளாமல் எழுந்தவன் இயல்பான கூச்சத்தால் மீண்டும் அமர்ந்தான்.

''உங்க கிட்ட 'ட்ரெயினிங்' எடுத்துக் கிட்டவங்க என்னிக்குமே சோடை போனதில்லே...'' பைதி பை.. மிஸ்டர் சங்கரை ரிலீவ் பண்ணிடுங்க. வீ டோண்ட் வாண்ட் டு லூஸ் யுவர் சர்வீஸ்.''

கை குலுக்கி அனுப்பும் மானேஜரை ஒளி மங்கிய கண்களிலிருந்து உதறித் தள்ளிவிட்டுக் கற்பாறையாய்க் கனக்கும் இதயத்தோடு வெளியே வந்தான் சரவணன். வந்ததும் வராததுமாய் அவனை வளைத்துக் கொண்டு ''ஆர்டர் எங்கே சார்'' என்று ஆவலோடு கேட்கும் அத்தனை பேரையும் அமைதியாகப் பார்த்து ''ஆர்டர் எனக்கில்லே... மிஸ்டர் சங்கருக்குத்தான்.'' என்று சொல்லிவிட்டு எந்திரமாகத் தன் இருக்கைக்கு வந்தான்.

ரன் குவிக்க உதவிய நாய்!

கல்லூரி விடுமுறை நாட்களில் மாலையில் நானும் எனது நண்பர்களும் இரு அணிகளாகப் பிரிந்து கிரிக்கெட் விளையாடுவது வழக்கம். நாங்கள் பிள்ளையார் கோவிலைச் சார்ந்த மைதானத்தில் விளையாடுவதால் கோவிலுக்கு வருபவர்கள் விளையாட்டைப் பார்ப்பது உண்டு.

வழக்கம்போல் எங்கள் விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தில் ஒரு சிறுவனுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த நாயும் பார்த்துக் கொண்டிருப்பதை நான் கவனித்தேன்.

விளையாட்டில் நான் அடித்த பந்து நாயின் அருகில் சென்றபோது திடீரெனப் பந்தை நாய் கௌவிப் பிடித்து வெகு வேகமாக ஓடத் தொடங்கியது. பந்தைப் பிடிப்பதற்காகப் பின்னாலே நாயைத் துரத்திக் கொண்டு என் நண்பன் ஓட, இந்த இடைவெளியைப் பயன்படுத்திக்கொண்டு நான் 'ரன்'களை அதிக அளவில் குவித்தேன். சுற்றி நின்றவர்களின் ஆரவாரம் விண்ணைப் பிளந்தது!

— அ. சிவசங்கர், பி.ஏ.




பல் டாக்டர்கள் கூறுகிறார்கள்

பற்கள், ஈறுகளின் முறையான பராமரிப்பிற்கு, பற்களை பிரஷ் செய்வது போன்றே ஈறுகளைத் தேய்த்துக் கொடுப்பதும் அவசியமாகும்

போர்ஹென்ஸ் டபிள் ஆக்ஷன் டூத்பிரஷ் உபயோகியுங்கள்

இது உங்கள் பற்களை பிரஷ் செய்யும்போதே ஈறுகளையும் தேய்த்துக் கொடுப்பதற்கேற்ப விசேட முறையில் உருவாக்கப்பட்டது



போர்ஹென்ஸ்
டூத்பிரஷ்

குடும்பத்தினர் எல்லோருக்கும்
அடல்ட் (மீடியம், சாஃப்ட்),
ஜூனியர், பேபி

Regd. T.M: Geoffrey Manners & Co. Ltd.

256F-203 TAM

ஜலதோஷம் உங்கள் நாளையே கெடுக்க அனுமதிக்காதீர்கள்



ஜலதோஷத்தைப் போக்கலாம்

நல்ல ஒரு நாளையே கெடுக்கும் மூக்கு ஒழுகுதல் அல்லது மூக்கடைப்பு, தலை கனம், தொண்டைக்கட்டு மற்றும் மார்சளி போன்றவற்றுடன் உள்ள ஜலதோஷத்திலிருந்து நிவாரணம் பெற ஒரு வழி இருக்கிறது.

ஜலதோஷ மருந்து கொண்டு தாக்கிடுங்கள்

மற்ற உபாதைகளைப் போன்றே இதற்கும் சிகிச்சையளித்தால் போதாது. பாதிக்கப்பட்ட பாகங்களி லெல்லாம் ஒரே சமயத்தில் செயல் புரியவல்ல விசேட ஜலதோஷ மருந்தையே உபயோகியுங்கள்.

கோல்டரின் ஜலதோஷத்திற்கு மட்டுமே

உங்கள் சுறுசுறுப்பைக் கெடுக்கும் அறிகுறிகள் அனைத்தையும் போக்குகிறது—கோல்டரின். இதிலுள்ள விசேட மருந்துப் பொருட்கள் ஜலதோஷத்தினால் பாதிக்கப்பட்ட எல்லா பாகங்களிலும் ஒருங்கிணைந்து செயல்புரிகின்றன. அதோடு, ஜலதோஷ எதிர்ப்பு சக்தியை வளர்த்திட இதில் வைட்டமின் C உள்ளது.

ஜலதோஷத்தினால் பாதிக்கப்படும் போது ஜலதோஷ மருந்தையே சாப்பிடுங்கள்.

குரைக்கின்ற நாய்க்கு எலும்புத் துண்டை எறிவது போல் ஏதோ இரண்டு இன்க்ரிமெண்ட்களைப் போட்டு இவனுடைய ஏமாற்றத்தைப் பூசி மெழுகிவிடப் பார்க்கிறார்கள். மூன்று வருட சர்விஸைக்கூட முழுமையாக முடிக்காத சங்கருக்குப் பதவி உயர்வு! ஆனால் இந்தக் கம்பெனி முன்னேற்றத்துக்காகவே பாடுபட்டசரவணனுக்கோவெறும்பாராட்டு. இவன் ஏக்கத்தோடு ''எம் சரவணன் சீனியர் ட்ராப்ட்ஸ்மேன்''என்ற பெயர்ப்பலகையைப் பார்க்கிறான். திடீரென ''சீனியர் ட்ராப்ட்ஸ்மேன்'' என்ற எழுத்துக்கள் ஒடி மறைந்து ''ஏமாந்த சோணகிரி'' என்ற எழுத்துக்கள் இடம் பெறுகின்றன. இவன் எரிச்சலோடு தலையை உலுக்கிக்கொண்டு எழ முயலும்போது ''குறைப் பிரசவமாக பேப்பரில் படர்ந்திருக்கும் 'சிலிண்டர் மெஷின் டிராயிங்' பரிதாபமாக விழித்தது. அதைப் பிரிய மனமில்லாமல் மீண்டும் பாசத்தோடு பென்சிலை எடுத்துக் கொண்டு பழைய சரவணனாகிவிட்டான். தன் ஏமாற்றங்களை வேரோடு பிடுங்கி எடுத்தெறிந்துவிட்டுப் பணியை முடித்துவிடும் தூய்மையான கடமையில் மீண்டும் கரைய ஆரம்பித்தான்.

ஆறு மணி சுமாருக்கு சரவணன் டிபார்ட்மெண்டை விட்டு வெளியே வரும்போது 'ப்ரமோஷன்' ஆர்டரோடு ஸ்டைலாக நின்றிருந்த சங்கரைக் கூட்டம் மொய்த்துக் கொண்டிருந்தது. அதை எந்தவிதமான மனப் பாதிப்பும் இல்லாமல் பார்த்து ரசிக்கும் பக்குவத்தில் இருந்தான் சரவணன். வலிய இவனே போய் சங்கரை வாழ்த்திக் கொண்டிருக்கும்போது ஜெநட் கிளார்க் இவனை அழைத்து எம்.-டி.யின் வாழ்த்துக் கடிதத்தைக் கொடுத்தார். இவன் ஏகாம்பரத்தின் மேஜையில் கிடந்த சங்கரின் 'ப்ரமோஷன்' ஆர்டர் காப்பியைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது ''இந்தா பங்காரு டேபிள் மேலே இருக்கிற கார்பன் காப்பி எல்லாம் பைல்லே போட்டு எடுத்து வச்சிட்டுப் போ'' என்று ஏகாம்பரம் உரக்கக் கத்துகிறார்.

ஒரே விஷயத்தைத் தாங்கியிருந்தாலும் ஒரிஜினல் மதிப்பில்லாமல் பைல்களில் படுத்துத் தூங்கிவிட்டு என்றோ ஒரு நாள் நெருப்புக்கு இரையாகப் போகும் இந்த ''கார்பன் காப்பிகளை''த் தேவையில்லாமல் யார் நினைக்கிறார்கள்? பங்காரு வந்து, காப்பிகளை 'பஞ்ச்' செய்து கொண்டிருக்கும் போது பழைய நிலைமைக்குத் திரும்பியவனாக சரவணன் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தான்.

துணிவு தந்த வெற்றி!


பாபநாசம் விளையாட்டுத் திடலில் வலங்கை, மேல்நிலைப் பள்ளிக்கும், பாபநாசம் மேல் நிலைப் பள்ளிக்கும் 22–2–80 அன்று கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

காசு சுண்டலில் வெற்றிபெற்ற வலங்கைக் குழுத் தலைவனாகிய நான் முதலில் பேட் செய்ய முடிவு செய்து விளையாடி 36 ரன்னுக்கு ஆல் அவுட்; அவர்கள் 58க்கு ஆல் அவுட். இரண்டாவது இன்னிங்சில் 38க்கு வலங்கை குழு சுருட்டப்பட்டது. 17 ரன் எடுத்தால் பாபநாசம் வெற்றி பெறும் என்ற நிலை. என் குழு ஆட்டக்காரர்கள் சிலர் அழ ஆரம்பித்து விட்டனர். ஏனென்றால் நாங்கள் அது வரை யாரிடமும் தோற்றதேயில்லை. உதவித் தலைவன் சந்தானம் தோற்றதாகக் கையெழுத்துப் போட்டு விட்டு வந்துவிடும்படி கூறி அழுகிறான்.


அவர்களது இரண்டாவது இன்னிங்ஸ் துவங்கியது. மிகத் துணிவுடன் நானும், உதவித் தலைவனும் பந்துவீச ஆரம்பித்தோம். எங்கள் அபார பந்து வீச்சில் 11 ரன் கொடுத்து 10 விக்கெட்டைச் சாய்த்தோம். நான் 5 ரன்னுக்கு 6 விக்கெட்டையும் அவன் 6 ரன்னுக்கு 4 விக்கெட்டையும் எடுத்து வெற்றி யைப் பறித்துக் கொண்டோம்.

எங்களின் வியக்கத் தக்க அபார வெற்றியை அனைவரும் பாராட்டி இனிப்பும் டீயும் தந்து, பஸ் நிலையம் வரை வந்து வழி அனுப்பி வைத்தனர். எதிர்க் குழுத் தலைவன் எல்லோர் முன்னிலையிலும் அழுத முகத்துடன் தனது தலைமைப் பதவியை ராஜினாமா செய்வதாக ஆசிரியரிடம் கூறிவிட்டான்.

—ஏ. சீனிவாசன்



கேள்விக் குறி கண்டு கவலை வேண்டாம்!



ஓய்வு காலத் திட்டம்

வாருங்கள், இந்தியன் பாங்கின் ஓய்வு காலத் திட்டத்தைத் தேர்ந்தெடுங்கள்.

நீங்கள் ஓய்வு காலத்தை நினைத்துக் கலங்க வேண்டாம். ஓய்வு காலத்தில் உங்கள் வருமானம் தடைப்படாமல் இருக்க, இப்போதே — நீங்கள் இளமையுடன் சம்பாதிக்கும் போதே — திட்டமிட்டு செயல்படுங்கள். ஒரு குறிப்பிட்ட தொகையை மாதந்தோறும் — 60, 84 அல்லது 120 மாதங்களுக்கு — உங்களுடைய ரெகரிங் டெபாசிட் கணக்கில் செலுத்தி வாருங்கள். ரெகரிங் டெபாசிட் நிறைவு பெற்றதும், அத்தொகை உங்கள் ஓய்வு காலத் திட்டத்திற்கு மாற்றப்பட்டு, மாதாமாதம் நீங்கள் செலுத்தியதை விட பெரிய தொகையாக, நீங்கள் செலுத்திய கால அளவிற்கு, மாதந்தோறும் திரும்பக் கிடைக்கும். எடுத்துக் காட்டாக, மாதந்தோறும் 100 ரூபாய் வீதம், நீங்கள் 84 மாதத்திற்குச் செலுத்தினால், மாதந்தோறும் 201 ரூபாய் வீதம் அதே காலத்திற்கு உங்களுக்குத் திரும்பக் கிடைக்கும்.

ஓய்வு காலத் திட்டம் போலவே, உங்களுக்கு ஏற்ற பல அருமையான திட்டங்கள் இந்தியன் பாங்கில் உள்ளன. முழு விவரங்களுக்கு, உங்களுக்கு அருகில் உள்ள இந்தியன் பாங்க் கிளைக்கு வாருங்கள்.


இந்தியன் பாங்க்

உங்கள் செல்வச் செழுமைக்கு உதவும் வங்கி

Indian Bank 75 YEARS OF SERVICE

இலக்கியத்தில் இறையுணர்வு

இருகையானை



கீரன்

ஐம்புலன்களால் அனுபவிக்கப் பெறும் உலகியல் இன்பங்கள் அனுபவிக்கும்போது இன்பமே: யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் அவை அனுபவிக்கும்போதுதான் இன்பம். அனுபவம் முடிந்த பின்னர் அந்த இன்பம் தொடர்வதில்லை. அநுபவ காலத்தும் அதன் பின்னரும் எண்ணும்போதெல்லாம் இன்பம் தருவன இரண்டு. ஒன்று இறைமை, மற்றொன்று இலக்கியம். அதனால் கடவுளையே இலக்கியம் என்று குமரகுருபரர் குறிப்பிட்டார். ''தொடுக்குங் கடவுள் பழம் பாடல் தொடையின் பயனே'' என்று அவர் மீனாட்சியம்மையைக் குறிக்கும் பொருள் இதுதானே!

மாணிக்கவாசகரின் திருவாசகம் உள்ளத்தை உருக்கும் பக்தி உணர்வுடன் இலக்கிய வளமும் நிறைந்தது. திருவாதவூரர் என்ற பெயர் படைத்தவருக்கு மாணிக்க வாசகர் என்ற பெயர் அமைந்ததே, பழுதற்ற முனை முறியாத சொற்களால் பாடியமை காரணமாக.

மாணிக்க வாசகர் மனிதனின் உள்ளப் போக்கை நன்கு உணர்ந்தவர். மனிதன் ஆன்மா இறைவனை நோக்கியும், அவன் உடல் உலகியலை நோக்கியும் பிரயாணம் செய்கின்றன என்பதை நன்கு உணர்ந்தவர். வெவ்வேறு திசையில் செல்லும் ஆன்மாவையும் உடலையும் ஒன்றாக்கி இரண்டையும் ஆன்ம நாயகன்பால் செலுத்துவதே பக்தி நெறியின் முடிவு என்று உணர்ந்தவர். அதனால் உலகியலிலும், இறைமை யுணர்விலும் மாறி மாறிச் செல்லும் மனித வாழ்க்கையின் போக்கைப் பல பாடல்களில் பாடி





யுள்ளார். இத்தகு சமயக் கருத்து நயமாக வெளிப்படும்போது அது காலத்தால் அழியாத இலக்கியமாக உருவெடுக்கிறது.

இறைவனை நோக்கி மாணிக்கவாசகர் முறையிடும் பல வேண்டுகோள்களில் 'கைம்மாறு கொடுத்தல்' என்ற தலைப்பில் ஒரு வேண்டுகோள் பாடல்.

''வானுலகத்து உள்ளோர்க்குத் தலைவனே என்னை வருக என்று நீ கட்டளை யிட்டாய்! இரண்டு கையானையை ஒத்திருந்த என் உள்ளக் கருவாகிய உன்னை நான் கண்டிலேன்: கண்டதெல்லாம் துன்பமே! உன்னை அனுபவிக்கும் வலி எனக்கில்லை; ஆனால் உலகியலை அனுபவிக்கும் வலிதான் இருக்கிறது.''

மேற்குறித்த கருத்தை வெளியிடும் திருவாசகப் பாடல் மிகுந்த சுவையுடையது.

தன் உள்ளக் கருவாய்—இருகை படைத்த யானையாய் — இருக்கும் இறைவனைக் காண இயலாது உலகியலையே தன் உள்ளம் நாடுவதை இப்பாடல் தெரிவிக்கிறது. இதில் இறைவனை 'இரு கையானை' என்று அழைப்பது மிகச் சிறப்பானது.

இறைவனை 'இருகையானை' என்று உருவகப்படுத்தி அழைத்தவர் இருவர். ஒருவர் மாணிக்கவாசகர்; மற்றொருவர் கம்பர். கம்பர் தமது ராமாயணத்தில் இராமபிரானை 'இருகைவேழத்து இராகவன்' என்றார். வேழம் என்றால் யானை.

இறைவனை 'இருகையானை' என ஏன் கூற வேண்டும்? 'இருகை'யைக் கூறுவது ஒரு இலக்கிய மரபு; அவ்வளவே. எந்த ஒரு ஆண்மகனையும் சிறப்பிக்கக் கையைச் சிறப்பித்துக் கூறுவது மரபு. நன்கு வளர்ந்த ஆண்மகனை 'ஓங்குகையான்' என்று தமிழிலும், 'ஆஜானுபாகு' என்று வடமொழியிலும் அழைப்பது வழக்கம். ஆஜானுபாகு என்ற சொல்லுக்குப் பொருள் 'தொடை வரை தொங்கும் கையையுடையவன்' என்பதே. ஜானு என்றால் தொடை. பாகு என்றால் தோள்; ஆ என்றால் வரைக்கும். தோளிலிருந்து தொடை வரைக்கும் தொங்கும் கையையுடையவன் ஆஜானுபாகு. அதனால் இருகையை வர்ணிப்பது பொது மரபே. ஆனால் இறைவனை யானை என்று ஏன் கூற வேண்டும்?

யானைக்கு ஒரு குறிப்பிட்ட இயல்பு உண்டு. யானையின் மேல் ஏறி அமர வேண்டும் என்று யார் ஆசைப்பட்டாலும் அதன் காலைப் பிடித்தால்தான், அதன் மேல் ஏறி அமர முடியும். வேறு வழியே இல்லை. யானைக்கு இயல்பு கால் பிடிப்பார் தம்மைத் தலைக்கு மேல் தூக்குவது; அல்லவா? அதுபோல் இறைவன் காலை யார் பிடிக்கிறார்களோ அவர்களை வாழ்க்கையில் தலைக்கு மேலாக இறைவன் தூக்கி விடுவான் என்ற கருத்து வெளிப்படவே இறைவனை 'இரு கையானை' என்றார்.

கம்பர் இராமபிரானையும், மாணிக்க வாசகர் சிவனையும் 'இருகையானை' என்றனர்.







107 ஸ்பெஷல்
டிடர்ஜெண்ட் பார்
அதிவெண்மையாக்கும்
விசேஷ குணம் கொண்டது.
WASHES
SPOTLESSLY
CLEAN
107
SPECIAL
அதிவெண்மை படைக்கும்
விசேஷ சக்தி கொண்டது.
107 ஸ்பெஷல் டிடர்ஜெண்ட் பார்
மட்டுமே துணிகளின் கூடுதலான
வெண்மைக்கு சிறந்தது. இதன் பொங்கும்
நுரைவளம் அழுக்கை அகற்றி வெண்மையை
பளிச்சிடச் செய்கிறது.
இது மிகவும் சிக்கனமானதும்கூட.
தயாரிப்பாளர்கள் :-
அல்ட்ராமரைன் அண்ட் பிக்மன்ட்ஸ் லிட்.
ராணிப்பேட்டை 632 403 தமிழ்நாடு

எல்லாத் தெய்வங்களையும் 'இருகையானை' என்றே கொள்ளலாம்.

கண்ணபிரானைத் தத்தம் பக்கம் படைக்குத் துணையாக வேண்டும் என்று கேட்கத் துரியோதனனும் அர்ச்சுனனும் துவாரகைக்கு வந்த பாரதக் கதை பலருக்கும் தெரியும். துயில்வது போல் இருந்த கண்ணனின் கால் மாட்டில் அமர்வது தன் பெருமைக்குக் குறைவு என்று துரியோதனன் தலைமாட்டில் அமர்ந்தான். அருச்சுனன் கால்மாட்டில் நின்றான். வெற்றி யாருக்கு? விஜயனுக்கே! அவன் இருகையானையாகிய கண்ணன் காலைப் பற்றியதால் உயர்ந்தான்.

நம் உள்ளத்தில் மூலமாகவும் கருவாகவும் இருக்கிறான் இறைவன். அவன் இருகையானை. நம் உள்ளம் அவன் காலைப் பற்றினால் வாழ்வில் உயர்வோம். ஆனால் பெரும்பாலும் உள்ளம் உலகியலை நாடுகிறது. அது இயற்கை தான். ஆனால் உலகியல் வாழ்க்கை மத்தியிலும் உள்ளத்தை இருகையானையின் திருவடியை நோக்கிச் செலுத்த வேண்டும் என்பதே மாணிக்கவாசகர் கருத்து.

''இருகை யானையை ஒத்திருந்த என்உளக்
கருவை யான் கண்டிலேன்; கண்டது எவ்வமே
வருக என்று பணித்தனை; வானுளோர்க்கு
ஒருவனே! கிற்றிலேன்கிற்பேன் உன்னையே''

[எவ்வம் - துன்பம்; கிற்றிலேன் - அனுபவிக்க இயலேன்; கிற்பேன் - உலகியலை அனுபவிப்பேன்.]

குடும்பம் ஒரு கதம்பம்

தரப்பு அணி: படம் பூரா கலகலவென்றும் உடனே உடனே படு சீரியஸாகவும் கலந்து போகக் காரணம் விசுவின் கதை வசனத் திறமைதான். மானுவாரியாக வரும் ரசிக்கக் கூடிய இடங்கள். எதிர்த்துப் பேசிய மகளை உழைத்துச் சம்பாதித்து வந்து அறையும் ரோஷக்கார விசு. வேலைக்குப் புதிதாகப் போகத் தயங்கும் இயல்பான சுஹாசினி. பட்டாணியனிடம் கடன் வாங்கி வந்து மனைவியிடம் மெல்லவும் விழுங்கவும் முடியாமல் தினறும் எஸ்.வி. சேகர். மனைவிக்குத் துணி துவைத்து, ஜாக்கெட் பட்டன் தைப்பதில் பெருமைப்படும் கோமாளித்தன பிரதாப் (எவனோ ஆம்பள டைலர் என் பொண்டாட்டிக்கு ஜாக்கெட் தைக்கிறான். நான் பட்டன் தைக்கிறதிலே என்ன தப்பு? வாஸ்தவமான கேள்விதான்). தீபாவளி பட்டாஸ் கும்பலாய் அனைவரும் பயந்து கொளுத்தும் நிஜம் இப்படிப் படம் பூரா நிறைய இடங்கள். அசர வைப்பவர்கள் விசுவும் கமலா காமேஷும்தான்.

எதிர்ப்பு அணி: டைரக்டர் எஸ். பி. முத்து ராமனுக்கு வேலையில்லாமல் செய்து விட்டார் விசு. பாதிக்கு மேல் செட்டிலேயே படம்எடுக்கப்பட்டுள்ளது நாடக பிரமையை உண்டாக்குகின்றது. அடிக்கடி ஒலிப்பதிவு கிணற்றுக்குள் பேசுகிறது. கேமராவும் கஷ்டப்படவில்லை. நாடகம் மட்டும் கைகொடுத்துள்ளது.

தீர்ப்பு: மனைவி வேலைக்குப் போய் கணவன் சும்மா இருக்கக் கூடாது என்பதால் மனைவி வேலைக்குப் போகக் கூடாது என்றில்லை. ஆனால் மனைவி வேலைக்குப் போயாகணும் என்றுமில்லை. வேலைக்குப் போகும் மனைவி போகாமலும் நிற்கலாம். வேலைக்குப் போகா மனைவி இனி வேலைக்குப் போகலாம். ஆனால் வேலைக்கு மனைவி போகா...

ஒரு நல்ல நகைச்சுவை-ஸீரியஸ் குடும்ப நாடகம் பார்த்த உணர்வுதான் மிச்சம்.

—நளினி சாஸ்திரி



■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO

TIDCO

TAMILNADU INDUSTRIAL DEVELOPMENT CORPORATION LIMITED

L.L.A. BUILDINGS 735, Anna Salai, Madras-600 002

ACCEPTS/RENEWS DEPOSITS

1 Year	2 Years	3 Years
$10\frac{1}{2}\%$ p.a.	$11\frac{1}{2}\%$ p.a.	$12\frac{1}{2}\%$ p.a.

(INTEREST PAID MONTHLY)

On deposits of charitable, educational, scientific research and benevolent institutions an increased rate of ½% is offered subject to production of satisfactory evidence.

INTEREST PAID TO CHARITABLE INSTITUTIONS FULLY EXEMPTED FROM INCOME TAX (SECTION 13 OF THE I.T. ACT 1961)

INTEREST PAID TO OTHERS QUALIFIES FOR THE BENEFITS UNDER SEC. 80 L OF THE INCOME TAX ACT 1961 UPTO Rs. 3000/-

APPLICATION FORMS ARE AVAILABLE AT REGISTERED OFFICE

Particulars to be furnished as per Sub rule (2) of Rule (4) of Companies (Acceptance of Deposits) Rules 1975 (as amended) framed under Sec. 58A of the Companies Act 1956.

(A) Name of the Company	Tamil Nadu Industrial Development Corporation Ltd
(B) Date of incorporation of the Company	21st May 1965
(C) Business carried on by the Company and its subsidiaries with the details of branches or units	The object of the Company is to promote, improve, establish and develop industrial activities in Tamilnadu through Public Sector and Joint Sector. Units: Tamilnadu Steels, Arakkonam, North Arcot District
(D) Brief particulars of the management of the company	The Company is a wholly owned enterprise of Government of Tamilnadu and the management is done by a Board of Directors with the Chairman and the Managing Director controlling the day to day affairs of the company.

(E) Names, addresses and occupation of the Directors

Name of Directors	Occupation and Address
1. Thiru C.V.R. Panikar, I.A.S.	Chairman, Tamilnadu Industrial Development Corporation Ltd., Madras 600 002
2. Thiru C. Ramachandran, I.A.S.	Commissioner and Secretary to Government, Industries Department, Fort St. George, Madras 600 009
3. Thiru C. Ramachandran, I.A.S.	Director of Industries & Commerce, Chepauk, Madras 600 005
4. Thiru P. Murari, I.A.S.	Chairman, Tamilnadu Electricity Board, Anna Salai, Madras 600 002
5. Thiru K.J.M. Shetty, I.A.S.	Commissioner and Secretary to Government, Finance Department, Fort St. George, Madras 600 009
6. Thiru C.A. Srinivasan, B.E., F.I.E.	Chief Engineer (General), Public Works Department, Chepauk, Madras 600 005
7. Thiru K. Venkatesan, I.A.S.	Managing Director, Tamilnadu Industrial Development Corporation Ltd., Madras 600 002

(F) & (G) Profits of the Company before and after making provision for tax and dividends declared by the company for the three preceding financial years

Year ended 31st March	Profits before tax (Rs. in lakhs)	Profit after tax (Rs. in lakhs)	Dividends Declared
1979	46.86 (loss)	46.86 (loss)	Nil
1980	53.35 ..	53.35 ..	Nil
1981	29.61 (Profit)	29.61 (Profit)	Nil

(G) Summarised financial position of the Company as appearing in the two latest audited balance sheet of the company (as at 31st March)

Liabilities	Figures for the year 1980 Rs.	Figures for the year 1981 Rs.	Assets	Figures for the year 1980 Rs.	Figures for the year 1981 Rs.
Share capital	24,72,77,000	28,22,77,000	Fixed Assets	3,78,96,622	3,49,93,877
Reserves and Surplus	—	—	Works under construction	22,006	27,783
Secured loans	—	—	Investments (at cost)	22,82,09,839	28,06,71,145
Unsecured Loans	23,91,84,855	25,70,77,489	Current Assets	4,07,77,995	3,94,33,698
Current Liabilities and Provisions	4,19,38,829	5,44,86,302	Loans & Advance	15,57,81,190	17,55,19,888
			Misc. expenditure	25,19,194	29,61,845
			Profit & Loss Account	6,31,93,642	6,02,32,555
	52,84,00,484	59,38,40,791		52,84,00,484	59,38,40,791

Note: Brief Particulars of contingent liabilities for the year ended 31.3.1981

a) i) Claims against the Corporation not acknowledged as debt.
ii) Estimated amount of contracts remaining to be executed on capital account and not provided for.
iii) Indemnity bond executed.
iv) Unclaimed liabilities in respect of partly paid shares.
v) Loan to Joint Stock Companies inclusive of interest due
vi) Sundry debtors disputed by Tamilnadu Electricity Board being the excise duty on bars sold to them
vii) Balance of estimated liability for payment of Gratuity
viii) Cumulative sales tax liability for which exemption is applied for and pending with Government of Tamilnadu.

— Rs. 1,98,10,410 (items i to viii)

b) Contingent liability on account of guarantees given by the Corporation either solely or jointly with other promoters in favour of various financial institutions banks in connection with the loans and interest due thereon as at 31.3.81 amounted to Rs. 35,90,38,388/- and foreign exchange of US $ 1007330, S.F. 66457 DM 607204, £ 38024

(I) a) The amount which the company can raise by way of deposits as on 31.3.81 as per rules — 25% of Rs. 2190.82 lakhs = 547.71 lakhs

b) Deposits actually held as on 31.3.1981 Rs. 332.60 lakhs

(J) Overdue deposits on the date of advertisement : Nil

(K) It is hereby declared that

i) The Company has complied with the provisions of the Companies (Acceptance of Deposits) Rules 1975 (as amended).

ii) The said compliance does not imply that repayment of deposits is guaranteed by the Central Government and

iii) The deposit accepted by the company are unsecured and shall rank pari-passu with other unsecured liabilities.

NOTE: THIS ADVERTISEMENT IS ISSUED ON THE AUTHORITY AND IN THE NAME OF THE BOARD OF DIRECTORS OF THE COMPANY AND THE TEXT OF THE ADVERTISEMENT HAS BEEN APPROVED BY THE BOARD OF DIRECTORS OF THE COMPANY AT ITS MEETING HELD ON 24th SEPTEMBER 1981.

BY ORDER OF THE BOARD

Place : Madras 600 002

Date : 24th SEPTEMBER 1981

S. HARI
Secretary

A copy of the advertisement duly signed by a majority of the Directors of the company has been registered with the Registrar of Companies, Madras & pursuant to Rule 4 (4) of the Companies (Acceptance of Deposits) Rules 1975 (as amended).

■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO ■ TIDCO

கே. பாக்கியராஜ்

கங்கையில் நெருப்பு



முழு நீள நாவல்

கங்கா ஸ்டீல் ஃபாக்டரியின் 'மெயின் கேட்டை' வாட்ச்மேன் ஓடிவந்து திறந்து சல்யூட் அடித்து நின்றான். ஒரு வெள்ளை நிற ஃபாரின் கார் அன்னம் போல் உள்ளே நுழைந்து ஃபாக்டரியின் 'மானேஜிங் டைரக்டர்' அறை வாசலில் ஒரு குலுங்குக் குலுங்கி நின்றது.

காரிலிருந்து கங்கா இறங்கினாள். வயது முப்பதிலிருந்து நாற்பதுவரை எடை போட முடியாத தோற்றம். முகத்திலே உணர்ச்சிகள் பிரதிபலிக்காத ஒரு இறுக்கம். கங்கா ஸ்டீல் ஃபாக்டரியின் உரிமையாளர் என்ற அந்தஸ்துக்குப் பொருந்தாத சாதாரண உடை.

கங்கா மூக்குக் கண்ணாடியை ஒரு முறை விரல் நுனியில் சரி செய்து கொண்டாள். பார்வையில் கூர்மை இருந்தாலும் ஏதோ ஒரு சோகம் நிழலாக மறைந்திருந்தது. கங்காவின் பார்வை எதேச்சையாக பாக்டரியின் வெளிவராந்தாவில் ஒரு முறை சுழன்று சைக்கிள் ஸ்டாண்டில் ஒரு கணம் பதிந்தது.

அதன் காரணம் சைக்கிள் ஸ்டேண்ட் கீப்பருக்கு உடனடியாகப் புரிந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட சைக்கிள்கள் ஸ்டேண்டில் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. ஒரே ஒரு சைக்கிள் மட்டும் காண்டீனுக்குப் போகும் பாதையை அடைத்தபடி வரிசை மாறி நின்றது.

அடுத்த கணம் ஸ்டேண்ட் கீப்பர் ஓடோடி வந்து அந்த சைக்கிளை அலாக்காகத் தூக்கி ஐம்பது சைக்கிள்களைத் தாண்டி – வரிசையில் நிறுத்திவிட்டு அந்த இடத்திலேயே கைகட்டி நின்றான்.

கங்கா மௌனமாக பாக்டரிக்குள் நுழைந்தாள். 'கங்கா' உரக்கக் கத்தித் திட்டியதை யாரும் பார்த்ததில்லை. அவள் மௌனத்திற்கு பாக்டரி முழுவதும் பயம் கலந்த ஒரு மரியாதை இருந்தது.

கங்கா சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்தியபடி மெஷின் ரூமுக்குள் நுழைந்தாள். அங்கே–

பாக்டரியின் இதயமான வி-1 மெஷின் இரும்புப் பாளங்களை அல்வாத் துண்டுகளாக வெட்டி, மெல்லிய கம்பிகளை நூல் போல் நூற்றுக் கொண்டிருந்தது. மெஷின்மேன் ரங்கன் கன்ட்ரோல் போர்டில் சுவிட்சுகளை அமுக்கி மெஷினுக்குக் கட்டளைகளைத் தந்து கொண்டிருந்தான். கங்கா வந்ததைக் கூட ரங்கன் கவனிக்கவில்லை. கங்கா, புரொடக்ஷன் சார்ட்டில் அன்றைய உற்பத்தியைக் கவனித்துவிட்டு மெதுவாக அறையை விட்டு நகர்ந்தாள்.

அன்று மாலை 6 மணிக்கு எப்போதும் போல் ஃபாக்டரி சங்கு ஊதியது. மெஷின் மேன் ரங்கன் தன் பொறுப்பை நைட் ஷிப்ட் வேலுவிடம் ஒப்படைத்துவிட்டு சைக்கிளில் காலனியில் உள்ள தன் அறைக்குச் சென்று கொண்டிருந்தான்.

இலேசாக இருட்ட ஆரம்பித்தது. சைக்கிள் டைனமோவைத் தட்டி விட்டுக்கொண்டான். வெளிச்சம் பாதையில் ஓடிக்கொண்டிருந்தது.

தூரத்தில் பாக்டரியின் வி-1 மெஷின் வேலை செய்யும் ஒலி ஒரு ரிதமாக ஒலித்துக் கொண்டிருந்தது.

திடீரென்று டைனமோ வெளிச்சத்தில் பாதை ஓரத்தில் ஓர் உருவம் சுருண்டு கிடப்பது தெரிந்தது. ரங்கன் சைக்கிள் பிரேக் போட்டு நின்றது.

பசி மயக்கமாக இருக்கலாம்.... சுருண்டு படுத்திருந்தான். முகத்தில் வாரக் கணக்கான தாடி மீசை. வேட்டி சட்டை அழுக்கேறியிருந்தது.

ரங்கன் அவனைத் தொட்டுப் பார்த்தான். உடம்பில் சூடு இருந்தது. ரங்கன் மனத்தில் பேசாமல் ஒதுங்கிப் போக முடியாத ஓர் இரக்கம் தலை காட்டியது.



வேண்டாம் அம்பயர் பதவி!

பல வருடங்களுக்கு முன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மைதானத்தில் ஒரு 'லீக்' மாட்ச். நான் திருவல்லிக்கேணி காஸ்மாபாலிடன் க்ளப்புக்கு ஆடினேன். இந்த மாதிரி ஆட்டங்களில் கிரிக்கெட் அஸோஸியேஷன் அனுப்பும் இரு அம்பயர்களில் அநேகமாக ஒருவர் வர மாட்டார். அந்த மாதிரி அன்றும் அமைந்துவிடவே நாங்கள் 'பாட்' செய்யத் தொடங்கும்போது எங்களில் ஒருவரே 'ஃ்கொயர் லெக்' அம்பயராக இருந்துவிட வேண்டும். மற்ற ஒரிஜினல் அம்பயர் இரு முனைகளிலும் ஸ்ட்ரெய்ட் அம்பயர் ஆக நிற்பார். அந்த 'ஸ்கொயர் லெக்' அம்பயர் வேலை ஆட்ட நடுவில் என் தலையில் விழுந்து விட்டது.

என் டீம் பாட்டிங் செய்வதால், சற்று உணர்ச்சி வசப்பட்ட நான் சிறிது கவனம் பிசகாக இருந்து விட்டேன். அந்தச் சமயத்தில் ஆடிக் கொண்டிருந்த என் காப்டன் பந்தை அடிக்கும் வேகத்தில் ஸ்டம்ப்களில் மட்டை பட 'ஹிட் அவுட்' ஆகிவிட்டார். ஆனால் நான் அதைக் கவனிக்க வில்லை. 'பீல்டிங்' செய்த அனைவரும் 'அப்பீல்' செய்தார்கள். நான் கவனிக்காததால் எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தானாகப் போயிருக்க வேண்டிய என் காப்டனோ, கோலையும் செய்துவிட்டு, கோர்ட்டில் நிரபராதி என்று வாதாடி பவன் போல் அங்கேயே நின்று கொண்டிருந்தார். மற்ற அம்பயரோ ஒன்றும் 'கண்டுக்க'வில்லை. நான் அந்த ஆட்டக்காரர் அவுட் இல்லை என்று சொல்லி விட்டேன். எல்லாம் என் கவனப் பிசகால் வந்த வினை. பீல்டிங் செய்பவர்கள் எல்லாம் என்னைக் கேலியாகப் பார்க்க ஆரம்பித்தார்கள். என் எண் சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுகியது! பார்த்தேன்!

அடுத்த ஓவர் போடும்போது அதே மாட்ஸ் மேனுக்கு 'ரன்-அவுட்' கேட்டார்கள். சட்டப்படி அது அவுட் இல்லை. ஆனால் அதற்குப் பிராயச் சித்தம் செய்து நல்ல பேர் வாங்கிக்கொள்ளலாம் என்று பைத்தியக்காரத்தனமாக நினைத்து 'அவுட்' அளித்து விட்டேன். இதற்கும் பீல்டிங் டீமி லிருந்து கேலிச் சிரிப்புதான்.

உணவு இடைவேளையின்போது 'பீல்டிங்' டீம் காப்டனிடம் போய் மன்னிப்புக் கேட்டேன். இனி மேல் இந்த அம்பயர் வேலை நமக்கு லாயக்கில்லை என்று முடிவு செய்து விட்டேன்!

-மாலி

ஓரத்தில் வந்து கொண்டிருந்த ஓர் ஆட்டோவைக் கைதட்டி நிறுத்தினான்.

தொழிலாளர் குடியிருப்பின் மத்தியில் உள்ள 'அன்னை மேரி' ஹாஸ்பிடலின் வாச லில் ஆட்டோ நின்றது.

ரங்கன் தெருவில் கிடந்தஅந்தஅனாதையை ஹாஸ்பிடலில் சேர்த்துவிட்டுத் தன் அறைக் குத் திரும்பியபோது இரவு மணி பத்துக்கு மேல் ஆகிவிட்டது. அதற்கு மேல் அந்தப் பிரம்மச்சாரியால் தன் சொந்தச் சமையல் அத்தியாயத்தை ஆரம்பிக்க முடியாமல் அப்படியே படுத்து அசந்து தூங்கிவிட்டான்.

அதிகாலை ஐந்து மணிக்குப் பால்காரன் சைக்கிள் பெல் அலாரம் அடிக்க ரங்கன் பால் செம்போடு கதவைத் திறந்தான். பாலை வாங்கி ஸ்டவ் பற்றவைத்தபோது... ரங்கன் காதுகள் ஏதோ ஒரு சூன்யத்தை உணர்ந்தது.

ரங்கனுக்குப் புரிந்தது.

இரவு பகல் இடையறாது அந்தப் பிராந்தியம் முழுவதும் கேட்டுக் கொண்டே இருக்கும் வி-1 மெஷினின் ஓசை கேட்கவில்லை.

ஒருவேளை கரண்ட் கட் ஆகியிருக்குமோ? அப்படி இருந்தாலும் உடனடியாக இரண்டு விநாடியில் ஜெனரேட்டர் வேலை செய் திருக்க வேண்டுமே....

ஐந்து நிமிஷம்... பத்து நிமிஷம்....

வி-1 மெஷினின் ஓசை கேட்கவே இல்லை!

ரங்கன் காப்பிகூட குடிக்கவில்லை. அவன் சைக்கிள் ஏறி பாக்டைரியைநோக்கிப் பறந்து கொண்டிருந்ததில் மெஷின் மேல் ரங்கனுக்கு இருந்த அக்கறை தெரிந்தது.

ரங்கனின் அக்கறையில் காரணமும் இருந் தது, நியாயமும் இருந்தது. ஜப்பானில் இருந்து வந்த அந்த வி-1 மெஷினை 'கங்கா' பாக்டரிக்குத்தருவித்ததிலிருந்துதான் தொழி லாளர்களின் கூரை வீடுகள் டரஸ் பில்டிங்கு களாக மாறி வருகின்றன.

ரங்கன் சைக்கிளை ஸ்டாண்ட் கூடப் போடாமல் மரத்தில் சாய்த்துவிட்டு, வராந்தாவில் ஓடி மெஷின் ரூமில் நுழைந்தபோது...

நைட் ஷிப்டு வேலு கையெல்லாம் கிரீஸும் கரியுமாக வி-1 மெஷினின் தலைப் பாகத்து சிலிண்டர் நட்டுக்களைக் கழற்றிக் கொண்டிருந்தான்.

இரும்புக் கம்பிகள் மெஷினின் வாய்ப் பாகத்தில் சிக்கல் விழுந்து சுருண்டு கிடந்தன.

எப்போதும் 0 டிகிரியில் குளிர்ந்து கொண் டிருக்க வேண்டிய சிலிண்டர்கள் கொதித்து ஆவி பறந்து கொண்டிருந்தன. நைட் ஷிப்டு வேலுவின் கவனக் குறைவு ரங்கனுக்குப் புரிந்தது.

அடுத்த நிமிஷம் ரங்கன் ஆவேசத்தோடு வேலுவை இழுத்துப் பின்னால் தள்ளினான்.

சிலிண்டர் வால்வுகளைத்திறந்துவிட்டான். எஸ்கலேட்டர் பெல்டில் இரும்புத்துண்டுகளை இறக்கினான். கண்ட்ரோல் போர்டில் எல்லா ஸ்விட்ச்சுகளையும் நியூட்ரலுக்குக் கொண்டுவந்தான்

ஒரு நம்பிக்கையோடு அரை மணி நேரப் போராட்டத்துக்குப் பின் மெஷின் பட்டனை மெதுவாக அழுத்தினான்.

அடிபட்ட ஒரு ராட்சத மிருகம் போல் மெஷின் ஈனமாக முனகியது. ரங்கன் மனம் உள்ளூற நடுங்க ஆரம்பித்தது.

பாக்டரித் தொழிலாளர்கள் எல்லோரும் கைகளைப் பிசைந்தபடி கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள்.

கங்கா எந்தச் சலனமும்இல்லாமல் எல்லா வற்றையும் கவனித்துக் கொண்டு ஒரு சேரில் சாய்ந்து கொண்டிருந்தாள்.

ரங்கன் யாரையும் கவனிக்கவில்லை. ஏதோ தீர்மானத்தோடு கண்ட்ரோல் போர்டுக்குச் சென்றான். ரிமோட் கண்ட்ரோல் பிளக் கைச் செருகினான். கடைசி முயற்சியாக எமர்ஜன்சி சுவிட்சை அழுத்தினான்.

வி 1 மெஷினின் சிவப்புக் கண்கள் ஒரு முறை மங்கலாக எரிந்து அணைந்தது. வாய் வழியாகக் கரும் புகை சீறியது. ரங்கன் உடனடியாக மெயின் ஸ்விட்சைப் பதற்றத் தோடு 'ஆஃப்' செய்தான். அவனுக்கு புரிந்து விட்டது. விஷயம் தலைக்கு மேல் போய்விட்டது. ரங்கன் மனத்தில் என்ன எண்ணினானோ தெரியாது. மெஷின் மேல் படுத்துக் குலுங்கிக் குலுங்கி அழுதான்.

தவறு செய்துவிட்ட குற்ற உணர்வோடு நைட் ஷிப்ட் வேலு ஓடிவந்து கங்காவின் காலில் விழுந்தான்.

கங்கா மௌனமாக எழுந்து கைகளைப்பின் னால் கட்டியவாறு அறைக்கு வெளியே நடந்தாள். ரங்கன் கதறியதோ, வேலு காலில் விழுந்ததோ அவள் முகத்தில் எந்த உணர்ச்சியையும் ஏற்படுத்தவில்லை.

'கங்கா ஸ்மூல் பாக்டரி' வேலை செய்ய முடியாமல் மூடப்பட்டு மூன்று தினங்கள் ஆகிவிட்டன. பம்பாயிலிருந்து வந்த மெக் கானிக்குகளும் பார்த்துக் கை விரித்து விட்ட னர். ஜப்பானிலிருந்து என்ஜினியர்கள் வந் தால்தான் இனி விடிவு. ஆனால் அதில் நிறையச் சிக்கல்கள் இருந்தன. இருக்கும் நிலவரத்தில் பாக்டரி வேலை நடக்க மாதக் கணக்காகும் என்று எல்லோரும் பேசிக்- கொண்டார்கள்.

ரங்கன் சோர்வோடு தன் அறையில் படுத் துக் கொண்டிருந்தான்.

ஒரு ஆள் மெதுவாக அறை வாசலில் வந்து நின்றான். அவன் முகத்தை எங்கோ பார்த்த நினைவு ரங்கனுக்கு வந்தது.

தெருவோரம் அனாதையாகக் கிடந்து அன்னை மேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அதே நபர்தான் என்பதை ரங்கன் புரிந்து கொண்டான்.

''என்மேல் இரக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்ததற்கு ரொம்ப நன்றி.... நான் உன்னை வரலாமா?''

இப்படித்தான் அந்த அநாதை. ரங்கன் அறையில் நுழைந்தான். ஆனால் அவனது பிரவேசம் அந்தப் பிராந்தியத்தில் மிகப் பெரிய பரபரப்பை ஏற்படுத்தப் போவதை யாருமே உணரவில்லை.

''ஊரெல்லாம் பேசிக் கொண்டார்கள். ஏதோ மெஷின் ஓடவில்லையாம்.... நான் அந்த மெஷினைப் பார்க்கலாமா?''

ரங்கன் வாய் விட்டுச் சிரித்தான்.

''உன் பெயர் என்னப்பா?''



எங்கள் ஊர் (பண்ணுருட்டி) கிரிக்கெட் அணிக்கும் பக்கத்து ஊராகிய கடலூர் கிரிக்கெட் அணிக்கும் நடந்த 50 ஓவர் அடிப்படையிலான மேட்சுக்கு என்னை அம்பயராய் நியமித்திருந்தார்கள். மேட் சின் கடைசி ஓவர்! கடலூர் அணியினர் வெற்றி பெற ஐந்தே ரன்கள் எடுக்க வேண்டிய நிலையில் அதன் கடைசி பாட்ஸ்மேன் விளையாடிக் கொண் டிருந்தார். எங்கள் ஊர் அணியைச் சேர்ந்தவர் வீசிய பந்து எதிர் அணி பேட்ஸ்மேனின் காலுறை யில் பட (Pads) என்னையும் அறியாமல் நான் விளை யாடுவதாக நினைத்துக் கொண்டு 'ஹௌ சஸ் தட்' என்று கத்திவிட்டேன். அவுட் கொடுக்க வேண்டிய அம்பயரே, 'ஹௌ சஸ் தட்' என்று கத்தியதைக் கேட்டதும் எல்லோரும் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். எத்தனை வயதானாலும் என்னால் மறக்க முடியாத அனுபவம் இது!

வெ. இராமசாமி

''பாஸ்கரன்.''

''உனக்கு மெஷினைப் பற்றி என்ன தெரி யும்?''

''நான் ஒரு மெக்கானிக்!''

ரங்கன் விழுந்து விழுந்து சிரித்தான்.

''இந்தாப்பா பாஸ்கர்... நீ நெனைக்கிற மாதிரி வி-1 மெஷின் லேத்துப் பட்டரை யிலே இருக்கிற டப்பா மோட்டார் அல்ல. அது ஜப்பான்லே இருந்து வந்த கம்ப் யூட்டர் மெஷின்!''

''ஜப்பான் மோட்டார் கார் யூனிட்டில் சீப் செக்ரட்டரி நம்ம தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருத்தர்னு கொஞ்ச நாளைக்கு முன் னாலே பேப்பர்லே படிச்சதாக ஞாபகம்!''

பாஸ்கரனின் வார்த்தைகளில் ஓர் அசா தாரணமான அழுத்தம் இருந்தது. அந்த நம்பிக்கையில் – உறுதியில் ரங்கன் அசந்து விட்டான்.

அடுத்த சில மணி நேரத்தில் ரங்கன் ஓடோடிச் சென்று கங்காவிடம் 'ஒரு மெக் கானிக் மெஷினைப் பார்க்க அனுமதி வேண் டும்' என்றுகூறி பர்மிஷனும்வாங்கிவிட்டான்.

பாஸ்கரன் வெகு நேரம் வி 1 மெஷினைப் பரிசோதனை செய்தான். சம்பந்தமில்லாத பகுதிகளை யெல்லாம் வெகு நேரம் தேவை யில்லாமல் ஆராய்ச்சி செய்தான்.

சாதாரணமான சில நட்டுக்களைக் கழற்றக் கூட முடியாமல் தடுமாறினான்.

நேரம் ஆக ஆக பாஸ்கரன் மேல் ரங்கனுக்கு நம்பிக்கை குறைந்து கொண்டே வந்தது.

''வாயால் சவடால் அடிப்பது சுலபம். காரியத்தில் இறங்கும்போதுதானே காலும் கையும் உதறுகிறது!''

பாஸ்கர் உதவிக்கு ஒரு ஃபிட்டரைக் கேட்டான். கோணல் மாணலாகப் பல் சக்கரங்களை லேத்தில் கொடுத்து ராவிக் கொண்டிருந்தான்.

ரங்கன் பொறுமை இழந்து விட்டான். இரவு 3 மணி இருக்கும். நம்பிக்கை சரிந்த நிலையில் அவன் மனத்தில் சோர்வும் தூக்கமும் கப்பியது.

பேசாமல் ஒரு மூலையில் சுருண்டு படுத்து விட்டான்.

எவ்வளவு நேரம் தூங்கி யிருப்பான் என்பது ரங்கனுக்கே தெரியாது.

தடதடவென்று எல்லோரும் ஓடும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு ரங்கன் எழுந்தான். எழுந்த வினாடியில் துல்லியமாக அந்த ஓசையை ரங்கனின் காதுகள் கேட்டுக் குளிர்ந்தன.

ஆம். வி-1 மெஷின் ஒரே சீராக ஓடிக் கொண்டிருந்தது. அந்த இனிய நாதத்தைக் கேட்டுத்தான் தொழிலாளர்கள் ஓடிவந்து கொண்டிருந்தார்கள்.

பாக்டரி முதலாளியம்மாள் கங்காவின் வெள்ளை நிறக் கார்கூட' நின்று போன மெஷின் ஓடும் ஓசை கேட்டுப் புழுதி பரக்க வந்து கொண்டிருந்தது.

பாஸ்கரன் எப்போதும்போல் தள்ளாடித் தடுமாறியபடி கண்ட்ரோல் போர்டில் பொத்தான்களை அழுத்தி மெஷினுக்கு ஆர்டர்கள் தந்து கொண்டிருந்தது ஆச்சரியமாக இருந்தது.

ரங்கன் பார்வையில் பாஸ்கரன் ஓர் அவதாரமாகக் காட்சியளித்தான்.

தொழிலாளர்களின் முகத்தில் பரவசம் தெரிந்தது. அவர்கள் நடுவே சிறியசலசலப்பு.

''முதலாளி அம்மா வர்ராங்க.... ஒதுங்குங்க.... ஒதுங்குங்க....''

இப்போதும் கங்கா முகத்தில் எந்த உணர்ச்சியும் வெளிக்காட்டாமல் கைகளைப் பின்புறம் கட்டியபடி கூட்டத்தின் நடுவிலிருந்துமுன்





னால் வந்து பாஸ்கரனைப் பார்த்த அடுத்த நொடி....

அவள் முகத்தில் ஆயிரம் ஆயிரம் பாவங்கள் மாறி மாறிக் கோலமிட்டன. அவள் உதடுகள்....

''பாஸ்கர்.... நீங்களா?'' என்று இலேசாக முணு முணுத்தது.

காலச் சக்கரத்தின் ஆரக்கால்கள் பின்னால் நகர்ந்து சுற்ற ஆரம்பித்தது. இளமைக் காலத்தின் வசந்தப் பூக்கள் வண்ண வண்ணமாகப் பூத்துக் குலுங்கின அதில்.

கங்காவும் பாஸ்கரனும் கை கோத்து நடந்தனர். அப்போது இந்தக் கங்கா விஜயா ஸ்டீல் பாக்டரி முதலாளி அம்மா அல்ல. ஒரு சாதாரண மில் தொழிலாளி யின் மகள்.

பாஸ்கரன் அதே மில்லில் மெக்கானிக் காக வேலை செய்து வந்தான். அப்பாவுக்குச் சாப்பாடு கொண்டு வரும்போது பாஸ்கரன் கண்ணில் அவள் அரங்கேறினாள். கங்காவின் அப்பா வற்புறுத்த பாஸ்கர் ஒரு நாள் கங்கா சமைத்த சாப்பாட்டைச் சாப்பிட் டான்.

அந்த ருசியான சாப்பாட்டைக் காலம் முழுதும் அவள் கையால் வாங்கிச் சாப்பிட மனம் விரும்பியது.


கங்காவும் பாஸ்கரனும் திருமணம் செய்து கொள்ளப் பெரிதாக—

அந்தஸ்து வித்தியாசங்களோ அப்பா அம்மா தடைகளோ ஏதும் இருக்கவில்லை. எனவே அவர்கள் காதல் பச்சைக் கொடி காட்டப்பெற்று வெகு விரைவில் வளர்ந்தது. அந்த நேரத்தில்தான்....

மூக்கு அறுபட்டாலும்

நான் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும்போது ஒரு நாள் கிரிக்கெட் விளையாடும்போது பீல்டிங் பிரிவைச் சேர்ந்த நான் ஸில்லி-மிட்-ஆஃபில் நின் றிருந்தேன். மட்டையடிப்பவர் பந்துகளை யெல் லாம் தடுத்துக் கட்டை போட்டுக் கொண்டிருந்த படியால் ஆட்டம் சுறுசுறுப் பற்றிருந்தது எனவே, நான் அந்த நேரம் என் அருகில் இரண்டு கட் டெறும்புகள் சண்டையிட்டுக் கொண்டிருந்ததை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். அதனால் ஆட்டத்தில் கவனம் இல்லை. அந்நேரத்தில் திடீ ரென்று பாட்ஸ்மேன் அடித்த பந்து சற்றும் எதிர்பாராத விதமாக மூக்கில் பட்டு, ஒரு பக்கம் அறுந்து விட்டது. மூன்று தையல்கள் போடும்படி யாகி விட்டது. அதிலிருந்து வீட்டில் கிரிக்கெட் விளை யாடக் கூடாதென்று கண்டிப்பு. பத்தாம் வகுப் பில் படித்துக் கொண்டிருந்த என் அண்ணன் நான் கிரிக்கெட் விளையாடுகிறேனா இல்லையா என்று அறிவதற்கு உளவாளியாக நியமிக்கப்பட்டார்.

-சீனிவாசனு



கங்காவின் ஒரே தம்பி சேகர் அந்தக் கொடிய நோயால் தாக்கப்பட்டான்.... 'பிரெய்ன் ட்யூமர்' என்று டாக்டர்கள் சொன்னார்கள்.

சேமித்த பணம் தண்ணீராக விரய மாகியது. எப்படியாவது மகனைக் காப் பாற்றக் கங்காவின் அப்பா எங்கெங்கோ கடன் வாங்கியும் அது போக்கு வரத்துக்கே போதவில்லை.

பணம் நிறையச் செலவழித்தால் மகனை எப்படியும் காப்பாற்றி விடலாம் என்று டாக்டர்கள் நம்பிக்கை ஊட்டினர்.

அந்தப் பணம் இல்லாததால் கண் முன் னால் பார்ப்பதற்கு எந்தக் குறையும் இல்லா மல் ஒரே வாரிசாக இருக்கும் மகன் சாவதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்று அப்பா துடி துடித்தார். மகன் உயிரைக் காப்பாற்ற ஆயிரக் கணக்கில் பணம் வேண்டும். வழி என்ன ....வழி என்ன ...

அந்தக் குழப்பத்தின் சிக்கலுக்கு விடை யாகக் கங்காவின் அப்பா வேலை செய்யும் மில் முதலாளி ஒரு நாள் கங்காவின் வீட்டுக்கே வந்து விட்டார்.

விஷயத்தை மிகப் பெருந்தன்மையோடு ரத்தினச் சுருக்கமாகக் கேட்டு விட்டார்.

''என்னுடைய ஒரே மகனை லண்டனுக்கு பிசினஸ் விஷயமாப் படிக்க அனுப்பி இருந் தேன்... ஆனா அவன் அங்கே கட்டுப்பாடே இல்லாமல் சுதந்திரமா வாழணும்கிற கொள் கையோடு திரும்பி வந்தான்...

''அவனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண் ணிப் பார்க்க எத்தனையோ முயற்சிகளை நான் எடுத்துப் பார்த்துட்டு அலுத்துட்டேன்... அவன் இப்போ தானே வந்து 'கங்கா'வைப் பெண் கேட்டு நான் கேட்டு வரச் சொல்லி அனுப்பி இருக்கான்....

''என் மகன் ஒரு நல்ல குடும்பப் பெண் ணைக் கல்யாணம் செய்துக்கச் சம்மதிச் சதுலே நான் ரொம்பச் சந்தோசப்பட்டுட் டேன்....

''இனி முடிவை நீங்கதான்சொல்லணும்.''

தம் மகன் உயிரைக் காப்பாற்ற ஆண்ட வனாகக் காட்டிய வழி என்று கங்காவின் அப்பா ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

அந்தக் கண்ணீரின் நியாயங்களுக்கு முன் னால் தன் காதலைச் சொல்லக் கூட கங்கா முடியாமல் தடுமாறினாள்.

ஒரு நடுத்தரக் குடும்பத்தின் இந்த இக்கட்டான சூழ்நிலையைப் புரிந்துகொண்ட பாஸ்கர்—

'மில் முதலாளியின் மகன் ராம்நாத்தை நீ திருமணம் செய்து கொள்வதுதான் உனக் கும் உன் குடும்பத்துக்கும் நல்லது' என்று கடிதம் எழுதி வைத்து விட்டு கங்கா—ராம் நாத் திருமணம் நடக்கு முன்னே ஊரை விட்டுப் போய்விட்டான்.

அதற்குப் பிறகு பாஸ்கர் என்ன ஆனான் எங்கே இருக்கிறான் என்று கங்காவுக்கு இது வரை எந்த விவரமும் தெரியவே யில்லை.

ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின்னால் கங்கா பாஸ்கரனை இப்போது பார்க்கிறாள்.

அவள் இமையோரம் நனைகிறது. கார ணம் — கடந்த காலத்தின் காதல் தோல்வி

வீட்டில் அனைவரின் கேசப் பராமரிப்புதானே? அதற்கு நம்பகமானது, விசேட ஃபேமிலி ஷாம்பூ பாமோலிவ்.



பாமோலிவ் ஷாம்பூ:
ரெகுலர், அல்லது
கூடுதலான
போஷாக்கிற்கு எக்



பாமோலிவ், எல்லா வகைக் கேசத்திற்கும் ஏற்ப விசேட முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அது, வளமையான நவீன ஷாம்பூ. உங்கள் கேசத்தை நன்கு தூய்மை துலங்க வைக்கிறது. குழந்தைகளின் மென்மையான கேசத்திற்கோ மிகவும் ஏற்றது.

அது மட்டுமா? இவ்வகை ஷாம்பூக்களிலே சிக்கனமானது. பாமோலிவ் ஷாம்பூ—குடும்ப பட்ஜெட்டிற்கும் ஏற்றது.

குடும்பத்தினர் கேசப் பராமரிப்புக்கு நேசமானது-உங்கள் பட்ஜெட்டிற்கும் ஏற்றது

GK&E.PS.7 TM

அல்ல. பாஸ்கரன் கண்ணியமாக விலகி இதுவரை எந்த விதத்திலும் தன் வாழ்க்கையில் குறுக்கிடாது நின்றபெருந்தன்மைக்காக.

இனிமேலும் கூட அந்த பாஸ்கரன் விரைவில் அந்தக் கங்காவின் பார்வையிலிருந்து தன்னை மறைத்துக் கொண்டு வெகு தூரம் விலகிப் போய்விடுவான் என்பதும் கங்காவுக்கு நன்றாகவே தெரிந்தது. ஆனால் அப்படி பாஸ்கரன் உடனே அந்த இடத்தை விட்டுப் போக முடியவில்லை... தொழிலாளர்களின் — குறிப்பாக மெஷின் மேன் ரங்கனின் நன்றி கலந்த உபசரிப்பு பாஸ்கரை இரண்டு நாட்கள் அதேஊரில் தங்க வைத்து விட்டது.

மூன்றும் நாள்—

ஃபாக்டரி முழுவதும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தொழிலாளர்கள் வாழை மரம் கட்டி, தோரணங்களைத் தொங்க விட்டுக் கொண்டிருந்தனர். அன்று கங்காவுக்குப் பிறந்த நாள்.

கங்காவின் மேலுள்ள அன்பால் தொழிலாளர்கள் தாங்களாகவே அவள் பிறந்த தினத்தை விமரிசையாகக் கொண்டாடி வந்தனர். மெஷின்மேன் ரங்கன் வீட்டில் பாஸ்கர் விடை பெற்றுக் கொண்டிருந்த போது...

கங்காவின் கார் வீட்டு வாசலில் வந்து நின்றது. கார் டிரைவர் இறங்கி பாஸ்கரனிடம் வந்தான்.

''முதலாளி அம்மா உங்களைக் கையோடு கூட்டி வரச் சொன்னாங்க!''

பாஸ்கரனால் உடனடியாக ஒன்றும் பதில் பேச முடியவில்லை. ரங்கன் அவனது கோணத்தில் பேசினான்.

''இதாங்க எங்க மொதலாளி அம்மாவோட பெருந்தன்மை. நம்மளைப் போல உள்ள தொழிலாளிகளுக்கு அவங்க காட்ற மதிப்பு.... வேறே யாரும் காட்ட மாட்டாங்க!''

இந்த நிலையில் பாஸ்கர் கங்காவின் வீட்டுக்கு 'வர முடியாது' என்று சொல்லவும் முடியும்!....

ஆனால் அப்படி மறுப்பதிலிருந்து வீணாக மற்றவர்களுக்கு கங்கா — பாஸ்கரன் பற்றி ஒரு சிறு யூகம்கூட உண்டாக இடம் கொடுக்க பாஸ்கர் மனம் ஒப்பவில்லை.

ஊரெல்லாம் கங்காவைப் போற்றிப் பாராட்டுகிறது. அவள் குழந்தை குட்டிகளோடு குதூகலமாக வாழ்வதைப் பார்க்க பாஸ்கர் மனம் ஆசைப்பட்டது.

பாஸ்கர் காரில் ஏறிவிட்டான்!

கங்காவின் பங்களாவுக்குள் கார் நுழைந்தது. கங்கா வாசல் வரை வந்து பாஸ்கரைக் கைகூப்பி வரவேற்று உள்ளேஅழைத்துச் சென்றாள்.

கூட்டம் வீடு நிறைந்திருந்தது.

அதில் மஞ்சள் பட்டுப் பாவாடை தாவணி உடுத்தியிருந்த ஒரு பெண்ணைக் கங்கா கைதட்டிக் கூப்பிட்டாள். பாஸ்கரனுக்கு அறிமுகம் செய்தாள்.

''இவள் என் கடைசிப் பெண் பானு. பி. யு. சி. படிக்கிறாள்.''

கழுத்திலே தங்கச் செயின் — டாலர் மின்ன ஒரு இருபத்தைந்து வயது இளைஞனைக் கூப்பிட்டாள்.

''இவன் என் மூத்த மகன்.... ரமேஷ். சொந்தமாக பிஸினஸ் செய்கிறான்.''

பாஸ்கரனுக்குப் பெருமிதமாக இருந்தது. கங்காவும் மற்றவர்களும் யாருக்காகவோ காத்துக் கொண்டிருந்தனர்.

பிறந்த நாள் கேக்கை இன்னும் வெட்டவில்லை. மற்றவர்கள் பேசிக் கொண்டதில் இருந்து கங்காவின் கணவன் 'ராம்நாத்'துக்காக எல்லோரும் காத்துக் கொண்டிருப்பது பாஸ்கரனுக்குத் தெரிந்தது.

வெகு நேரம் கழித்து ராம்நாத்தின் கார் வந்தது. காரை விட்டு இறங்கிய டிரைவர் முகத்தில் 'கலவரம் தெரிந்தது. ராம்நாத் ஏன் இன்னும் காரை விட்டுஇறங்கவில்லை?

பத்திரகாளி பிரவேசம்!

பதினைந்து வருடங்களுக்கு முன் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் சமயம். அப்படியிருந்தும் இருபது பேர்களுக்கும் குறையாமல் தெருவையே அடைத்துக் கொண்டு கிரிக்கெட் விளையாடுவோம். மெல்லிய நான்கு விறகுக் கட்டைகள் தான் எங்களுக்கு ஸ்டம்ப். அதனை ரோட்டில் குழி தோண்டிப் புதைத்து விளையாடுவோம். இப்படித் தினமும் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கும்போது எங்கள் தெருவில் வாடிக்கையாக ஒருசில வீடுகளுக்குப் பால் வழங்கும் புஷ்பா என்கிற நாற்பது வயதுப் பெண்மணி சம்பவத்தன்று தலையில் ஒரு பால் செம்பையும் கையில் ஒரு பால் கேனையும் எடுத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தாள். அப்போது விளையாட்டின் மும்முரத்தில் பேட்டைப் பிடித்துக் கொண்டிருந்த நான் மிகவும் அழகாக அடிக்கும்படியாக வந்த பந்தை ஓங்கி அடித்தேன். அந்தப் பந்து பால்காரி புஷ்பாவின் முகத்தில் பளார் என்று அடித்து விடவும் தலையில் இருந்த பால் செம்பும் கையில் இருந்த பால் கேனும் கீழே விழுந்து விட்டன. நாங்கள் விளையாடிக் கொண்டிருந்த இடமெல்லாம் பாலாக ஓடிக் கொண்டிருந்தது. பால்காரி புஷ்பா பத்ரகாளி போல் மாறி என் காதுகளைப் பிடித்துத் திருகித் தரதரவென்று என் வீட்டுக்கு அழைத்து வந்து, என் தாய், தந்தையரிடம் முறையிட்டுச் சத்தம் போட ஆரம்பித்தாள். மான அவமானத்துக்குக் கட்டுப்பட்ட என் தந்தை கீழே கொட்டிய இருபது லிட்டர் பாலுக்கும் உண்டான தொகையினைப் பால்காரியிடம் கொடுத்து அவளை அனுப்பி வைத்தார்.

மேஜர் தாசன்



கங்கா, மகன் ரமேஷ் இருவரும் காருக்கு அருகில் சென்றனர். அவர்கள் முகமும் சுருங்கியது.

காருக்குள் கங்காவின் கணவன் ராம் நாத் சுருண்டு கிடந்தான். அலங்கோலமாக. விஸ்கியின் நெடி வீசக் காருக்கு அருகில் வந்த பலர் முகத்தைச் சுளித்தனர்.

கங்காவின் முகத்தில் அவமானமும் வேதனையும் இருளாகப் பரவியது பாஸ்கருக்கு நன்றாகத் தெரிந்தது. ஒரு முறை கங்கா பாஸ்கரை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் தலை குனிந்து கொண்டாள்.

சூழ்நிலை மிகவும் தர்மசங்கடமாயிருந்தது. பாஸ்கர் மனத்தில் திடீரென்று ஒரு துணிச்சல்.

காரின் கதவைத் திறந்தான். மிகவும் அந்நியமாக அந்தச் சூழ்நிலையில் நின்றவன் யாரும் எதிர்பாராத விதத்தில் ராம்நாத்தைத் தோள் கொடுத்துத் தூக்கினான். அறைக்குள் அழைத்துச் சென்று படுக்கையில் சாயவைத்தபோது, ராம்நாத்தின் மகன் ஆக்ரோஷமாகக் கத்த ஆரம்பித்தான்.

''அந்த ஆளை ரூமுக்குள்ளே படுக்க வைக்காதீங்க. இழுத்து வெளியே தள்ளுங்க. சொத்துப்





பூராவையும் குடிச்சுக் கும்மாளம் அடிச்சே தீர்த்துட்டான்.''

மகன் அப்பாவின் மேல் வைத்த மரியாதை தெரிந்தது. கங்காவின் கண்கள் இருண்டன. தலை சுற்ற ஆரம்பித்தது.

அடுத்த நாள். கங்காவின் ஆபீஸ் அறையில் பாஸ்கரனும் கங்காவும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். பேசுவதைக் காட்டிலும் அதிக நேரம் மௌனம் நிலவியது. அப்போது ஆபீஸ் பியூன் உள்ளே வந்தான்.

''நம்ம டாக்டர் உங்களை உடனே அவசரமாப் பார்க்கணும்னு வந்திருக்காரு.''

''வரச்சொல்!'' என்றான் கங்கா.

உள்ளே வந்த டாக்டர் பாஸ்கரனைத் தயக்கத்தோடு பார்த்தார்.

''உங்க கிட்டே தனியா கொஞ்சம் உங்க குடும்ப விஷயத்தைப் பத்திப் பேசணும்''

டாக்டர் சொல்லி முடித்தபோது பாஸ்கரன் எழுந்து வெளியே செல்ல முயன்றான். கங்கா அதைத் தடுத்தான்.

''பரவாயில்லை டாக்டர்... அவர் என் குடும்பத்தில் ஒருத்தர்... எதுவானாலும் சொல்லுங்க....'' என்று கங்கா கூறிய போது பாஸ்கரனால் அதை மீறி வெளியே போக முடியவில்லை.

டாக்டர் மிகுந்த தயக்கத்துக்குப் பிறகே பேச ஆரம்பித்தார்.

''உங்க மகள் பானு என்னோட நர்ஸிங் ஹோமுக்கு வந்திருந்தா... அபார்ஷனுக்கு மருந்து கேட்டா... நான் என்ன ஏதுன்னு கொஞ்சம் கோபப்பட்டுக் கேள்வி கேட்க... பானு என்னைக் கண்டபடி திட்டுவிட்டு...''.

டாக்டர் தட்டுத் தடுமாறிச் சொன்ன அந்த உண்மையில் பாஸ்கர் வெல வெலத்துப் போனான். தாவணி பாவாடையில் சிட்டுக் குருவி போல் ஓடித் திரிந்த அந்தச் சின்னப் பெண் பானுவா?... அபார்ஷனுக்கு மருந்து கேட்டாள்....?

பானுவின் கார் வீட்டுக்குள் விரைந்தது.

கங்கா அறைந்த அறையில் பானு ஒரு சுற்றுச் சுற்றிச் சோபாவில் விழுந்தாள். கங்கா கோபம் பொங்கக் குமுறி அழுதபடி கேட்ட கேள்விகளுக்குப் பானு வெகு நிதானமாகச் சொன்ன பதில்...

''இப்ப என்ன நடந்து போச்சுன்னு இப்படிக் கத்தறே... அபார்ஷன் செஞ்சுக்காமே என்னோட பாய் பிரண்ட்ஸ் ஒவ்வொருத்தரையும் நான் மாரேஜ் செஞ்சுக்கணும்னா எங் கழுத்து நிறையத் தாலியாக் கட்டித் தொங்க விட வேண்டியதுதான்!''

பானு தன்னை ராம்நாத் மகள் என்பதை வெகு தெளிவாகக் கங்காவுக்குப் புரிய வைத்து விட்டாள்.

ஒரு எரிமலை வெடிப்பதற்கான அறிகுறிகள் அந்தக் குடும்பத்தில் அடுத்து அடுத்துத் தோன்றியது.

கங்கா ஆபீஸில் உட்கார்ந்து மாதக் கடைசி சம்பள பட்டுவாடாக்களைச் சரிபார்த்துக்கொண்டிருந்தபோது....

அந்த ரிஜிஸ்தர் தபால் வந்தது. மகன் ரமேஷ் வக்கீல் நோட்டீஸ் விட்டிருந்தான்

'தந்தை ராம்நாத் குடும்பத்தின் சொத்தைத் தகாத வழிகளில் அழித்து வருவதால் கங்கா ஸ்டீல் பாக்டரியின் உரிமை முழுவதையும் உடனடியாகத் தன் பேருக்கு மாற்ற வேண்டும்.... இல்லையென்றால் கோர்ட்டில் கேஸ் தாக்கல் செய்யப்படும்.'

கங்காவின் முயற்சியால் உருவான ஸ்டீல் பாக்டரியை மகனுக்கு எழுதி வைப்பதில் கங்காவுக்கு ஆட்சேபணை இல்லை.


ஆனால் அப்பாவும் மகனும் உரிமைகொண்டாடி கோர்ட் வியாஜ்ஜியங்களில் சிக்கி நிச்சயம் பாக்டரியை இழுத்து மூடி ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைப் பட்டினி போட்டு விடுவார்கள் என்பது கங்காவுக்கு நன்றாகத் தெரிந்தது.

தன் குடும்பத்தின் குணாதிசயங்கள்—இதுவரை போராட்டம் ஸ்ட்ரைக் எதுவும் இன்றி ஒத்துழைப்புத் தந்து வந்த தொழிலாளர்களின் எதிர்காலம், கங்காவைத் தீவிரமாகச் சிந்திக்கச் செய்தது.

சிக்கலான குழப்பத்தில் கங்கா சிக்கி மூச்சுத் திணறுவதாக பாஸ்கரன் மனத்தில் பட்டது. சுமுகமாகப் பேசிப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்ளலாம் என பாஸ்கரன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். ஆனால் கங்கா வேறு விதமாக முடிவு செய்து விட்டான்.

விஜயா ஸ்டீல் பாக்டரியைத் தொழிலாளர்களின் பொதுச் சொத்தாக்கி ஒரு டிரஸ்ட் ஏற்படுத்தி வக்கீலைக் கூப்பிட்டு.. டாக்குமெண்டுகள் தயாரித்து விட்டான்.


அமோக பொங்கல் சலுகை!!!
ஒவ்வொரு ஹிமாத்ரி ஃபேனுடன்*
ரூ. 85/- மதிப்புள்ள
விக்ராண்ட் டைம்பீஸ்
(கடிகாரம்) இலவசம்
Himadri
VIKRANT
இந்த
அரிய சலுகை
8-1-82 முதல்
15-1-82 வரை



'என்னவோ நடக்கப் போகிறது...

என்னவோ நடக்கப் போகிறது... என்று ஒரு பூகம்பத்தின் உள் நடுக்கம் ஒவ்வொரு வர் மனத்திலும் ஏற்பட்டது.

டாக்குமெண்டுகள் ரிஜிஸ்தர் ஆகும் நாள் புயல் வீசுவதற்கு முன் ஏற்படும் அசாதாரண அமைதி நிலவியது.

ஒரு வக்கீலின் கார் பாக்டரிக்குள் நுழைந்தது. காரை விட்டு இறங்கிய வக்கீல் அவசரமாகக் கங்கா அறைக்குள் நுழைந்தார். கங்காவும் பாஸ்கரனும் தீவிரமாக விவாதித்துக் கொண்டிருந்தனர். வக்கீல் வந்ததும் பேச்சுத் தடைப்பட்டது.

ரிஜிஸ்தர் சம்பந்தமாக வக்கீல் சட்ட நுணுக்கங்களை விளக்கிக் கொண்டிருந்தார். அப்போது டெலிபோன் அலறியது. வக்கீ லுக்கு 'கால்' வந்திருந்தது. வக்கீல் போனை எடுத்துப் பேசினார். பேசப் பேச அவர் முகம் பேயறைந்தது போல் மாறியது. பேசும் போது அடிக்கடி பாஸ்கரன் பக்கம் திரும்பித் திரும்பி பயத்துடன் பேசினார்.

போனில் பேசிவிட்டுத் திரும்பிய வக்கீலின் குரல் நடுங்கியது. ''யாரோ மிரட்டுகிறார்கள். இந்த ரிஜிஸ்தர் விஷயத்தில் தலையிட்டால் உயிருக்கே ஆபத்து என்கிறார்கள்.''

இவர் வெளியே சொல்வதைக் காட்டிலும் அதிகம் மிரட்டியிருக்க வேண்டும். முகத் தில் அந்த அளவுக்குப் பயம் தெரிந்தது. வந்த விஷயத்தை வெகு சீக்கிரத்தில் சொல்லி முடித்துவிட்டு அவசர அவசர மாகக் கிளம்பி விட்டார்.

வக்கீல் போனவுடன் பாஸ்கரன் பேச ஆரம்பித்தான்.

''அண்ணன் தம்பி சொந்தத்துக்குள்ளே தான் ஜென்மப் பகை வரும்பாங்க. உங்க குடும்ப விவகாரத்தைக் கோர்ட்டிலே தீர் மானிக்கிறதாலே பிரச்னை பெரிசாகுமே தவிர சுமுகமான முடிவு கெடைக்காது... பேசி முடிவெடுக்கிறதுதான்...''

கங்காவின் முகத்தில் தீவிரம் தெரிந்தது. பாஸ்கரன் பேச்சில் குறுக்கிட்டாள்.

''எங்க குடும்பத்திலே எவ்வளவு பெரிய நியாயஸ்தர் வந்து பேசினாலும் இந்தச் சொத்து விஷயத்திலே சுமுகமான முடிவு நிச்சயமா வராதுங்கறது எனக்கு நல்லாத் தெரியும். சட்டப்படியும் இந்த நல்லதை நான் செய்யலேன்னு... சொத்து அப்பன் மகனுக்குள்ளே குறையாடிச் சேதமாகறது மட்டுமல்ல... குத்து வெட்டுக் கொலைக்குப் போகும்னு பயந்துதான் நான் கோர்ட் ஏற முடிவு செஞ்சேன்....''

அவள் பேசி முடிக்கவில்லை. திடீரென்று எல்லா மின் விளக்குகளும் அணைந்தன... அணைந்ததா இல்லை. யாரோ அணைத்து விட்டார்களா?

இரண்டு கார்கள் வெளிச்சத்தை வீசிய படி பாக்டரிக்குள் நுழைந்தன. அதிலிருந்து திமுதிமு வென்று ஆறு ஏழு ஆட்கள் இறங்கிக் கங்காவின் அறையை நோக்கி ஓடினார்கள்.

''எமர்ஜென்சி லைட் ஏன் எரியலே... ப்யூன்... ப்யூன்... எங்கே தொலைஞ்சிட்டான் ராகவன்... ராகவன்... பி. ஏ.வும் காணுமே திருமூர்த்தி...திருமூர்த்தி...கேஷியர் கூட...'

திட்டமிட்ட சதி நடப்பது கங்காவுக்குத் தெரிந்தது. அடுத்த கணம் கங்காவின் அறைக்குள் திமுதிமுவென்று ஆட்கள் நுழைந் தனர். கங்காவை நோக்கி ஆபத்து அடி எடுத்து வைப்பதைப் பாஸ்கரும் உணர்ந் தான்.

ஓர் உருவம் கங்காவை நெருங்கியது. கையில் ஏதோ ஒன்றுபளபளத்தது.டார்ச்சா? இல்லை கத்தியா?

பாஸ்கருக்கு எங்கிருந்து அந்தத் துணிச் சல் வந்தது என்று தெரியாது.

ஒரே தாவலில் அந்த உருவத்தை நெருங்கி அதன் பிடரியில் ஓங்கி அடித்தான். அடுத்த நிமிடம் பாஸ்கரின் தாவாயில் முதுகில்... மாறி மாறி அடிகள் விழுந்தன.


கங்கா வாய் விட்டு 'ஓ' வென்று அலறி னாள்.

பாக்டரிக்குள் வேலை செய்ய வந்த தொழி லாளர்களுக்கு மெஷின்கள் ஓடாததால் கங்காவின் அலறல் தெளிவாகக் கேட்டிருக்க வேண்டும்.

இரண்டு மூன்று டார்ச்சுகளுடன் மெஷின் ரூம்களை விட்டுத் தொழிலாளர்கள் கூட்ட மாக ஓடி வந்தனர்.

ஆனால் டைம் ஆபீஸ் கதவோரம் இருந்த இரும்புக் கேட்டை ஓர் உருவம் ஓடிவந்து இழுத்து மூடித் தாளிட, தொழிலாளர்கள் கங்காவின் அறையை அடைய முடியாமல் தடுக்கப்பட்டனர்.

கங்காவின் அறையில் வாயில் துணியை அடைத்தபடி கங்காவை ஒரு சேரில் இருவர் அமுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தனர்,


உங்கள் வாழ்வில்
செல்வச் செழுமை
பொங்கிட
இப்பொங்கல்
திருநாளில்
எங்களது
நல்வாழ்த்துக்கள்!
லக்ஷ்மி விலாஸ்
பாங்க் லிமிடெட்
LVB
பதிவு அலுவலகம்: கரூர் 639 001
நிர்வாக அலுவலகம்: சென்னை 600 086
என். முத்தியாலு
ஜெனரல் மானேஜர்
என்.வி. ஸ்ரீநிவாசன்
சேர்மன்
அன்னியச் செலாவணியில் வர்த்தகம் செய்ய
அங்கீகாரம் பெற்றவர்கள்.

''மரியாதையா இதுலே கையெழுத்துப் போடு....இல்லேன்னு... உன்னோட பழைய காதலனை வி-1 மெஷின் பெல்டிலே வெச்சு எலும்பு கூட மிஞ்சாம நசுக்கிக் கொன்னுடுவோம்....''

டார்ச்சைப் பேப்பர் மேல் அடித்துக் கொண்டு பேனாவும் கையுமாகப் பேசிக் கொண்டிருந்தான் கங்காவின் மகன்— ரமேஷ்.

கங்காவின் அறைக்கு எதிரில் இருந்த வி-1 மெஷின் ரூமில் பாஸ்கரனை பெல்ட்டோடு கட்டி இருந்தார்கள்.

அதன் ஜெனரேட்டர் இயங்க, தலையில் ரத்தம் வழிய முனகியபடி பாஸ்கரை பெல்டோடு கட்டியிருப்பதை ஒருவன் டார்ச் அடித்துக் காட்டினான்.

கங்காவுக்குத் தலை சுற்றியது. மயக்கம் வர ஆரம்பித்தது. அவள் விரும்பினால்கூட அப்போது கையெழுத்துப் போட முடியாது.

ரமேஷ் ஆத்திரத்தோடு கத்தினான்... ''உன்னோட ஜாதகம் பூராத்தையும் ஆதியோட அந்தமா விசாரிச்சு முடிச்சிட்டேன். கட்டிய புருசனுக்கும் பெத்த மகனுக்கும் துரோகம் செஞ்சு கள்ளக் காதலன் பேச்சைக் கேட்டு நீ சொத்து சுகத்தையெல்லாம் அன்னதானம் பண்ணப்பாக்கறே.

''மரியாதையா கையெழுத்துப் போடு... இல்லேன்னா கொலை செய்யவும் அஞ்ச மாட்டேன்...''

கங்காவுக்குக் கண்கள் இருண்டன... ரமேஷ் பேசுவது அதற்கு மேல் கேட்கவில்லை. அதே சமயம் ரமேஷின் கோபம் உச்சத்தை அடைந்தது. வி-1 மெஷின் ஸ்விட்சை அழுத்தச் சொல்லிக் கத்தினான். எஸ்கலேட்டர் பெல்ட் நகர ஆரம்பித்தது. பாஸ்கரன் பெல்டோடு மெஷின் வாய்ப் பாகத்தில் சுழன்று கொண்டிருக்கும் ஆக்சா பிளேடுகளை நெருங்கிக் கொண்டிருந்தான்.

கங்கா சுத்தமாக மயக்க நிலையை நெருங்கிக் கொண்டிருந்தாள்.

ஒரு பெரிய ஓசை கேட்டது. சாத்தப்பட்டிருந்த இரும்புக் கேட்டைத் தொழிலாளர்கள் தகர்த்து விட்டனர். திமுதிமுவென்று கூட்டம் கைகளில் கத்தி கடப்பாறை ஸ்பேனர்களோடு கங்காவின் அறையை நோக்கி ஓடியது.

அணைக்கப்பட்டிருந்த மின்சார விளக்குகளின் மெயின் ஸ்விட்ச் போடப்பட்டது. வி-1 மெஷினில் அதற்கு உயிர் கொடுத்த பாஸ்கர் பலியாகப் போவதை மெக்கானிக் ரங்கன் கடைசி நிமிஷத்தில் உணர்ந்தான். அடுத்த விநாடி அவன் கையில் இருந்த பெரிய சுத்தியலை மேலே ஓங்கி....

மெஷினின் இதய பாகமான கண்ட்ரோல் போர்டு தூள் தூளாகிப் புகை பறந்தது. அணு குண்டு வெடித்தது போல் பாக்டரி முழுதும் எதிரொலிக்க வெடியோசை கேட்டது.

கங்கா ஒரு முறை தன்னைச் சிலிர்த்துக் கொண்டு கண் விழித்தாள். கூலிக்குக் கொலை செய்ய வந்த அடியாட்கள் தொழிலாளர்களின் கூட்டத்தைப் பார்த்ததும் ஜன்னலேறி ஓடினர்.

அங்கே பயந்து ஓடாமல் இரண்டு பேர் மட்டும் நின்றனர். ஒன்று கங்காவின் மகன் ரமேஷ். அடுத்தது கங்காவின் கணவன் ராம்நாத்.

கங்காவின் கண்கள் எஸ்கலேட்டர்பெல்ட்டைப் பார்த்தது. பாஸ்கரனைத் தொழிலாளர்கள் கட்ட விழ்த்துக் கீழே இறக்கிப் படுக்க வைத்தனர். அடுத்த விநாடி கங்கா ஆவேசமாக பாஸ்கரனை நோக்கி ஓட ஆரம்பித்தாள். ராம்நாத் குரல் கொலை வெறி தொனிக்க... ''நில்லடி....'' என்றது.

கங்காவின் கால்கள் விலங்கு போட்டது போல் தடுமாறி நின்றன.

''அந்த அனாதைப் பயல் பாஸ்கரனுக்கும் உனக்கும் என்னடி சம்பந்தம்?''

கங்கா பேசவில்லை. ஆனால் அவள் கண்களில் ஒரு ஜ்வாலை வீச ஆரம்பித்தது. மெதுவாக அவள் கால்கள் பாஸ்கரனை நோக்கி நகர ஆரம்பித்தன.

''தாலி கட்டின புருஷன் நான் கேக்கறேண்டீ... பதில் சொல்லிட்டு அப்புறம் நகரு!''

தொழிலாளர்களின் முகங்கள் மௌனத்தில் தலை குனிந்தன. ராம்நாத் கேட்ட கேள்விக்குக் கங்கா பதில் சொல்லத்தான் வேண்டும் என்பது போல் தொழிலாளர் முகங்கள் குனிந்தன. கங்கா எல்லோரையும் ஒரு முறை நிதானமாகப் பார்த்தாள். அவள் பதில் சொல்ல வேண்டிய அவசியம் அவளுக்குப் புரிந்தது. தாலி கட்டின புருஷன் கேட்கிறானே.... பதில் சொல்லாமல் மேலே நகர்வது எப்படி?

கங்கா என்ற அந்தக் கங்கை நதி மெல்ல மெல்லச் சூடேற, பனி உருகிப் பாயும் அந்தக் குளிர்ந்த நதியில் தீயின் செம்மை படரத் தொடங்கியது.

தாலி கட்டின புருஷன்... சீ... இவனா தாலி கட்டின புருஷன்... கேவலம் இவன் கட்டியதற்குப் பெயரா... தாலி!... அடுத்த கணம் அந்த எரிமலை வெடித்து விட்டது.

கங்கா அவனுக்கும் அவள் குடும்பத்துக்கும் கடைசிப் பாலமாக இருந்த தன் தாலியைக் கழற்றி ராம்நாத்தின் மேல் வீசினாள். அடுத்த நொடியில் அவள் விலங்குகள் தகர்ந்தன. கூண்டுகள் திறந்து சுதந்திரச் சிறகுகள் விரிந்தது போல் உணர்ந்தாள். பாஸ்கரனை நோக்கி ஒரு தாய்ப் பாசத்தோடு ஓடினாள்.

ஆனால் ராம்நாத் பாக்கெட்டில் இருந்த ரிவால்வரைச் சரியாகக் குறிவைத்தான். அதே சமயம் கூட்டமான தொழிலாளர்கள் கங்காவுக்குப் பாதுகாப்பாக முன்னால் ஓடி வந்து சுவர்போல் நின்றனர். அத்தனைபேரின் நெஞ்சைத் துளைக்கும் அளவுக்கு ரிவால்வரில் குண்டுகள் இல்லை. ராம்நாத் மனத்தில் துணிவும் வரவில்லை.

நியாயத்தின் பக்கம் உயிருக்குத் துணிந்து நிற்கும் ஆலைத் தொழிலாளர்களின் முகத்தில் அடுத்து வரும் பிரச்னைகளை வெற்றியோடு சந்திக்கும் ஆற்றல் ஒளி வீசியது. [முற்றும்]

கிரிக்கெட் டெஸ்ட்

வாசகர் பரிசு ரூ.1500/=

கீழே உள்ள ஐந்தாவது கூப்பனைப் பூர்த்தி செய்து முடிவுதேதிக்கு முன் அனுப்பிவிடவும். டெஸ்டின் முடிவும் கூப்பனில் உங்கள் முடிவும் ஒத்துப்போனுல் ரூ. 100 பரிசு. ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதினுல் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

ஐந்து டெஸ்ட்டுகளுக்கும் சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அனுப்புகிறவருக்கு ரூ. 1000 சிறப்புப் பரிசு. இதிலும் ஒருவருக்கு மேல் வெற்றி பெற்ருல் பரிசு பகிர்ந்தளிக்கப்படும்.

கூப்பனில் அடித்தல் திருத்தல் இன்றித் தெளிவாய் எழுதவும். சந்தேகம் எழும் விஷயங்களில் ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. கடிதப் போக்கு வரத்துக் கிடையாது. உறையின்மேல் ''கிரிக்கெட் டெஸ்ட்'' என்று அவசியம் எழுதவும்.

கூப்பன் நெ: 5 டெஸ்ட் 6 (கான்பூர்) முடிவு தேதி ஜனவரி 27

கேள்வி	விடை
1. டாஸ் வெற்றி யாருக்கு? (கேப்டன் பெயர் எழுதவும்)	
2. இந்திய அணியில் அதிகபட்ச ரன்கள் எடுக்கப் போகிறவர் யார்? (இரு இன்னிங்ஸ்களும் சேர்த்து)	
3. இங்கிலாந்து அணியில் அதிகபட்ச ரன்கள் எடுக்கப் போகிறவர் யார்? (இரு இன்னிங்ஸ்களும் சேர்த்து)	
4. இந்திய அணியில் அதிகபட்ச விக்கெட்டுகள் எடுக்கப் போகிறவர் யார்? (இரு இன்னிங்ஸ்களும் சேர்த்து)	
5. இங்கிலாந்து அணியில் அதிகபட்ச விக்கெட்டுகள் எடுக்கப்போகிறவர் யார்? (இரு இன்னிங்ஸ்களும் சேர்த்து)	
6. ஆறாவது டெஸ்ட்டின் தலைசிறந்த ஆட்டக்காரர் என்று தேர்ந்தெடுக்கப்படப் போவது யார்?	
7. மாட்ச் ஏதேனும் ஓர் அணிக்கு வெற்றியாக முடியுமா? வெற்றி தோல்வி இன்றி முடியுமா?	



என் கையெழுத்து: ______________________

பெயர்: ______________________

விலாசம்: ______________________

____

____

அரங்கு விளையாட்டு; ஆமை தொழில்!

கல்கத்தா ஈடன் கார்டனில் நடக்கும் டெஸ்ட் மாட்சில் ஆட்டக்காரராகவோ அல்லது பார்வையாளராகவோ பங்கு பெறுவதென்பது ஓர் அற்புதஅனுபவந்தான். 80000 மக்கள் மேற் கூரையில்லாத அரங்கப் படிகளில் மனிதக் குன்றுகளாகக் குவிந்திருக்க, பலூன்களும் வண்ண வண்ண விளம்பரப் பானர்களும் ஆகாயத்தில் ஆனந்தமாகக் காற்றில் அசைய ஒரு கோலாகலக் களை ஏற்பட்டுப் போகும். கல்கத்தா ரசிகர்கள் ரொம்பவும் உணர்ச்சி வசப்படுகிறவர்கள். ஆட்டத்தின் ஒவ்வொரு விநாடியையும் அவர்கள் ஆத்மார்த்தமாக அனுபவிப்பார்கள். ஆனால் தமக்குப் பிடித்தமான ஆட்டக்காரருக்கு மாலையிடவோ, அவரைக் கைகுலுக்கி வாழ்த்தவோ மைதானத்துக்குள் புகுந்து ஆட்டத்துக்குத் தடங்கல் செய்ய மாட்டார்கள். அதே நேரத்தில் ஏதேனும் அநியாயம் நடந்து விட்டது என்று உணர்ந்தால் போதும் அவர்களுக்குப் பொல்லாத கோபம் வந்துவிடும்! இந்தக் கோபத்தின் பரிமாணத்தை மேற்கிந்திய அணியுடன் நம்மவர் விளையாடிய டெஸ்டின்போது 1967 ஜனவரி முதல் தேதியன்று பார்த்தோம்.


கல்கத்தாவில் தற்போது நடந்து முடிந்த டெஸ்ட், பாங்களூர், டில்லி டெஸ்ட்களைப் போலவே ஆமை வேகத்தில் முன்னேறியது. இரண்டாவது மூன்றாவது நாட்களில் முறையே 155, 152 ரன்களே எடுக்கப்பட்டன. ஆனால் ஒரு வித்தியாசம். முந்தைய டெஸ்ட்களைப் போல் பந்து வீச்சுக்கு உதவாத பிட்ச்களில் போலர்கள் போராடுவதற்குப் பதிலாக இங்கே பாட்ஸ்மென்கள் தான் ரன் எடுக்க முடியாமல் திணற வேண்டியிருந்தது. குளிர் காலத்தில் கல்கத்தா முழுவதும் புகை கலந்த பனி கவிந்திருக்க அது பந்துக்கு அசைவு கொடுக்கப் போலர்களுக்கு உதவுகிறது. முதல் இன்னிங்ஸில் கபில்தேவ் கைப்பற்றிய விக்கெட்டுகள் ஆறு. இவற்றுள் முதல் நாளும் இரண்டாம் நாளும் காலையில் புதுப் பந்தைப் பயன்படுத்தும் வாய்ப்புக் கிட்டியபோது அவர் நாலு விக்கெட்டுகளை எடுத்தார். இந்தியாவின் ஓப்பனிங் பாட்ஸ்மென்கள் கவாஸ்கர் ஸ்ரீகாந்த் ஆகியோர் அண்டர்வுட் வீசிய பந்துகளுக்கு ஆட்டமிழந்தனர். அந்நேரத்தில் பந்து தன் பளபளப்பு குன்றாமலிருந்தது. இன் ஸ்விங்கர்கள் பலன் தந்தன. இரண்டாம் நாள் போதமும் வில்லிஸும் இரண்டாவது புதிய பந்தின் உதவியுடன் இந்திய முதல் இன்னிங்ஸைத் துரித முடிவுக்குக் கொணர்ந்தனர்.

இவ்வாறு சீதோஷ்ண நிலையும் பிட்சும் போலர்களுக்கு உதவுபடியாக இருக்கும் போது பாட்ஸ்மென்கள் எச்சரிக்கையுடன் எதிரடி தந்துதான் பந்து வீச்சை வெற்றி கொள்ள வேண்டும். ஆனால் இந்த டெஸ்ட் தொடரில் இதுவரை இரு தரப்பிலுமே பாட்ஸ்மென்கள் – ஒருசில தருணங்கள் நீங்கலாக – பொதுவாகத் தாக்குதலை ஒதுக்கி தற்காப்பையே மேற்கொண்டிருக்கின்றனர். கூச் (47) போதம் (58) கவாஸ்கர் (42) வெங்ஸர்க்கார் (70) ஆகியோர்தாம் தத்தமது முதல் இன்னிங்ஸில் சற்றே ஆக்கிரமிப்புக் காட்டினார்கள்.

நத்தை வேகத்தில் நகர்ந்த கல்கத்தா டெஸ்டைப் பார்க்க, நாலு நாட்களில் 2300 ரன்கள் எடுக்கப்பட்ட மாட்ச் நினைவு வருகிறது. இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியா


புகைப்படம் நன்றி: "ஹிந்து"

பி.என். சுந்தரேசன்



வுக்கும் இடையில் 1930ல் லார்ட்ஸ் மைதானத்தில் நடந்தது இந்த டெஸ்ட். ஆட்டம் ஒவ்வொரு நாளும் ஆறு மணி நேரம். ஆஸ்திரேலியாவுக்கு ஏழு விக்கெட் வெற்றி. இதில் ரஞ்ஜித் சிங்கின் மருமான் துலிப் சிங், பிராட்மன், சாப்மன் போன்ற மாவீரர்கள் இடம் பெற்றனர். ஒரு கட்டத்தில் 285 நிமிஷங்களில் 332 ரன்கள் குவிந்தன. இதில் துலீப் சிங்கின் எண்ணிக்கை 173. இன்னொரு கட்டத்தில் உட்ஃபுல்லும் பிராட்மனும் சேர்ந்து 165 நிமிஷங்களில் 242 ரன்கள் குவித்தனர். மற்றுமொரு தருணத்தில் பிராட்மனும் லெப்பேக்ஸம் இணைந்து 180 நிமிஷங்களில் 192 எடுத்தனர். பிராட்மன் அவுட்டானபோது 330 நிமிஷங்களில் எடுக்கப்பட்ட 423 ரன்களில் அவர் பங்கு 254! இத்தனைக்கும் சூரப்புலிகளான போலர்கள் இரு தரப்பிலும் இருக்கத்தான் செய்தனர். இன்றைக்கோ கிரிக்கெட் பிரியர்கள் ஒரு நாளைக்கு அதிகப்பட்சம் இரு நூறு ரன்களுடன் திருப்தி அடைய வேண்டியிருக்கிறது. காரணம் அன்று கிரிக்கெட் சுத்தமான விளையாட்டு; இன்று தொழில்!

கல்கத்தா டெஸ்ட்டில் நான்காம் நாள் ஆட்ட இறுதியில் இருந்த கொஞ்ச நஞ்ச எதிர்பார்ப்பும் ஐந்தாம் நாள் ஆட்டம் தொடங்கியதும் பிசுபிசுத்து விட்டது.



80,000 மக்களுக்கு மட்டுமின்றி வெற்றி வாய்ப்புக்காக முயன்ற ஃபீல்டர்களுக்கும் பெரிய ஏமாற்றம். புகை கலந்த கனத்த போர்வையாகப் பனி கவிந்திருக்க ''வெளிச்சம் போதவில்லை'' என்ற ஆட்சேபணையை அம்பயர்கள் ஏற்றனர். 65 நிமிஷங்களுக்குப் பிறகுதான் ஆட்டம் மறுபடி தொடர்ந்தது.

இதன் பின்னர் உணர்ச்சியற்ற ஏனோதானோ ஆட்டம்தான். கவாஸ்கர் நன்றாகவே ஆடினார். அவர் கிரீஸில் நிற்கும்வரை இந்தியாவின் நிலை பாதுகாப்பாக இருக்கும் என்பது புலனாயிற்று. மாட்ச் முடிந்தபோது இந்தியா மூன்று விக்கெட் நஷ்டத்துக்கு 170 எடுத்திருந்தது. இதில் கவாஸ்கர் பங்கு 83 நாட் அவுட்.

கடைசி ஒரு மணி நேரம் ஒரே தமாஷ். தோனி போல நடித்து மெதுவாகப் பந்து வீசிக் காட்டினார் கூச். போத்தம் ஓரிரு தடவைகள் ரப்பர் பந்தை வீசினார். இவையும், 'வெளிச்சம் போதவில்லை' என்ற அம்பயர் தீர்ப்பை ஏற்காதது போல் சில இங்கிலாந்து ஆட்டக்காரர்கள் மைதானத்திலேயே பின்தங்கி இருந்ததும் பண்பாடு அல்ல. வானொலி விமர்சகர் ஒருவர், அம்பயர்கள் தங்கள் அதிகாரத்தைக் காட்ட வேண்டும் என அழுத்தமாய்ச் சொன்னார். ஆனால் அம்பயர்களே கௌஸ் விவகாரம் போன்ற தருணங்களில் இந்தியக் கிரிக்கெட் போர்டினால் கைவிடப்படும்போது அவர்கள் எப்படித் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்ட முடியும்?

கல்கத்தா டெஸ்ட் டிரா ஆனதால் பொங்கல் விடுமுறையில் நடக்கும் சென்னை டெஸ்ட் இரு தரப்பினருக்குமே அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் நடந்துள்ள ஒன்பது டெஸ்ட்களில் ஏழு வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதாகவே முடிந்துள்ளன.

இந்தத் தொடரில் முதல் தடவையாக இந்திய அணியில் மூன்று பெரிய மாற்றங்கள். தங்களுக்குத் தரப்பட்ட வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாத ஸ்ரீகாந்த் சந்தீப் பட்டீல் ஆகிய இருவரும் அணியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். ஷிவ்லால் யாதவ்வும் ஒதுக்கப்பட்டு இவர்களிடத்தில் புரோஹித் ராய், அசோக் மல்ஹோத்ரா, கோபால் சர்மா ஆகியோர் ஏற்கப்பட்டுள்ளனர். அசோக் திறமையான பாட்ஸ்மன் என்று தம்மைப் பலமுறை நிரூபித்துக் கொண்டவர். டெஸ்ட் பிரவேசம் செய்கிறார். இறுதி பதினொரு நபர்களில் கோபால் சர்மா இடம் பெறுவது சந்தேகமே.

தமிழாக்கம்: குட்டி கிருஷ்ணன்

இந்திய உணவு கார்ப்பொரேஷன்

உணவு மக்களின் தலையாய தேவையாகும். இதை மக்களுக்குக் கிடைக்க வழிவகுப்பதே அரசாங்கத்தின் பொறுப்பாகும். மக்களுக்கு ஆண்டு முழுவதும் குறித்த காலத்தில், நியாய விலையில் உணவுப் பொருட்கள் கிடைக்கும் பொருட்டு 1965-ம் ஆண்டு இப்பொங்கல் நன்னாளில் இந்திய உணவு கார்ப்பொரேஷன் நிறுவப்பட்டது.

இந்திய உணவு கார்ப்பொரேஷன் நிலையான பசுமைப் புரட்சியைக் கருத்தில் கொண்டு, அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலையை விவசாயிகளுக்கு வழங்கி பயன் அடையச் செய்கிறது.

இந்திய உணவு கார்ப்பொரேஷன் 'தானியங்களைக் கொள்முதல் செய்தல், சிறந்த முறையில் பாதுகாத்தல், தொலை தூரத்தில் உள்ள மாநில அரசு நிறுவனங்களுக்கு அடக்க விலைக்கும் குறைவாகக் கிடைக்கச் செய்தல் போன்ற மகத்தான பணிதனைப் புரிகிறது. அடக்க விலைக்கும் நுகர்வோர் விலைக்கும் உள்ள வேறுபாட்டை அரசு ஏற்றுக் கொண்டு நுகர்வோர்க்கு சேவை செய்கிறது. உணவுத் தட்டுப்பாட்டின் போது உரிய இடத்திற்கு போதுமான அளவு உணவு தானியங்களை அனுப்பி தேவையைப் பூர்த்தி செய்கிறது. கடந்த ஆண்டில் மட்டும் 140 லட்சம் டன்னுக்கும் மேலாக உணவு தானியங்களை நுகர்வோர்க்கு விநியோகித்தது இதுவரை இல்லாத சாதனையாகும்.

இந்திய உணவு கார்ப்பொரேஷன் இப்பொங்கல் நன்னாளில் மக்களுக்கு வாழ்த்துக்கூறி அவர்களின் சேவைக்கு மீண்டும் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது.

'கங்கை நதிப்புறத்து கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்'
— பாரதியார்

எங்கள் பிறந்த நாளில் உங்களுக்குக் கூறுகிறோம் பொங்கல் வாழ்த்து !



ACIL 0008/81

போலந்தில் நடக்கிற போராட்டம்

"நம் இந்தியாவில் இல்லையே? அயல் நாட்டில்தானே?'' என்று கேட்கிறவர்கள் இந்தக் கட்டுரையை ஒதுக்கிவிட்டு, அடுத்த பக்கத்துக்குப் போய்ப் புதுத் தொடர் கதை படியுங்கள். ''அங்கே அப்படி என்னதான் நடக்கிறது?'' என்று தலையைப் பிய்த்துக் கொள்கிறவர்கள் மட்டும் இதைப்படியுங்கள். நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய பெயர்கள் இரண்டே இரண்டு:

1. ஜாருஜெல்ஸ்கி (அப்பாடா!)—போலந்து பிரதமர் காம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்
2. லெக் வலேசா (பரவாயில்லை!) — 'ஸாலிடாரிடி' என்கிற சுதந்திர தொழிற் சங்கத் தலைவர். கடன்ஸ்க் நகர கப்பல் தளத்தில் சாதாரண எலக்ட்ரீஷியன். வயது 38.



✖ வலேசா

1. துரதிர்ஷ்டமான 13

81ம் வருட டிசம்பர் 13ம் தேதி காலை, போலந்து நகர மக்களுக்கு நல்ல போதாக விடியவில்லை. தலைநகர் வார்சாவில் ராணுவ ஆட்சி அமல்படுத்தப்பட்டு, 'சாலிடாரிடி'யின் வெளித் தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டு, ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் சிறையில் தள்ளப்பட்டனர். 'சாலிடாரிடி'யின் அங்கத்தினர் எண்ணிக்கை — அறிவு ஜீவிகள், அரசுப் பணியாளர் உட்பட — ஒரு கோடிக்கு மேல்!



✖ ஜாருஜெல்ஸ்கி

2. ஏன்? என்ன காரணம்?

1956லேயே ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் ''சாப்பிட ரொட்டி வேண்டும்; கூடவே சுதந்திரமும் வேண்டும்!'' என்று ஆரம்பித்த போராட்டம் இது. பிறகு 1970 1976, 1980 என்று மெல்ல, மெல்ல உருவாகியிருக்கும் கொந்தளிப்புக்களின் உச்ச கட்டம், இப்போது ஆட்சிக்கு எதிராக வெடித்திருக்கும் போராட்டமாக வடிவெடுத்திருக்கிறது. விலைவாசி உயர்வு, தொழிற்சாலைகளை நவீனமாக்கும் முயற்சிகளில் தோல்வி, வெளிநாட்டு பாங்குகளில் ஏறிய கடன் சுமை எல்லாம் வேறு சேர்ந்து கொண்டன. 1980ல் உருவான 'சாலிடாரிடி' பல உரிமைகளைப் பெற்றது. ஸ்டிரைக் செய்ய, தணிக்கை முறை கட்டுப்பாடுகளைத் தளர்த்த, அரசின் நிர்வாக முறையில் மாறுதல் செய்ய, கட்சித் தலைமையில் உள்ளவர்களை வேண்டாமென்று வீட்டுக்கு அனுப்ப! 'சாலிடாரிடி'யின் பரிணாம வேகமும், ஆட்சியில் அவர்கள் கொண்டு வர முனைந்த மாற்றங்களும், புரட்சிகளும் சற்றுத் தீவிரம் அடையவே, மாஸ்கோவில் உள்ள கிரெம்ளின் மாளிகையிலிருந்து வார்ஸாவுக்கு ஒரு கண்டிப்பான உத்தரவு வந்தது. ''சோவியத் பாணி காம்யூனிஸம் போலந்திலிருந்து அழியுமுன் கடுமையான நடவடிக்கை எடுங்கள்!''

3. வார்சா நடவடிக்கை

பார்த்தார் ஜாருஜெல்ஸ்கி. வேலை நிறுத்தங்களைத் தடை செய்தால் என்ன? போலந்து

அரசுக்கும், அங்கே அதிக செல்வாக்குப் பெற்றிருக்கும் ரோமன் கத்தோலிக்க மத குருமார்களுக்கும் நடைபெற்ற ஆரம்பகட்டப் பேச்சு வார்த்தைகளில் இந்த யோசனை அடிபட்டுப் போயிற்று. தற்போதைய போப் ஆண்டவர் போலந்து நாட்டுக்காரர். அதனால் போலந்து விவகாரத்தில் அக்கறையும் அநுதாபமும் கொள்கிறார்.

தொழிலாளர்கள் கீழ்ப்படியாமல் நிலைமை கட்டுக்கடங்காது போன பின், ராணுவத்தை அழைத்து ராணுவ ஆட்சி தொடங்கியிருக்கிறார் ஜாருஜெல்ஸ்கி, டிசம்பர் 13ல்.

4. போலந்து பொருளாதாரம்

ஐந்து மலர்களின் விலை நூறு ரூபாய்! போலந்தின் பொருளாதாரச் சீர்குலைவுக்கு ஓர் எடுத்துக்காட்டு. ஏராளமான அந்நியக் கடன்கள், அரசின் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தங்களின் தானிய விலைபொருட்களை விற்கப் போலந்து விவசாயிகள் மறுக்கின்றனர். ஏனெனில் போலந்து கரன்ஸிக்கு மதிப்பு இல்லை! பொருளாதாரச் சீர்கேடும், அரசு அதிகாரிகளின் செயல் திறமை இன்மையும், அரசுடைமை நிறுவனங்களில் உள்ள ஊழல்களும் ஒன்றாகத் திரண்டது போதாது என்று கறுப்புச் சந்தை வேறு. கேட்பானேன் புரட்சிக்கு? அடிமைப்படுத்தப்பட்ட தொழிலாளர்களும் கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரமும் செழிக்க முடியாது என்பதற்கு மற்றொரு உதாரணம் போலந்து.

5. வலேசா எப்படி இருக்கிறார்?

வலேசாவைக் கைது செய்யவில்லை; ஆனால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு இருக்கிறாராம். (அவர் மனைவி ஏழாவது குழந்தையை வயிற்றில் சுமந்து கொண்டிருக்கிறார்) வலேசா மனசு உடைந்து போயிருக்கிறார். ஆனால் ராணுவ ஆட்சியாளரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுக்கிறார். மத குருமார்களுக்கும், போப் ஆண்டவருக்கும் செய்திகள் விடுத்திருக்கிறார். மக்களை ராணுவ ஆட்சிக்கு எதிராக அமைதியான முறையில் மறுப்புத் தெரிவிக்கச் சொல்கிறார். கான்ஸ்டான்டின் என்ற ஊருக்கு அருகே ஒரு சிற்றூரில் தனி வீட்டில் விடிவு காலத்தை எதிர் நோக்கிக் காத்திருக்கிறார். ஆயிரக் கணக்கான போலந்து பிரஜைகள் ரஷ்யாவுக்கும் செக்கோஸ்லவேகியாவுக்கும் நாடு கடத்தப் பட்டிருக்கின்றனர். அரசியல் கைதிகளாகச் சிலர் 'காம்ப்'களில் குளிரில் துடித்துச் சாக, அரசு இதை மறுக்க, வாடிகனில் போப் ஜான் பால், போலந்து மக்கள் தங்கள் பிரச்னைகளைத் தாங்களே தீர்த்துக்கொள்ள எல்லாம் வல்ல ஏகபிரானைப் பிரார்த்திக்கிறார்....

6. உலகத் தலைவர்கள் என்ன சொல்கிறார்கள்?

இத்தாலியக் காம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் என்ரிகோ பெர்லிகர், 'ரஷ்ய பாணி சோஷலிஸம் இன்றைக்குச் சற்றும் பொருத்தமில்லாதது என்பதைப் போலந்து நிரூபித்து விட்டது!' என்கிறார். ஸ்பானிஷ் கம்யூனிஸ்ட் தலைவர் சான்டியாகோ காரில்லோ, 'ராணுவ ஆட்சி அமைதிக்கே உலை வைக்கிறது!' என்கிறார். பிரெஞ்சு காம்யூனிஸ்ட் தலைவர் ஜியார்ஜஸ் மான்செய்ஸ், 'ஐய, இது ஒன்றும் பெரிசில்லை போலந்தின் உள்நாட்டு விவகாரம் தான்!' என்கிறார். அமெரிக்க ரேகன் விடுவாரா? ரஷ்யாவை மிரட்டுகிறமாதிரி போலந்துக்கு உணவு உதவியை நிறுத்தி விட்டார்!

நம்நாட்டு அசல் காம்யூனிஸ்ட்கள் (வலது–இடது), நாடாளு மன்றத்தில் சுதந்திரத் தொழிற்சங்கமான 'சாலிடாரிடி'யின் மீது முழுப் பழியையும் சுமத்தி, போலந்து ராணுவ அரசு செய்வதுதான் சரி என்று சான்றிதழ் வழங்கியிருக்கிறார்கள்!

7. விருது

1981ம் ஆண்டின் சிறந்த மனிதர் என்ற விருதை, சுதந்திரத் தொழிற் சங்கத் தலைவர் லெக் வலேசாவுக்கு 'டைம்' பத்திரிகை வழங்கியிருக்கிறது.

தின, வார இதழ்களிலிருந்து
செய்திகளின் தொகுப்பு: **சாருகேசி**
படங்கள் - நன்றி: **நியூஸ்வீக்**

ஆமை வென்றது!

1965-66 என்று நினைக்கிறேன். சென்னை லீக் போட்டிகளில் ஐந்தாவது டிவிஷன் விளையாட்டு, பி. எஸ். ஹைஸ்கூல் மைதானத்தில் நடந்தது. பர்மாஷெல் மற்றும் மர்க்கன்டைல் பாங்க் இடையே நடந்த போட்டி அது. பர்மா ஷெல் 13 பாயின்ட்கள் எடுத்து இருந்தது. எனவே அந்தப் போட்டியில் அது கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற நிலை. மர்கன்டைல் பாங்க்14 பாயிண்ட்கள் எனவே டிராவில் முடிந்தாலே போதும். பர்மா ஷெல் வெற்றி பெற்று விட்டால் பாங்க் லீகை விட்டு வெளியே தள்ளப்படும். டிராஆனால் ஷெல் வெளியே தள்ளப்படும். இந்த நிலையில் ஷெல் சுமார் 200 ரன்கள் எடுத்து ஆட்டத்தை டிக்ளேர் செய்தது. 4 மணி அளவில் பாங்க் 8 விக்கெட்களை இழந்து 78 ரன்கள் எடுத்துத் தோல்வியைத் தழுவத் தயாராக இருந்தபோது நான் பத்தாவது ஆட்டக்காரனாக மைதானத்தில் நுழைந்தேன். என்ன ஆச்சரியம்! அடுத்த ஒன்றரை மணி நேரம் என்ன நடந்தது என்றே தெரியாது. ஆட்டம் ஐந்தரை மணிக்கு முடிந்தபோது (ட்ரா) பாங்க் 8 விக்கெட்டுகளுக்கு 134 ரன்கள். மறு பக்கத்தில் இருந்த முருகன் மிகச் சிறப்பாக ஆடி 73 ரன்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தான். என்னுடையது நம்பினால் நம்புங்கள் ஒரே ஒரு ரன். ஆட்டம் முடிந்து திரும்பி வரும்போது முருகனை விட்டு எல்லோரும் என்னைச் சூழ்ந்து கொண்டு பாராட்டியது இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது. -சி. டி. ராதாகிருஷ்ணன்



தெய்வீக இசைத்தட்டுகளும் மியூசிக் காசெட்டுகளும் தூய தனுர் மாதத்திற்காகவே

சுப்ரபாதம்:

ஸ்ரீ வேங்கடேஸ்வர சுப்ரபாதம்
ஸ்ரீ காமாக்ஷி சுப்ரபாதம்
காசி ராமேஸ்வரம்-சுப்ரபாதம்
திருச்செந்தூர் ஸ்ரீ சுப்ரமணிய சுப்ரபாதம்
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சுப்ரபாதம்

ஸ்தோத்திரங்கள்:

பஜகோவிந்தம்
விஷ்ணு சகஸ்ரநாமம்
அஷ்ட லக்ஷ்மி ஸ்தோத்திரம்
பொன்மாரி-கனகதாரா ஸ்தோத்திரத்தின் தமிழாக்கம்
ஸ்ரீவஸ்துதி
ஸ்ரீ சங்கரஸ்தோத்திராவளி
மகிஷாசுரமர்த்தினி
லலிதா சகஸ்ரநாமம்
கனகதாரா ஸ்தோத்திரம்

அம்மன் பாடல்கள்:

துர்கா-லக்ஷ்மி-சரஸ்வதி
அபிராமி அந்தாதி
சௌந்தர்யலஹரி-இரண்டு பகுதிகள்
ஆண்டாள் கல்யாணம்
அம்மையப்பன் பாடல்கள்
திருப்பாவை
சக்தி பாடல்கள்
பாரமேக்காவில்
பகவதி ஸ்தோத்திரம்
சகலகலாவல்லி மாலை
பகவதி பாஞ்சகம்
லலிதாஷ்டகம், பகவதி ஸ்தோத்திரம்
அம்மன் பாடல்கள்
அம்மன்கோயில்களுக்கு யாத்திரை

முருகன் பாடல்கள்:

கந்தசஷ்டி கவசம்
திருவாசகம் சிவபுராணம்
தேவாரம், திருவாசகம்
மாலும் முருகனும்
முருகன் பாமாலை
கந்தன் அருளமுதம்
கந்தர் அலங்காரம்

ARIES HMV 872-TAM

EMI
HMV

சிறந்த கலைஞர்கள் — சிறந்த இசை

தி கிராமபோன் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

எல்லா அங்கீகாரம் பெற்ற எச்எம்வி வியாபாரிகளிடம் இசைத் தட்டுகளும் இசைக்காசெட்டுகளும் கிடைக்கும்.



● நாவலாசிரியர் லட்சுமியின் அட்டை வண்ணப் படம் மிகவும் மங்களகரமாக அமைந்ததோடு மட்டுமல்லாமல் எங்கள் வீட்டுக்கு அஷ்ட லட்சுமிகளும் வந்தது போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்தி விட்டது.
ஈரோடு-10 மேஜர் தாசன்

● நடுப்பக்க புத்தாண்டு காலண்டர் மேஜை மீது உள்ள கண்ணாடிக்கு அடியில் வைக்க அடக்கமாகவும், அழகாகவும் இருந்தது! ரொம்ப நன்றி சார்.
மதுரை நாகுவேலன்

● வெங்கடேசப் பெருமானுக்கு ஐஸ் வைச்சாச்சு வருஷ ஆரம்பத்தில். பார்ப்போம். பெருமானின் ஆசிகளோடு என்னென்ன புதுமைகள் செய்யப் போகிறீர்கள் என்று!
மதுரை-16 ஆர். வி. பிரசாத்

● திருப்பதியைப் பற்றி பி. ரங்கநாயகி கட்டுரை மூலம் வியத்தகு பல புதிய விஷயங்கள் அறிந்தோம். எல்லாவற்றையும் தந்தவர் ''ஜரகண்டி''யைக் குறிப்பிட்டுள்ளது பாராட்ட வேண்டியது.
பண்ருட்டி ஜி. வேதாசலம்

● திருமலை பற்றிய கட்டுரையில் ஒரு சாமானிய யாத்திரிகனின் கண்ணோட்டம் வெளிப்பட்டுள்ளது. ஆண்டவனின் சன்னிதியில் யாவரும் ஒன்று என்ற காலம் இந்தப் புது ஆண்டிலாவது மலரட்டும்.
விழுப்புரம் கே. எஸ். குமார்

● தாங்கள் எப்படித்தான் இவ்வளவு துணிச்சலாகத் தலையங்கம் எழுதினீர்கள் என்று பெரும் வியப்படைந்தேன்!
புன்னம்பாடி எஸ். ஆறுமுகம்

● யாரெல்லாமோ புது ஆண்டு உறுதி ஒன்றை எடுக்கிறார்களே, எம். ஜி. ஆர். வரும் ஆண்டிலாவது ''கருணாநிதியை மறந்து காரியங்களில் ஈடுபடுவேன்'' என்ற உறுதி எடுக்கக் கூடாதா?
கோவை மது நடராஜன்

● 'பொங்கல் மலர்', கிரிக்கெட் சிறப்பிதழாகவும் மலர்வதால், பொருத்தமாக 'சிக்ஸர்' அடிக்கிறீர்கள் போலும்! என்ன 'புரியவில்லையா?... ஒரே சிறப்பிதழில் 'ஆறு' தொடர்களை ஆரம்பிக்கிறீர்களே, அதைத்தான் சொல்கிறேன்!
சங்கரன்கோவில் டி. மணி

● தனிப்பட்ட மனிதர்கள் எடுத்துக்கொள்ளும் தீர்மானங்கள் நிறைவேறுகிறதோ இல்லையோ, சரித்திரம், இலக்கியம், நகைச்சுவை, ஆன்மீகம், சமூகம், மர்மம் என்று பல்சுவைத் தொடர்களையும் வாசகர்களுக்கு அளித்து வருவோம்' என்று கல்கி செயல்படுத்தி வரும் 'தீர்மானங்களின் சிறப்பை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை.
பெங்களூர்-5 அ. குமார்

● 'மாமி புதிர்' கன ஜோர். இரை மாமிகளைப் பற்றி 'நிஜ' மாமிகளுக்குச் சொன்னதற்கு மாமிகள் சார்பில் தாங்க்ஸ்!
சென்னை-63 சித்ரா ரவிசங்கர்

● நாட்டுக்கு மிகவும் முக்கியம் பாருங்கள் இந்த மடிசார் மாமி புதிர். பக்கங்களை வீணடிப்பதைக் கண்டிக்கிறோம்.
கும்பகோணம் பிரசன்ன ராஜன்

● மத்திய மந்திரி ஸ்டீபன் பாரதி நூற்றாண்டு விழாவை யொட்டி கவி பாரதிக்காக மற்றொரு தபால் தலை வெளியிட இயலாது. ஒரு நபருக்கு ஒரு தபால் தலைதான் வெளியிடமுடியும் என்று கூறியுள்ளார்.
வேறு பல தலைவர்கள், கவிஞர்கள்விஷயத்தில் கடைப்பிடிக்கப்படாத இந்த விதி முறை பாரதி விஷயத்தில் மட்டும் அமல்படுத்தப்படுவானேன்?
சென்னை-33 பி.எம். கிருஷ்ணசாமி

● கணவன் மனைவிக்குள் ஏற்படும் மனஸ்தாபங்கள் மொசைக் தரையில் கிடக்கும் தூசி போன்றது. அதைப் பிரிவு என்ற துடைப்பத்தால் அகற்றிய விதம் ''பொய்மை''யில் மிக நன்றாகச் சித்திரிக்கப்பட்டிருந்தது.
கும்பகோணம் கை. இராம மதி

● இந்திரா சௌந்திர ராஜன் எழுதிய 'பொன் மேனி' சிறுகதை தெய்வத்தின் சக்தியையும் தெய்வ நம்பிக்கையையும் பிசிறில்லாமல் அழகுற விளக்கியது. கதை நடை மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டியது.
கிருஷ்ணகிரி சி. சௌந்திரபாண்டியன்

அட்டையில்:
காப்டன் ஃபிளெட்சர்
காப்டன் காவஸ்கர்
வண்ணப்படம்: பாலாஜி

சித்த யோக ஆழ்நிலை தியானம்

சித்தயோகம் மற்றும் காஷ்மீர் சைவம் பற்றியும் ஒரு ஐந்து பாகங்கள் கொண்ட உரை. சென்னையில் 1982 ஜனவரி 18 தேதியிலிருந்து ஜனவரி 24ந் தேதிவரை நடைபெறவிருக்கிறது.

சுவாமி முக்தானந்தா பரமஹம்சா அவர்கள் தமது அகில உலக ஐந்து சீடர்களைச் சென்னை சித்த யோகத்துக்காக உரைகள் நிகழ்த்துவதற்கு அனுப்பி இருக்கிறார்கள்.

உரை	இடம்	தேதி, நேரம்
ஸ்வாமி நித்தியானந்தா on "The Power of the Self"	மஹேஸ்வரி பவன், மிண்ட் தெரு	18-1-82 6-15 PM
பிரதம விருந்தினர்: **N. கிருஷ்ணசுவாமி ரெட்டி,** ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி		
ஸ்வாமி கோபாலநந்தா on "Siddha Yoga – The Practice of Perfection"	பாரதீய வித்யா பவன், மைலாப்பூர்	19-1-82 6-15 PM
பிரதம விருந்தினர்: **திரு S. ஸ்ரீபால்,** போலீஸ் கமிஷனர்		
ஸ்வாமி மாதவாநந்தா on "Shakthi – The Power of Transformation"	Dr. டின்கார் ராவ் மெமோரியல் ஹால், ஆர்ம்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம்	20-1-82 6-15 PM
பிரதம விருந்தினர்: **Dr. T.M.P. மஹாதேவன்,** தத்துவப் பேராசிரியர்		
ஸ்வாமி சமதாநந்தா on "Towards Consciousness – The Mind & Beyond"	அயோத்யா மண்டபம் 47, ஆர்ய கௌடர் தெரு, மேற்கு மாம்பலம்	21-1-82 6-15 PM
பிரதம விருந்தினர்: **மேதகு நீதிபதி மஹேஸ்வரன்**		
சத்சங்	பவானி கல்யாண மண்டபம் நுங்கம்பாக்கம் ஹைரோடு	22-1-82 6-15 PM
பிரதம விருந்தினர்: **திரு C. சுப்பிரமணியம்,** தலைவர் பாரதீய வித்யா பவன், தென் பிராந்தியம்		

அனைவரும் வருக

ஆழ்நிலை தியானம்

at பவானி கல்யாண மண்டபம் 23 & 24 ஜனவரி 8-00AM to 6-30 PM
நுங்கம்பாக்கம் ஹைரோடு

ஆழ்நிலை தியானத்துக்கு அனுமதிக்கப்படுபவர்கள் வரிசை முறையாகப் பதிவு செய்து கொள்பவர்களே அனுமதிக்கப்படுவார்கள். மாணவர்கள் சலுகைக் கட்டணத்தில் அனுமதிக்கப்படுவார்கள்.

சித்த யோக தாம்

நெ. 4, IV சந்து நுங்கம்பாக்கம் ஹைரோடு,
சென்னை-600 034 போன்: 81960



டெஸ்ட் போட்டி – முடிவு!

▫ நாலாவது டெஸ்டின் தலைசிறந்த ஆட்டக்காரர் என்று யாருமே தேர்ந்தெடுக்கப்படாததால் அந்தக் கேள்வி ஒதுக்கப்பட்டது. மீதமுள்ள ஆறு கேள்விகளுக்கு நான்கு விடைகளைச் சரியாக எழுதி ரூ. 100 பரிசைப் பகிர்ந்து கொள்பவர்கள்:

1. நாகூஜி மானே
   நானியம்பாளையம் போஸ்டு
   தாராபுரம் தாலுக்கா
   பெரியார் மா. வ.
   638.656

2. கே. எஸ். ராஜு
   3. ஆறுவது கிராஸ்
   இலாரி ரோடு
   பெங்களூர் 560.053.

3. எஸ். சங்கமகேசுவரன்
   மே-பா. ஈ. பி. சுப்பிரமணியன்
   மேட்டூர் ரோடு 500....
   (விலாசம் பூர்த்தியாக இல்லை)

கிளிஞ்சல்கள்

● ஒரு பாதி பிரேமில் பட டைட்டிலும் பக்கத்தில் காதல் மகிமை கூறும் படங்களுமாய் எடுத்த எடுப்பிலேயே மார்கழிப் பனியின் குளிர்ச்சியுடன் படம் விடிகிறது.

அவளும் நோக்கினள்
அண்ணனும் நோக்கினன்
கூடவே
அடித்து நொறுக்க
அப்பனும் நோக்கினன்

என்ற மு. மேத்தாவின் கவிதைதான் படம். கிறிஸ்துவப் பெண், ஹிந்துப் பையன். மதங்களை மீறிய 'மதம்' பிடித்த காதல். வில்லன்களாய் அப்பாக்கள். அணில் உதவி செய்யும்நண்பர்கள். மனசைப்பிழியும் முடிவு. மரோ சரித்திராவும், அலைகளும் ஓயாமல் குட்டி போட்ட கதை. நோஞ்சான் குட்டியையும் போஷாக்காய் வளர்த்திருக்கிறார் துரை.

மோகன் ஆடுவதும் பயப்படுவதும் 50 சதம் கமல். சாந்தி கிருஷ்ணாவையும், சுஹாசினியையும் கலக்கினால் உருவாகும் – மலையாளத்தில் கொடி கட்டிப் பறக்கும் - பூர்ணிமா ஜெயராமன் தமிழில் பலமாய் அஸ்திவாரம் அமைத்திருக்கிறார். கொடி இனி உயரும். காதலன் உதைபட வீட்டுக்குள் தடுக்க இயலாமல் தவிக்கும் பூர்ணிமா உள்ளங்கையில் ஆணியை அடித்துக் கொள்கையில் ரத்தத்துடன் சுத்தமான காதலும் தெறிக்கிறது.

காதலுக்கு பயோடேட்டா, சிம்பாலிக்காய் காதலுரைத்தல் என்று படம் பூரா இளமை இஷ்டத்துக்கு ஊஞ்சலாடுகிறது. 'கட்' பண்ண முடியாவண்ணம் உதட்டோடு உதடாக நேரான முத்தம் பதிக்கிறார்கள். அதிகமாய்ப் பேசினாலும் மனனில் நிற்கும் பக்கத்து வீட்டுக் குட்டிப் பையன். கொஞ்சமாய் வந்தாலும் கலகலப்பூட்டும் துருதுருப்பான ஸ்நேகிதப் பெண்கள்.

பாடல் எழுதி இசைத்திருக்கும் ராஜேந்தர் 'இளை'க்கவில்லை. மனோகரமாய்க் காட்சிகளைக்கவர்ந்து படம் பூராபோர்தட்டிப்போகிறவர் கேமராமேன் மனோகர். மழை கனவு காட்சிகளும் பின்புலத்தில் கூட்ஸ் டிரெயின் காட்சிகளும் கண்ணுக்குச் சுகம்.

அண்ணன் (இலீப்) தங்கை பேச்சுகளும் அப்பாவுடன் வாதங்களும் நாட்டுநடப்புகள்.

புதுமைக் கதைகளைத் தொட்டுக் கையைக் கடித்துக் கொள்வதை விட பழசை அரைப்பதே நலம் என்று முடிவு பண்ணி விட்டார் துரை.

-நளினி சாஸ்திரி

ஸ்கோர் போர்டு

பூர்ணிமாஜெயராமன்	(நாட் அவுட்)–	101
மோகன்	(எல்.பி.டபிள்யூ)—	49
கேமரா மனோகர்	(நாட் அவுட்)—	80
டி. ராஜேந்தர்	(ஹிட் அவுட்)—	40
துரை	(ஹிட் அவுட்)—	59
3 விக்கட் நஷ்டத்துக்கு ரன்கள்		329





Whereas Mr. Francis Day, captain of the English at Armagon, upon great hopes by reason of our promises often made unto him hath repaired to our port of Medras patam, we out of our spetiall love and favour to the English doe grant unto the said captain by vertue of this firman power to direct and order the building of a Fort and castle in or about Medras patam.

-தாமர்ல வெங்கடபதி நாயகர்



சுவர்ணமுகி

ஸ்ரீ வேணுகோபாலன்

42

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள் சுவர்ணமுகி.

''என் கணிப்புப்படி சாம் ராஜ்யம் இனி நிலை நிற்காது. அதன் மரணப் படுக்கை இப்போது...''

''என்றாலும் அதை உணர முடிகிறது. ஆனால் நான் செய்ய வேண்டிய கடமை இருக்கிறது அல்லவா?''

''ராஜ்யத்துக்குச் செய்ய வேண்டிய கடமையை இனிக் கடமையாக நினைக்காதீர்கள். மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை நினையுங்கள்!''

''என் தந்தை எனக்கு விடுத்த வேண்டுகோள்....''

''அவர்கூட இப்போது இருந்தால் இந்த உளுத்துப் போகும் ராஜ்யத்துக்கு இனிப் பாடுபட மாட்டார்....''

''அப்படியா சொல்கிறீர்கள்?''

''ஆமாம். நான் தங்கள் வளர்ப்புத் தந்தை ரங்கப்பாவுக்கு மிகவும் பரிச்சய மானவன். நீங்கள் யார் என்பதை அவர் எனக்கு வெகு காலத்துக்கு முன்னமேயே தெரிவித்திருக்கிறார். அர்ச்சுனனுக்கு எல்லாம் முன்னமேயே எனக்குக் கூறியிருக்கிறார். அவ்வளவு அந்தரங்கமானவன் நான். அவர் கூட என் விருப்பத்தைத் தான் ஏற்றுக்கொண்டார். இப்போது இருக்கும் நிலையில் இந்த விஜயநகர சாம் ராஜ்யம் இன்னும் சில வருடங்களுக்கு மேல் தேறாது. அவரும் இதை உணர்ந்ததன் காரணமாகத் தான் தங்களை வெளியே யாரிடமும் காட்டிக்கொள்ளவில்லை. தங்களைத் தங்கள் உண்மைத் தந்தையின் வேண்டுகோளிலிருந்து விலக்கி, ஒரு சாதாரணப் பிரஜையாக மாற்றி யாருக்காவது திருமணம் செய்து விட வேண்டுமென்று அவர் அப்போதே நினைத்திருந்தார். ஆனால் சந்தர்ப்பங்கள் வஞ்சித்து விட்டன. சுவர்ணமுகியின் நெஞ்சம் விம்மியது.

''அவர் அப்படியா நினைத்தார்?'' என்றாள் சந்தேகம் தொனிக்க.

''ஆமாம் இளவரசி! அப்படித்தான் நினைத்தார். அவர் இறந்த பின் நடந்த சம்பவங்கள் அதை மெய்ப்பித்து விட்டன.''

''ஐயா! அப்படியானால் இனி இந்த ராஜ்யத்துக்குப் பாடுபட்டுப் பிரயோசனம் இல்லையா?''

''இனிமேல் இல்லை. காலம் மாறிவிட்டது. எப்போது மேற்கத்திய வெள்ளையர்கள் வரத் தொடங்கிவிட்டார்களோ, அப்போதிருந்தே இங்கே தங்கியிருந்த பழங்காலம் இனி மாறத்தொடங்க வேண்டியதுதான். ரொம்ப காலம் நீங்கள் உலகத் தொடர்பு இல்லாது இருந்து விட்டீர்கள்.''

சுவர்ணமுகிக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. அவள் மனத்தில் தேங்கி நின்ற ஒரு கனம் திடீரென்று கரைவது போல் இருந்தது. ராஜ்யம், நாடு, தேசம் என்று நினைப்பது கூடச் சில சந்தர்ப்பங்களில் அர்த்தமில்லாமல் போய்விடக் கூடும் என்பதை முதன் முதலாக உணர்ந்தாள்.

நாடே நிலைத்திருக்க முடியாத நிலையில் நாட்டுக்குவேண்டிய கடமையை நிறைவேற்றுவதில் யாருக்கு என்ன லாபம்?

''ராஜா! தாங்கள் கூறியது எனக்குப் புதுக் கண்களைத் திறந்தாற்போல் இருக்கிறதே! இப்போது சொல்லுங்கள்! நான் இந்தப் பந்தங்களிலிருந்து விடுதலை பெற்று எங்கேயாவது போய்விடட்டுமா?''

''உங்களுக்குத் துணிவிருந்தால் நான் அதற்கு ஆதரவு தருவேன்'' என்றான் அவன்.

சுவர்ணமுகி பின்னர் மலை மேல் போகவே இல்லை.

அவள் மனத்திலிருந்து பாரம் இறங்கியது போலத் தோன்றியதால் ஐவர் குழுவையும் மீறிக் கீழே இறங்கினாள்.

ஓர் இடத்தில் நின்று, ''பொக்கிஷம் இருக்கும் ஓலை இதோ!'' என்று சொல்லி ஓலையை எடுத்துத் தூள் தூளாக்கிக் காற்றில் பறக்க விட்டாள்.

பிறகு அவள் விரைவாகக் கீழே இறங்கத் தொடங்க மற்ற யாவரும் பின்தொடர்ந்தார்கள்.

பாதி தூரம் இறங்கி இருக்க மாட்டாள். கீழே இருந்து ஒரு பெரிய கோஷ்டி சோமப்பர் தலைமையில் பூஜை, திரவியங்களோடு மேலே வந்துகொண்டிருந்தது.

எதிரே வரும் சுவர்ணமுகியைக் கண்டு சோமப்பர், ''ராணி! பொக்கிஷத்தைக் கண்டு பிடித்து விட்டீர்களா?'' என்று கேட்டார்.

''பொக்கிஷம்! ஆமாம் கண்டு கொண்டேன். என் இதயத்தின் மீதுள்ள பாறை விலகியவுடன் என் உள்ளே இருக்கும் அமுதமான பொக்கிஷத்தைக் கண்டு கொண்டேன். என் நினைவு, எண்ணம், விருப்பம், ஆசை, இவை எல்லாமே என் பொக்கிஷங்கள். இவற்றைச் சுதந்திரமாக நான் எங்கே பறக்க விட முடிகிறதோ அந்த இடத்தான் எனக்கு சுவர்க்க பூமி'' என்றுசொல்லி மேலே போகப் பார்க்க,

சோமப்பரின் ஆட்கள் அவளை வழி மறைத்தார்கள்.

''ராஜ கட்டளையைத் தாங்கள் மீறுகிறீர்கள்'' என்றார் சோமப்பர் கோபமாக.

''ராஜா யார்? ராஜ்யம் எங்கே இருக்கிறது? வெறும் கானலாக எதையோ இந்த இருபது வருடங்களாகத் தேடித் திரிகிறோமே! அது வீண் முயற்சிதானே?'' என்றாள் அவள். பிறகு, ''வழி விடு'' என்க, மற்றவர்கள் விடாமல் தடுத்தார்கள். ஒரு கலவரம் மூளும் நிலை அங்கே ஏற்பட்டது.

அப்போது அவளைக் கூர்ந்து நோக்கிக் கொண்டு தாடிக்காரர் மெல்ல நடையிட்டு வந்தார்.

அவளை ஆழ்ந்து பார்த்தார்.

பக்கத்தில் ராஜாவையும் பார்த்தார்.

''ராஜா! உங்கள் மேல் நாட்டு எண்ணங்களை இவள் மனத்தில் பதித்து விட்டீர்களா?'' என்று மென்மையாகக் கேட்டார்.

சுவர்ணமுகி அருகில் வந்தார். ''அம்மா சுவர்ணமுகி! உன் இதயம் எனக்குத் தெரியும். ஆனால் அது நஷ்டமாகி விட்டது!'' என்றார்.

அவர் கண்களில் நீர் பதிந்திருந்தது.

''என்ன சொல்கிறீர்கள் பெரியவரே?''

''உனக்குச் சுதந்திர உணர்வு வந்தது எல்லாம் அந்த அர்ச்சுனனுடன் சேர்ந்துஎங்கேயாவது போய்விட வேண்டும் என்றுநினைப்பதுதானே?'' என்றார் அவர்.

''ஆமாம்!'' என்றாள் அவள்.

''எங்கே அவர்! அர்ச்சுனன் எங்கே?'' என்றாள் ஆவலோடு.

பெரியவர் இரக்கமுடன் விழித்தார். ''அது தானம்மா சொன்னேன்! எல்லாம் நஷ்டமாகி விட்டது!'' என்று.



''நீங்கள் என்ன சொல்கிறீர்கள் பெரியவரே!'' என்றாள் அவள்.

அவர் இரு சேவகர்களைக் கைகாட்டினார்.

அவர்கள் வந்தார்கள். அவர்கள் கைகளில் பெரிய மூடிய தட்டுகள் இருந்தன.

''திறந்து காட்டு'' என்றார் பெரியவர்.

திறந்தார்கள்.

சுவர்ணமுகியின் கண்கள் அவை மீது பட்டு ஒரு நொடியில் கோரமாக மாறின.

முகம் கோணலாகக் கிழிந்தது. திறந்த வாயில் கைகளை வைத்துத் திணறினாள் அவள். 'ஆ!' என்று அந்த மலைப் பிரதேசம் முழுதும் கிடுகிடுக்கும் சத்தம் அவள் வாயினின்றும் கிளம்பிக் கொடூரஇறக்கைகளுடன் பறந்தது.

தட்டுக்களில் வெட்டப்பட்ட இரு தலைகள் இருந்தன. ஒரு தலை பெண்ணுடையது! இன்னொன்று ஆணுடையது.

பெண் ஏற்கனவே நர பலிக்கு விதிக்கப் பட்டிருந்த பெண்தான்.

ஆனால் ஆண்?

கண்ணை மூடிய அந்தக் கம்பீர முகம் யாருடையது?

சாந்தியான களையுடன் யோக நிலை எய்திய தோற்றமாக விளங்கிய அந்த இள முகம் யாருடையது?

அர்ச்சுனன் முகம்தான் அது!

வேங்கட மகாராஜாவின் கட்டளையும் வேண்டுகோளும் அது என்று சொல்லி அவனால்தான் பொக்கிஷம் கிடைத்து நாடு சுபிட்சமாக வேண்டும் என்று எத்தனையோ காரண காரியங்களைக் கூறி ஒரு பூமிக்கு அரசராக விளங்கிய (நாராயணவனம்) அவனது ரத்தம்தான் நரபலிக்கு வேண்டும் என்று வேலூர் நாயகர் முந்திய நாள் இரவே வந்து அவனது நெஞ்சைக் கரைத்திருந்தார்.

அர்ச்சுனனும் தனது ஒருவனது தியாகத்தால் நாடு பழைய நல்ல தசைக்கு வருவதானால் வரட்டும் என்று தீர்மானித்து அந்த உன்னத உத்தமமான காரியத்துக்கு இணங்கி விட்டான்.

அதன் மூலம் சுவர்ணமுகியும், தன் பரிசம் நடந்த பிரகாரம் வேங்கட மகாராஜாவோடு வாழ்ந்து நல்ல எதிர்காலத்தைப் பார்ப்பதுடன், அவனது தந்தை அவனிடம் ஓலை மூலம் விடுத்த வேண்டுகோளை நிறைவேற்றுவாள் என்று தீர்மானித்தான்.

அவன்கடைசியாக எழுதிய ஒரே நறுக்கு ஓலை 'சுவர்ணமுகி விடை கொடு!'என்பதுதான்.

ஆனால்அந்த ஓலையைச் சுவர்ணமுகி வாசிக்கப் போவதேயில்லை.

ஏனெனில் அர்ச்சுனனது சிரசைப் பார்த்த அதே கணத்திலிருந்து அவள் சித்தப் பிரமை கொண்டு விட்டாள்.

ட்ரேக் ராஜர் மூலம் அவள் மனத்தில் பற்றிய சுதந்திர உணர்ச்சி சிறிது நேரத்துக் குள்ளேயே நிரந்தரமாக அழிந்து விட்டது.

மலை மத்தியில் இவ்வளவு பெரிய கோர சம்பவம் நடந்ததைப்பார்த்துச் சோமப்பரும் இதரரும் திகைத்து நிற்க,

''போங்கள், போங்கள்'' சுவர்ணமுகி பொக்கிஷ ஓலையையும் கிழித்துத் தூரப் போட்டுவிட்டாள். அவள் அறிவும் பேதலித்து விட்டது. இனி எல்லோரும் திரும்புங்கள்!'' என்றார் அந்தப் பெரியவர்.

எல்லோரும் கூடிச் சிறிது நேரம் நின்று ஆலோசித்துவிட்டுக் கீழே இறங்கத்தொடங்கினார்கள்.

கீழே வந்ததும் எங்கும் சோகம் கவ்வி நிற்க,

பெரியவர் ட்ரேக் ராஜரை அழைத்தார்.

ராஜர் அவர் அருகில் வந்து, ''பெரியவரே! சுவர்ணமுகியை நான் என் காதலி எஸ்மரல்டாவுக்கு ஒப்பாக நினைத்தவன். என் இதயத்தில் அவளும் என்றும் வீற்றிருப்பாள். நான் அவளுக்கு அன்னியன்தான். அன்னியமாக இருந்தே அவளைப் பூஜிப்பேன். அவளுக்கு உண்டானபணிவிடைகளைச்செய்வேன். என்னுடன் அவளை அழைத்துச் செல்ல அனுமதி தாருங்கள்!'' என்றான்.

''நானும் அதைத்தான் நினைத்தேன்'' என்றார் பெரியவர்.

பிறகு அவர் தமது வேஷத்தைக் கலைத்துத் தாம் தாமர்ல வேங்கடப்பா என்பதைக் காண்பித்து, ''எல்லாம் இந்த வேலூர் நாயகரின் சூழ்ச்சியால்தான் இவ்வளவு சோகங்களும் நிகழ்ந்து விட்டன. இன்னும் அவர் என்னென்ன செய்ய இருக்கின்றாரோ! நல்லவேளை! பொக்கிஷம் அவர் கையில் போகாததற்கு மிக்க மகிழ்ச்சியாகிறேன்!'' என்றார் அவர்.

ட்ரேக் ராஜர் சுவர்ணமுகியைச் சிறிது காலம் மசூலிப்பட்டணத்தில் வைத்திருந்தான்.

பிறகு ஆர்மகானுக்குக் கொணர்ந்தான்.

பின்னர் பிரான்ஸிஸ் டேயும், ராஜரும் திருவல்லிக்கேணி அருகில் உள்ள சிறிய பிரதேசத்தைத் தங்கள் குடியிருப்புக்காகக் கிரயத்துக்குச் சாசனம் பண்ணித் தரச் சொல்ல,

தாமர்ல வேங்கடப்பா தமது ஆணைக் குட்பட்டிருந்த அந்தப் பிரதேசத்தை மனமுவந்து சாசனம் பண்ணிக் கொடுத்தார்.

அப்படிச் செய்யும்போது அவர் மனத்தில் சுவர்ணமுகியின் சுகமே முதன்மையாக நின்றாலும்,

பிற்காலத்தில் ஒரு குழப்ப நிலையிலிருந்து இந்த நாட்டைக் காப்பாற்றக் கூடிய சக்தி இந்த வெள்ளை இனத்தவருக்கு இருக்கலாம் என்ற நம்பிக்கையும் சேர்ந்து கொண்டது.

அந்த சாசனப் பிரதேசமான சென்னைப் பட்டணத்தில் ட்ரேக் ராஜர் சுவர்ணமுகியைக் கண்ணும் கருத்துமாகக் கடைசி வரை பாதுகாத்து வந்தான் என்பதில் ஐயமில்லை.

சுவர்ணமுகி வாழ்ந்த அந்தப் பிரதேசம் வழியாகத்தான் மனித மனங்களின் சுதந்திரம், விடுதலை போன்ற தற்கால மேனாட்டு எண்ணங்கள் நமது நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்டது என்பது மிகையாகாது.

சென்னை தோன்றியதன் மூலம் ஒரு பிரிட்டிஷ் ஆட்சிக்கு அது வழி வகுத்துக் கொடுத்தாலும் பின்னர் எண்ணச் சுதந்திரம், செயல் சுதந்திரம் இரண்டும் பெற அது பெரிதும் உதவியதுஎன்பதுநிச்சயமாகப்போய்விட்டது.

சொல்லப் போனால் தியாகதுர்க்க மலையில் சுவர்ணமுகி கண்ட ஒருவித சுதந்திரக் கனவே பின்னர் நனவாக நிறைவேறிவிட்டது.

முற்றும்



நம்பிக்கைக்குரியது...

மிகவும் நம்பிக்கைக்குரிய-ஆட்டக்குழுவின் தலைவர், சோதனைக்கட்டங்களிலும் கப்பலை இயக்கிச் செல்லும் மாலுமி போன்று, தனது குழுவினரை இயக்கி வெற்றி கொள்கிறார். பாங்க் ஆப் தஞ்சாவூர் நம்பிக்கைக்குரியதே-80 ஆண்டுகளுக்கு மேலாக கோடிகணக்கான வாடிக்கையாளர்களை இக்கட்டான பொருளாதார காலங்களிலும் கூட சுபிட்ச பாதையில் இயக்கி உதவிவந்துள்ளது. எவ்வித பிரதிபலனும் எதிர்பாராது பொருளாதாரம் பற்றி ஆலோசனைகளையும் மற்றும் எல்லா விதமான வங்கி சலுகைகளையும், நாங்கள் அளிக்கிறோம். உங்களது யாதொரு பிரச்சினைகள் பற்றி விவாதிக்க அருகாமையிலுள்ள எங்களது ஏதாவது ஒரு கிளையினை அணுகவும்.

நம்பிக்கைக்குரிய கிரிக்கெட் குழுவின்
தலைவரைப் போன்றே
பாங்க் ஆப் தஞ்சாவூர் உங்கள்
நம்பிக்கைக்கு பாத்திரமானது

SERVICE · SECURITY · STABILITY
ESTD 1901

பாங்க் ஆப் தஞ்சாவூர் லிட்



பதிவு பெற்ற அலுவலகம் :
1087, மிஷன் தெரு, தஞ்சாவூர்-613 001
(தமிழ்நாடு)

R. சொக்கப்பா • B.K. மாதவன்
ஜெனரல் மானேஜர் சேர்மன்

பாரதி இலக்கியத்தில்



பாஞ்சாலி சபதம்

ம.பொ.சி

துவாரகைவாசியான பரந்தாமன் துட்டர்களை அழித்த நிகழ்ச்சிகளையெல்லாம் முறையாகச் சொல்லிவிட்டு,

''வையகங் காத்திடுவாய் — கண்ணா!
மணிவண்ணா என்றன் மனச் சுடரே!
ஐய நின் பதமலரே — சரண்!
ஹரி, ஹரி, ஹரி, ஹரி, ஹரி''

என்றாள் பாஞ்சாலி.

அந்நேரத்திலே கண்ணன் அருள் செய்தான். துச்சாதனன் இழுக்க, இழுக்கத் துகில் வளர்ந்தது!

பொய்யர் தம் துயரினைப் போல் புடவைக்கு மேல் புடவையாக வளர்ந்தன! புண்ணியவான்கள் தம் புகழினைப் போல் சேலைக்கு மேல் சேலையாக வளர்ந்தன! கடலிலே அடுத்தடுத்து எழும் அலைகளைப் போல் பாஞ்சாலிக்குப் புடவைக்கு மேல் புடவையாக வளர்ந்தன!

''கண்ணபிரானருளால் — தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணி புதிதாய்
வண்ணப் பொற் சேலைகளாம் — அவை
வளர்ந்தன வளர்ந்தன வளர்ந்தனவே!
எண்ணத்தி லடங்காவே — அவை
எத்தனை எத்தனை நிறத்தனவோ!''

அரசவையிலிருந்த வீட்டுமப் பெரியோன் ஆனந்தப் பரவசனாகி எழுந்து நின்று, 'ஓம் ஜெய ஜெய பாரத சக்தி' என்று கைதொழுது கோஷித்தான். அவையிலிருந்த அரசர்களெல்லாம், 'ஓம் சக்தி சக்தி, சக்தி' என்று சொல்லிக் கரம் குவித்தார்கள்.

அரவக் கொடியோன் துரியோதனன் தலை கவிழ்ந்தான்!

கண்ணபிரானால் திரௌபதியின் மானம் காக்கப்பட்டதிலே பெரியோர்களான பீஷ்மரும், துரோணரும், துரியோதனன் அவையிலிருந்தமற்றசான்றோரும் மகிழ்ச்சியடைந்தனரென்றாலும், பாண்டவருக்கு மகிழ்ச்சியில்லை. திரௌபதியை அவமதித்த துரியோதனாதியரைப் பழிவாங்க அவர்கள் துடித்தனர். வீமனுடைய உள்ளம் கொதிப்புற்றது.

''கோபத்தால் அவனுடைய உடலில் மயிர்க்கால் தோறும் நெருப்புப் பொறிகள் வெளிப்பட்டன'' என்று வருணிக்கிறார் வியாசர்.

துரியோதனன் பாஞ்சாலி துகிலுரியப்படுவதற்கு முன்னர் தன் தொடையை மறைத்திருந்த ஆடையை விலக்கித் தொடையைக் காட்டி, அங்கு வந்து அமருமாறு அவளை அழைத்தான். இதனை அவன் அடிக்கடி செய்தானாம்.

இந்த அசிங்கமான நிகழ்ச்சி வீமனுடைய நெஞ்சைப் புண்படுத்தி விட்டதனால் இதைச் சொல்லியே சபதம் செய்கிறான்.

ஆண்மையிலாத்துரியோதனன் தன்னை,
பேணும் பெருங்கன லொத்தான் எங்கள்
பெண்டு திரௌபதியைத் தொடை மீதில்
நாணின்றி ''வந்திரு''வென்றான் — இந்த
நாய்மகனாந் துரியோதனன் தன்னை
மாணற்ற மன்னர்கண் முன்னே — எந்தன்
வன்மையினால் யுத்த ரங்கத்தின் கண்ணே
தொடையைப் பிளந்துயிர் மாய்ப்பேன்!''

வீமன் தன் பங்குக்குத் துரியோதனனையும் துச்சாதனனையும் எடுத்துக் கொண்டானென்றால், பார்த்தனானவன் தன் பங்குக்குக் கர்ணனை எடுத்துக் கொண்டான். ஆம்; போர்க்களத்தில் பழி வாங்குவதற்கு!


அடுத்து மகாபாரதக் காப்பியத்தின் நாயகியான பாஞ்சாலியும் சபத மெடுக்கிறாள். இதோ, அவளுடைய சபத மொழி:

—''ஓம்
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்;
பாவி துச்சாதனன் செந்நீர், — அந்தப்
பாழ்த் துரியோதனன் ஆக்கை யிரத்தம்,
மேவி இரண்டும் கலந்து — குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல் முடிப்பேன் யான்; — இது
செய்யு முன்னே முடியேன்''..

வீமனும் பார்த்தனும் பாஞ்சாலியும் சபதம் எடுத்த பின்னர் ''அறத்துக்குத் தெய்வம் தருமன்தான்'' என்று பூதங்கள் ஐந்தும் சாட்சி கூறியதை விவரித்து, ''நாமும் கதையை முடித்தோம்'' என்று சொல்வதோடு நால்வகைப்பட்ட நிலமும் நல் இன்பமுற்று வாழ்க!'' என்றும் கூறி பாரதியார் வாழ்த்துகின்றார்:

''ஓமென் றுரைத்தனர் தேவர்; ஓம்
ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்
பூமிய திர்ச்சியுண் டாச்சு — விண்ணைப்
பூழிப்படுத்தியதாஞ் சுழற்காற்று
சாமி தருமன் புவிக்கே — என்று
சாக்ஷி யுரைத்தன பூதங்க ளைந்தும்
நாமும் கதையை முடித்தோம் — இந்த
நானில முற்றுநல் லின்பத்தில் வாழ்க!''

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press ,Race Course Road Guindy. Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: P.S. Mani, Layout Artist: Kalpana, Editor: K. Rajendran


தனித்தன்மை வாய்ந்த
இவரது தணியாத விருப்பம்
'ப்ளெயின்' ஷர்ட்டிங் மட்டும் அணிவதே
அதாவது மஃபத்லால் வழங்கும்
பாலியெஸ்டர் மற்றும் பாலியெஸ்டர்
ப்ளெண்டுகளின் ஷர்ட்டிங்.
அவருக்கென ஒரு தனி பாணி, தனி ரசனை.
பழைமைசாற்றமாட்டார், என்றும் பவ்வியமாக இருப்பார்.
தனக்கே உரிய தனித் தோற்றத்தை வலியுறுத்துவார்.
மஃபத்லால்
ஷர்ட்டிங்
MF-124-TAM

REGISTERED No. M. 4382
Registered as a Newspaper in Sri Lanka



daCunha/NICL/3/81-TM